REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஒக்டோபர் 10 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்
வரு. 92 இல. 242 | Thursday 10, October, 2024 | 16பக்கங்கள் | 50/-




## நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

# மன்னார் மனித புதைகுழி 'ஸ்கேன்' செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்

**மன்னார் குறூப் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்**



மன்னார் நகர மையப் பகுதியில் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ச.தொ.ச மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் இவ்வாரம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக தடயப் பொருட்களை பிரித்தெடுக்கும் நடவடிக்கை மற்றும் புதைகுழியை சூழவுள்ள பகுதியை ஸ்கேன் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக மன்னார் ச.தொ.ச வளாகத்துக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்திருந்த பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டடம் அமைந்துள்ள பகுதியிலும், அகழ்வுப் பணிகள் நேற்று (09) முதல் நடைபெற்று வருகின்றன. இருப்பினும் அகழ்வுப் பணி தொடர்பான செயற்பாடுகளையோ, ஸ்கேன் செயற்பாடுகளையோ புகைப்படம் எடுக்கவோ, காணொளியாக பதிவு செய்யவோ மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

முன்னதாகவே ச.தொ.ச மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் பற்றி செய்தி சேகரிக்க பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தினூடாக அகழ்வுப் பணி தொடர்பான உண்மையான விடயங்களை அறிக்கையிடவும் அகழ்வு செயற்பாடுகளை ஆவணப்படுத்தவும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது அகழ்வு பணியையோ அல்லது புதைகுழி தொடர்பிலான ஏனையசெயற்பாடுகளையோ காணொளியோ புகைப்படமே எடுக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அகழ்வு தொடர்பிலும், புதைகுழி வழக்கு தொடர்பிலான செயற்பாடுகள் தொடர்பிலும் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக ஆஜராகும் சட்டத்தரணிகள் குரல் பதிவுகளை வழங்க மறுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

---

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

## இழப்பீட்டு தொகையாக 31,10,00,000 ரூபா வரவு

### 6,23,45,502 ரூபா நிவாரணமாக விநியோகம்




ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, இதுவரை மொத்தம் 31 கோடியே 10 இலட்சம் ரூபா குறித்த அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட நிதியில், இதுவரை 6,23,45,502 ரூபா பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது. ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென, 2023 ஜனவரி 12 இல், உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய இந்நிதி கிடைக்கப்பெற்றது.

பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளின் பிரகாரம், இந்த நிதி வழங்கப்பட்டு வருகிறது. மொத்த தொகையான 06

---

## மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக்கால தடை உத்தரவு

### வழக்கை ஒரு தலைப்பட்சமாக விசாரிக்கவும் தீர்மானம்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர், செயலாளர் மற்றும் தேசிய அமைப்பாளர் பதவிகளுக்கு புதிய பொறுப்பாளர்களை நியமிப்பதற்கு, கட்சியின் செயற்குழு எடுத்த தீர்மானங்களை அமுலாக்குவதை தடுக்கும் வகையில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட கட்சி பிரதிநிதிகளுக்கு இடைக்கால தடை உத்தரவை கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி சந்துன்விதான நேற்று (09) பிறப்பித்தார்.

இதுதொடர்பான வழக்கை ஒருதலைபட்சமாக விசாரிக்கவும் அவர்,உத்தரவு பிறப்பித்தார்.

மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதாலும், பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணிகள் விடயங்களை முன்வைக்கத் தவறியதாலும், வழக்கை இவ்வாறு ஒருதலைப்பட்சமாக 06

---

## அல்குர்ஆன் அவமதிப்பு வழக்கு; ஞானசார தேரருக்கு பிடியாணை

### வழக்கு 2025 மார்ச் 05 க்கு ஒத்திவைப்பு



பொதுபல சேனா பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பிடியாணை பிறப்பிக்குமாறு, கோட்டை நீதவான் தனுஜா லக்மாலி நேற்று (09) உத்தரவிட்டார்.

2014 ஆம் ஆண்டு கொழும்பு ஹோட்டலொன்றில் தேசிய படை அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், முஸ்லிம்களின் புனித அல் குர்ஆனை அவமதித்தமை தொடர்பான வழக்கில் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததற்காக இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்காக கொம்பனி வீதி பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜராகினர். விசாரணை அடுத்த வருடம் மார்ச் 05 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

## வைத்தியர் அர்ச்சுனா பிணையில் விடுதலை



**கோப்பாய் குறூப் நிருபர்**

பிணை நிபந்தனைகளை மீற மாட்டேனென உறுதியளித்ததையடுத்து, சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தினால் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா பிணையில் விடுவிக்கப்பட்டார் .

யாழ்ப்பாணம் சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா, தொலைபேசியில் சக வைத்தியர்களை அச்சுறுத்தியமை, சமூக ஊடகங்களில் அவதூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றங்களுக்காக, சாவகச்சேரி 06

---

## நுவரெலியா தபால் கட்டம் தபால் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு மட்டுமே



### இதுவரை மேற்கொண்ட அனைத்து தீர்மானங்களும் இரத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெரும் சர்ச்சைக்குரியதாக மாறியிருந்த 130 வருட கால வரலாற்றைக் கொண்ட நுவரெலியா தபால் நிலைய கட்டடம் தொடர்பில், இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களையும் இடைநிறுத்துவதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா தபால் நிலையம் மற்றும் அந்த கட்டடம் அமைந்துள்ள வளாகம் என்பவை தபால் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். 150ஆவது உலக தபால் தினத்தையொட்டி அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில், இது தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போதே அமைச்சர் 06

---

## 'ஐக்கிய ஜனநாயகக் குரல்' புதிய அரசியல் கட்சி உதயம்

### தலைவராக ரஞ்சன் ராமநாயக்க களத்தில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



"ஐக்கிய ஜனநாயகக் குரல்" என்னும் புதிய அரசியல் கட்சி நேற்று பிரபல சிங்களத் திரைப்பட நடிகரும் முன்னாள் பிரதியமைச்சருமான ரஞ்சன் ராமநாயக்கவின் தலைமையில் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று புதிய கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாட்டின் இரண்டு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் இக்கட்சி போட்டியிடவுள்ளது. கட்சியின் தலைவராக முன்னாள் பிரதி யமைச்சர் நடிகர் ரஞ்சன் ராமநாயக்கவும் தேசிய அமைப்பாளராக முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணித்தலைவர் திலகரத்ன டில்ஷானும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், மேற்படி கட்சி தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது. முன்னாள் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ், இலங்கை கிரிக்கெட் 06

---

## தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்கு எட்டு நாடுகளுக்கு அழைப்பு



பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக எட்டு நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரட்நாயக்கா தெரிவிக்கையில், இந்த கண்காணிப்பாளர்கள் பிராந்திய நாடுகள் மற்றும் ரஷ்யாவிலிருந்தும் வரவுள்ளதாக தெரிவித்தார்.

பொது நலவாய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் இந்தப் பணிக்காக வருவார்களென, எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இவர்களுக்கு மேலதிகமாக பொதுத் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக, தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பின் தொண்டர்களும் வரவிருப்பதாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரட்நாயக்கா மேலும் தெரிவித்தார்.

---

## நிலந்த ஜயவர்தனவுக்கு எதிரான மனு ஒத்திவைப்பு



அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை, எதிர்வரும் நவம்பர் மாதம் (13) விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (09) தீர்மானித்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொள்வதற்கு முன்னர், அது குறித்து புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதிலும் அதனை தடுக்க நடவடிக்கை எடுக்கத்தவறியதற்காக இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் மகேன் கோபல்லவ ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில், இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 06

---

## லெபனானில் போர் பதற்றம்: இலங்கையருக்கு விசேட அறிவிப்பு

### தூதரகத்தில் பதியவும் நிவாரணக் காலம்

லெபனானிலுள்ள இலங்கையருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்வதற்கு விசேட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

லெபனானின் தற்போதைய இராணுவ நிலைமையை கருத்திற்கொண்டு, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து, லெபனானுக்கு வந்த பின்னர் அதே பதிவை புதுப்பிக்காமல் நீண்ட காலமாக பணிபுரியும் இலங்கை பணியாளர்களுக்கு இந்த சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை ஒக்டோபர் எட்டாம் திகதி முதல் 2025 ஜனவரி எட்டாம் திகதி வரையான மூன்று மாத காலத்துக்கு தடைமுறையில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் தூதரகத்துக்கு வந்து, பதிவுகளை விரைவாக மேற்கொள்ள முடியுமென 06

---

## அமெரிக்க பசுபிக் கப்பற்படை கட்டளை தளபதி ஸ்டீவ் கேலர் இன்று இலங்கை விஜயம்



நான்கு நட்சத்திர அமெரிக்க கடற்படை அட்மிரலும் அமெரிக்க பசிபிக் கப்பற்படையின் கட்டளைத் தளபதியுமான அட்மிரல் ஸ்டீவ் கேலர், இன்று (10) இலங்கை வரவுள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த அதியுயர் அதிகாரியொருவர், நாட்டுக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பம் இதுவாகும்.

அவரது இலங்கை விஜயத்தின் போது, நீடித்த மீண்டெழும் தன்மையுடைய, சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ பசிபிக் பிராந்தியத்தைப் பேணிப் 06

---

## டக்ளஸ் தேவானந்தாவுடன் முருகன் சந்தித்துப் பேச்சு



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி, தண்டனை வழங்கப்பட்ட பின்னர், கருணை மனுவின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட முருகன், நேற்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினார்.

ஈ.பி.டிபியின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில், பரஸ்பர சுகநலன்கள் மற்றும் சமகால அரசியல் நிலவரங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

---

## வைரசால் உயிரிழந்த பன்றிகளின் இறைச்சி சந்தைகளில் விற்பனை

### கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

மேல் மாகாணத்திலுள்ள பன்றிகள் பண்ணைகள் சிலவற்றில் வேகமாக வைரஸ் தொற்றொன்று பரவி வருவதாகவும், இவ்வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு இறக்கும் பன்றிகளின் இறைச்சிகள் கடைகளில் விற்பனை செய்யப்படுவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வைரஸால் இறக்கும் பன்றிகளின் இறைச்சியை குளிர்சாதன பெட்டிகளில் களஞ்சியப்படுத்தி வைத்து, சந்தையில் கிலோ 300 முதல் 400 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவது தெரியவந்துள்ளது.

ஜாஎல பிரதேச சபையில் கடந்த (02) நடைபெற்ற சுற்றாடல் மற்றும் வசதிகள் குழு கலந்துரையாடலின் போது, மத்துகம பிரதேசத்தில் பன்றிகள் வளர்ப்பு பண்ணைகளில் பன்றிகள் உயிரிழந்தமை 06

---

## புலிகளின் ஆயுதங்களை தேடி முள்ளிவாய்க்காலில் அகழ்வுப்பணி

**மாங்குளம் குறூப் நிருபர்**



முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியிலுள்ள விளையாட்டு மைதானத்தில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாக தெரிவித்து, நேற்று முன்தினம் (08) மாலை அகழ்வுப் பணிகள் நடைபெற்றன.

கொழும்பு நீதிமன்றத்தின் அனுமதியுடன் கொழும்பிலிருந்து வருகை தந்த பொலிஸ் குழுவினரால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.இதன் போது, எந்த பொருட்களும் கிடைக்கவில்லை.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஒக்டோபர் 10 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.42
லுஹர் - 11.59
அஸர் - 03.16
மஃரிப் - 05.55
இஷா - 07.09

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் புரட்டாதி 24

ராகுகாலம் : பகல் : 1.32 - 3.02வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

## அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதிக்கு ஜனாதிபதி அனுமதி

பண்டிகை கால தட்டுப்பாடுகளை தவிர்ப்பதே நோக்கம்

பண்டிகை காலத்தில் அத்தியாவசிய உணவு பொருட்களை தட்டுப்பாடின்றி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இறக்குமதியாளர் சங்க பிரதிநிதிகளுக்கு அறிவித்துள்ளார். அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதியாளர் சங்கத்தினருடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்க நடத்திய சந்திப்பில், இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சில நாடுகளில் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக அத்தியாவசிய உணவு பொருட்களின் இறக்குமதி பாதிக்கப்படுமா? என ஜனாதிபதி இதன்போது சங்கத்திடம் வினவினார். இதற்கு பதிலளித்த அத்தியாவசிய உணவு பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கம், இதுவரையில் தமது இறக்குமதி நடவடிக்கைகளுக்கு எவ்வித தடைகளும் ஏற்படவில்லையெனத் தெரிவித்தனர். இக்கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

## ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு எகிப்து ஜனாதிபதி வாழ்த்து



ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திசாநாயக்காவுக்கு, எகிப்து அரபுக் குடியரசின் ஜனாதிபதி அப்தெல் பத்தா அல் சிசி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமைக்கு நம்பிக்கையுடன் மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

எமது இரு நாடுகளையும் ஒன்றிணைக்கும் உறவுகளும், எமக்கிடையிலான இருதரப்பு நட்புறவுகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. எமக்கிடையிலான நட்புறவும் ஒத்துழைப்பும் எதிர்வரும் காலங்களில் மேலும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் எனது உண்மையான வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

மேலும் உங்கள் அன்பான நாடு மேலும் ஸ்திரத்தன்மையும் செழிப்பையும் அடையட்டும். இதற்கான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையருக்கு கொரியாவில் அதிகளவு தொழில் வாய்ப்புகள்

### தென் கொரியத் தூதுவர் ஜனாதிபதியிடம் உறுதி



வேலைவாய்ப்புகளைப் பெற்று தென் கொரியா சென்றுள்ள இலங்கையருக்கு மேலும் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கி, நாட்டுக்கு பணம் அனுப்பும் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக, தென் கொரியத் தூதுவர் மியோன் லீ ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் நேற்று உறுதியளித்தார்.

அத்துடன் தென் கொரியாவில் தொழில்வாய்ப்பை எதிர்பார்க்கும் இலங்கையர்களை சிறந்த முறையில் தயார்படுத்தும் வகையில், கொரிய மொழிக் கல்வியை இலங்கையில் விரிவுபடுத்துவதற்கு தென் கொரியாவின் விருப்பத்தை தூதுவர் லீ மேலும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் மியோன் லீ (Miyon Lee) நேற்றுக் (09) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார். இதன் போதே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

ஜனாதிபதி அநுரவைச் சந்தித்த தூதுவர் மியோன் லீ, தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்ததோடு தென்கொரிய அரசாங்கத்தின் வாழ்த்துச் செய்தியையும் கையளித்தார்.

இலங்கை, தென் கொரியாவுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கு, தென் கொரியாவின் அர்ப்பணிப்பை தூதுவர் மியோன் லீ உறுதிப்படுத்தினார்.

இலங்கைக்கு அந்நியச் செலாவணி அனுப்புவதில் தென் கொரியா ஆறாவது இடத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொரிய சுற்றுலாப் பயணிகள் சுற்றுலா செல்வதற்கு ஈர்ப்புள்ள நாடாக இலங்கையை உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு பொருளாதார ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் உறுதியளித்த தூதுவர்,

06

# பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஜனாதிபதி அநுரவுக்கு வாழ்த்து

### வத்திக்கான் பிரதிநிதி, ஜனாதிபதிக்கு கையளிப்பு



இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி வணக்கத்துக்குரிய பிரையன் உதைக்வே ஆண்டகை (Rev. Dr.Brian Udaigwe) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை நேற்று (09) ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திசாநாயக்கவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த வத்திக்கான் பிரதிநிதி, கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும் இறைமைமிக்க வத்திக்கான் அரசின் பரிசுத்த பாப்பரசருமான முதலாவது பிரான்சிஸ் அவர்களின் உளப்பூர்வமான வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதிக்கு கையளித்தார்.


புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையின் கீழ், இலங்கை வெற்றிமிக்க மற்றும் சுபீட்சத்தை நோக்கிப் பயணிக்கும் எனத் தெரிவித்த வத்திக்கான் பிரதிநிதி உதைக்வே ஆண்டகை, அதற்காக தாம் மனமார வாழ்த்துவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் எதிர்காலம் குறித்து தனது சாதகமான கருத்தை வெளிப்படுத்திய உதைக்வே ஆண்டகை, மக்கள் எதிர்பார்க்கும் வகையில் நாட்டில் ஏற்கனவே சிறப்பான அபிவிருத்திகள் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பான ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வை மற்றும் அர்ப்பணிப்பைப் பாராட்டிய அவர், அந்த முயற்சிகள் அனைத்திற்கும் வத்திக்கான் ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்தார்.

06

## தினகரன் 92




### கொழும்பு வடபகுதி உப தேர்தல்

**நவம்பர் 12ம் தேதி நடைபெறும**

கொழும்பு வடபகுதி அரசாங்க சபை உபதேர்தல் நவம்பர் மாதம் 5ம் தேதி நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. இத்தேதி மாற்றப்பட்டு நவம்பர் மாதம் 12ம் தேதி தேர்தல் நடைபெற வேண்டுமென்று தற்பொழுது நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அன்றையதினம் தேர்தல் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

## ஊசி மருந்து குப்பிகள் கொள்வனவில் அரசுக்கு 97 மில்லியன் ரூபா நட்டம்

மருத்துவ விநியோகப் பிரிவு கடந்த வருடம் கொள்வனவு செய்த ஊசி மருந்து குப்பிகளால், அரசாங்கத்துக்கு 97 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் சட்ட மாஅதிபர் நேற்று அறிக்கையை தாக்கல் செய்தார்.

லெக்டியுலோஸ் மில்லிமீற்றர் 120 என்ற மருந்தைக் கொள்வனவு செய்கையிலே, இந்த மோசடி இடம்பெற்றுள்ளதாக சட்ட மாஅதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர்ஜெனரல் லக்மினி கிரிஹாகம தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோபுலின் ஊசி மருந்து குப்பிகளைக் கொள்வனவு செய்தபோது, மருத்துவ விநியோக பிரிவின் பணிப்பாளராக இருந்த கபில விக்கிரமநாயக்கவின் நிர்வாகத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# சீனப்பிரஜைகளுக்கு விளக்கமறியல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இணையவழி நிதி மோசடி தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பாணந்துறை பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த நிலையில், கைது செய்யப்பட்ட 20 சீனப் பிரஜைகளையும் எதிர்வரும் (23) வரை விளக்கமறியலில் வைக்குமாறு பாணந்துறை மேலதிக நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மேல்மாகாண புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில், பாணந்துறை வடக்குப் பிரிவு பொலிஸ் அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் மேற்படி 20 சீனப் பிரஜைகளையும் கைது செய்திருந்தாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கடந்த ஒக்டோபர் (06) ஹங்வெல்ல பொலிஸ் பிரிவில் இணையவழி பண மோசடியில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகளுக்கும், நேற்று கைது செய்யப்பட்டுள்ள சீனப் பிரஜைகளுக்கும் ஏதேனும் தொடர்புகள் உள்ளதா என குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.




பாராளுமன்றத் தேர்தல் 2024

# பிரதான கட்சிகளின் வேட்புமனு தயாரிப்பு பணிகள் துரிதமாகிறது

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தயாரிக்கும் பணிகளை, பிரதான கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தின் கீழ் போட்டியிடுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

கட்சியின் உயர்பீட கூட்டத்தில் நேற்று முன்தினம் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்திலும், ஏனைய மாவட்டங்களில் கூட்டணியில் இணைந்து சிலிண்டர் சின்னத்திலும் போட்டியிடுவதற்கு இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் மற்றும் தேசிய அமைப்பாளர் பா.சக்திவேல் ஆகியோர் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடவுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஏனைய மாவட்டங்களில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் பெயர்களை, இறுதி செய்வதற்கான கலந்துரையாடல் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின், காலி, களுத்துறை, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களுக்கான வேட்புமனுக்கள் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டன.

கொழும்பு மாவட்டத்துக்கான வேட்புமனுக்கள் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில், ஒப்பமிடப்பட்டது. தேசிய செயற்குழு உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க தலைமையில் கம்பஹா மாவட்டத்துக்கான வேட்புமனுக்கள் கைச்சாத்திடப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் காலி மாவட்டத்துக்கான வேட்புமனு, கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் நளின் ஹேவகே தலைமையில் கைச்சாத்தானது. களுத்துறை மாவட்டத்துக்கான வேட்புமனு தேசிய செயற்குழு உறுப்பினர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் கைச்சாத்தாகியது.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பு மனுக்களில் கையொப்பமிடும் நிகழ்வு பிட்டகோட்டேயிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பலரும் இதன்போது கலந்து கொண்டனர்.

இதேவேளை, தற்போது வரை 22 தேர்தல் மாவட்டங்களிலும், மொத்தமாக 17 அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தல்:

# வடக்கு, கிழக்கில் அதிக சுயேச்சைக் குழுக்கள்

பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுகள் இறுதிக்கட்டத்தில் நடைபெற்றுவரும் இத்தருணத்தில், வடக்கு, கிழக்கில் இம்முறை அதிக சுயேச்சைக் குழுக்களை களமிறக்க கட்டுப் பணம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் 37 சுயேச்சைக் குழுக்களும், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 22 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

இதேபோன்று, வன்னி மாவட்டத்தில் 21 சுயேச்சைக் குழுக்களும், திருகோணமலை மாவட்டத்தில் 17 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன. அதிக சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்திய மாவட்டங்களாக வடக்கு, கிழக்கே காணப்படுகிறது. சுயேச்சையாகப் போட்டியிடுவோர் கட்டுப்பணம் செலுத்துவதறக்கு காலம் இன்னும் உள்ளதால்,

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமெனவும் கருதப்படுகின்றது. அதிக மக்கள் தொகை கொண்ட கொழும்பு மாவட்டத்தில் 17 சுயேச்சைக் குழுக்களும், கம்பஹா மாவட்டத்தில் 12 சுயேச்சைக் குழுக்களுமே கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

# மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோம்

### ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் தலைவர் நடிகர் ரஞ்சன் ராமநாயக்க

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலேயே, ஐக்கிய ஜனநாயகக் குரல் செயற்படும் என்றும் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாகவும் அக்கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான நடிகர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார். இதற்கு முன்னர் நாட்டை ஆட்சி செய்தவர்கள் நாட்டு மக்களை 97 பில்லியன் டொலர்கள் கடனாளியாக்கி உள்ளதாகத் தெரிவித்த அவர், சுதந்திரத்திற்குப் பின்னர் வெளிநாடுகளுக்கு கடன் கொடுத்த எமது நாடு தற்போது கடனாளியாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

'ஐக்கிய ஜனநாயகக் குரல்'என்ற புதிய கட்சி நேற்று கொழும்பில் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டது. கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடந்த அங்குரார்ப்பண நிகழ்வில், உரையாற்றிய போதே நடிகர் ரஞ்சன் ராமநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ், முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் திலகரத்ன டில்ஷான் ஆகியோர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

மிகவும் வீழ்ச்சியுற்ற நிலையில் காணப்பட்ட உலகின் பல்வேறு நாடுகள், தற்போது பெரும் முன்னேற்றமடைந்துள்ளன. ஊழல், மோசடிகளற்ற நாடாக எமது நாட்டையும் அவ்வாறு

06





கண்டி ஸ்ரீ செல்வ விநாயக ஆலயத்தில் விசேட நவராத்திரி பூஜை கோயில் அறங்காவலர் கிருஸ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவரும் சமூகத் தொண்டருமான எஸ். பரமேஸ்வரன், அவரது பாரியார், குடும்பத்தினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படம்: மாவத்தகம தினகரன் நிருபர்)

# சீனன்கோட்டை குட்டிமலை தர்காவில் காதிரிய்யா மனாகிப் தமாம் மஜ்லிஸ்

**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை, சீனன் கோட்டை குட்டிமலை ஜலாலிய்யா தர்கா ஸாவியா மஸ்ஜிதில் வருடாந்தம் நடைபெற்று வரும் காதிரிய்யா மனாகிப் மஜ்லிஸ் தமாம் வைபவம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அஸர் தொழுகையைத் தொடர்ந்து ஆரம்பமாகும். கலீபதுஷ்ஷாதுலிகளான மௌலவி எம்.எம் ஸெய்னுலாப்தீன் (பஹ்ஜி), அஷ்ஷெய்க் இஹ்ஸானுதீன் அபுல்ஹசன் (நளீமி) ஆகியோர் நிகழ்வுக்கு தலைமை வகிப்பர். தமாம் நிகழ்வில் கலீபதுல் அரூஸி மௌலவி முஹம்மத் முஸ்தகீம் (நஜாஹி) விஷேட பேச்சாளராக கலந்துகொள்வார். 12ஆம் திகதி இரவு திக்ர் மஜ்லிஸ் இடம்பெறும்.

ஸாவியா மஸ்ஜிதின் இமாம்களான மௌலவி எம்.டப்ளியு.எம் பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி), மௌலவி முஹம்மத் இக்ராம் (நூலாரி) ஆகியோர் தலைமையில் மேற்படி மஜ்லிஸ் ஆரம்பமாவதுடன் தொடர்ந்து 9 நாட்கள் மனாகிப் இடம்பெற்று தமாம் பெரிய கந்தூரியுடன் நிறைவு பெறும். காதிரியாதரீக்காவின் ஸ்தாபகர் குத்புல் அக்தாப் கௌதுல் அஃலம் முஹியத்தீன் அப்துல் காதர் ஜீலானி (ரஹ்மதுல்லாஹி) அவர்களின் ஞாபகார்த்தமாக இந்த மனாகிப் மஜ்லிஸ் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



போதைவஸ்துக்கு எதிராகவும் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராகவும் காத்தான்குடியில் இருந்து கொழும்பு நோக்கிய துவிச்சக்கர வண்டி பயணத்தை பதுறியா பாடசாலை மாணவி பாத்திமா நதா காத்தான்குடியில் இருந்து ஆரம்பித்தார். 3ஆம் நாள் பயணமாக அவர், தம்புள்ளையிலிருந்து குருநாகல் நோக்கி ஆரம்பிப்பதை படத்தில் காணலாம்.

# நுவரெலியாவில் மக்கள் போராட்ட கூட்டணி வேட்பு மனு தாக்கல்

நுவரெலியா மாவட்டத்தில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் மக்கள் போராட்ட கூட்டணியினர் தமது வேட்பு மனுவை மாவட்ட தேர்தல் அலுவலரிடம் நேற்று கையளித்தனர்.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் போராட்ட கூட்டணியினர் குடை சின்னத்தில் போட்டியிடவுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சைக் குழு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி உட்பட இரண்டு வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் நுவரெலியா மாவட்ட செயலாளருமான நந்தன கலபட தெரிவித்துள்ளார். நுவரெலியா மாவட்ட பொதுத்தேர்தலுக்காக இதுவரை 12 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்



பணத்தை வைப்பிலிட்டுள்ளதாக மாவட்டத் தேர்தலுக்குப் பொறுப்பான அதிகாரி மேலும் குறிப்பிட்டார். இந்த வேட்புமனுக்களை கையளிக்கும் நிகழ்வு மாவட்ட தேர்தல் அதிகாரியும் நுவரெலியா மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளருமான லஹிரு களுகம்பிட்டிய தலைமையில் நடைபெற்றதுடன், இறுதி தருணத்தில் கட்டுப்பணம் செலுத்துவதைத் தவிர்க்குமாறும் வேட்பாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

# சட்டவிரோத மதுபான நிலையம் சுற்றிவளைப்பு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

எம்பிலிப்பிட்டிய வெல்லவாய வீதியில் ஹந்தபானாகல என்ற இடத்தில் மதுபான உற்பத்தி நிலையமொன்றை பொலிஸார் நேற்றுமுன்தினம் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து மதுபான உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட கோடா மற்றும் மூலப் பொருட்கள், பெரல்கள் மற்றும் உபகரணங்களும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# களுத்துறையில் மீலாத் விழா

களுத்துறை Home and Family Foundation பெருமையுடன் வழங்கும் 17 ஆவது வருட மீலாத் விழா எதிர்வரும் 12ஆம் திகதி (சனிக்கிழமை) மாலை 4.30 மணி முதல் களுத்துறை கே.எம்.சி.சி. கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது திறமை படைத்த 60 மாணவர்களின் பங்குபற்றலுடன் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இஸ்லாமிய பாடல்கள், கஸீதா, து ஆ பிரார்த்தனை, ஹதிஸ் போன்றனவும் குழு நிகழ்வுகளும் விசேட சொற்பொழிவுகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், கௌரவ அதிதியாக களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத் தலைவரும் சமாதான நீதவானுமான எம்.எச்.எம்.உவைன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# சப்ரகமுவ ஆளுநரை பொதுமக்கள் திங்கட்கிழமைகளில் சந்திக்கலாம்

**(காவத்தை தினகரன் விசேட நிருபர்)**

சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்னவை ஒவ்வொரு திங்கட்கிழமையும் பொதுமக்கள் சந்திக்கலாம் என அறிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சந்திக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கேகாலை மாவட்ட மக்களின் நலன் கருதி ஒவ்வொரு மாதமும் நான்காவது வாரத்தில் வரும் வியாழக்கிழமை நாட்களில் கேகாலை ரதபலாவத்தையில் உள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் பொதுமக்கள் சந்திக்கலாம் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன மேலும் தெரிவித்தார்.

# மனைவியை கத்தியால் குத்திய கணவர்; டயகமவில் சம்பவம்

**(நானு ஓயா நிருபர்)**



டயகம மேற்கு பகுதியில் கணவனின் கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்கான பெண்ணொருவர் படுகாயங்களுடன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

26 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

கணவன் - மனைவி இடையில் ஏற்பட்ட குடும்ப தகராறே இச்சம்பவத்துக்கு காரணமென பொலிஸார் தெரிவித்தார். கணவன் டயகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவரை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

e-filing
TAX RETURNS

## வரிசெலுத்துநர்களுக்கான அறிவித்தல்

**2023/2024 ஆம் வரி மதிப்பீட்டாண்டு**

**CIT, PIT மற்றும் IIT (இலகுபடுத்தப்பட்ட IIT உள்ளடங்கலாக) விபரத்திரட்டினை கோப்பிடுவதற்கான "இ-சேவைகள்" கிடைக்கிறது.**

**உருவகங்கள், பங்குடமைகள் மற்றும் தனிநபர்களுக்கான வருமான விபரத்திரட்டினை "இ-சேவைகள்" ஊடாக கோப்பிடுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது.**

பதிவு செய்யப்பட்ட அனைத்து வரிசெலுத்துநர்களும் மதிப்பீட்டாண்டு 2023/2024 இற்கான வருமான வரி விபரத்திரட்டினை **2024, நவம்பர் 30** அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

**இறுதி நிமிடம் வரை காத்திருக்க வேண்டாம்; உங்கள் வருமான வரி விபரத்திரட்டினை, உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.**

முதன்மை ஊழிய வருமானம் மட்டும் அல்லது வட்டி வருமானம் மட்டும் அல்லது இரண்டும் அல்லது பூஜ்ஜிய வருமானத்தை மட்டுமே கொண்ட தனியாள் வருமான வரி செலுத்துனர்களுக்கு, இலகுபடுத்தப்பட்ட தனியாள் வருமான வரி விபரத்திரட்டு (IITS) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உருவகங்கள், பங்குடமைகள் மற்றும் தனிநபர்கள் வருமான விபரத்திரட்டினை இ-கோப்பிடுவதற்கு தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் இ-கோப்பிடலுக்கு உருவகங்கள் அல்லது பங்குடமைகள் SSID இலக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

PIN இலக்கம் இல்லை எனில், கீழ் உள்ள இணைப்பினை அழுத்தி PIN இனைப் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்
*https://eservices.ird.gov.lk/Registration/PINRequest/ShowPINRequestDetail*

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 113 (1)(ஆ) பிரிவின் கீழ் ஒரு ஆள் இலத்திரனியல் முறையில் CIT/ PIT/IIT (IITS உள்ளடங்கலாக) வருமான விபரத்திரட்டினை கோப்பிடுவது கட்டாயமாகும்.

நீங்கள் சிரேஷ்ட பிரஜையாக இருந்து, இலத்திரனியல் முறையில் தனியாள் வருமான வரி (IIT) வருமான விபரத்திரட்டினை சமர்ப்பிப்பதில் உங்களுக்கு சிக்கல்கள் ஏதேனும் இருப்பின், தலைமைக் காரியாலயம் மற்றும் பிராந்திய அலுவலகங்களிலுள்ள உள்நாட்டு இறைவரி அதிகாரிகள் IIT வருமான விபரத்திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கு உங்களுக்கு உதவிசெய்வார்கள்.

இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை அறிந்துகொள்ள, கிரமமாக உள்நாட்டு இறைவரி திணைக்கள வலைதளத்தை பார்க்கவும்.

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

IRD 1944

வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக

வலைத்தளம் : www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

SELACINE

தினகரன்
THINAKARAN


35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 24ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 06



### குறள் தரும் சிந்தனை

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்

பிறர் பொருளைக் கவர விரும்புவதால் ஆகும் ஆக்கத்தை விரும்பாதிருக்க வேண்டும்; அது பயன் விளைவிக்கும்போது அப்பயன் நன்மையாவது அரிதாகும்.

# நாட்டில் டெங்கு மீண்டும் தீவிரமடையும் ஆபத்து!

நாட்டில் கடந்த சில தினங்களாக மழையுடன் கூடிய காலநிலை ஆரம்பமாகியுள்ளது. அதன் விளைவாக டெங்கு நோய் தலைதூக்கக் கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனை தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவும் சுட்டிக்காட்டியுள்ளது. இப்பிரிவின் தரவுகளின்படி, இவ்வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களிலும் 40 ஆயிரத்து 109 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேநேரம் இவ்வருடம் இந்நோய்க்கு உள்ளானவர்களில் 10 ஆயிரத்து 27 பேர் கொழும்பு மாவட்டத்திலும் 4698 பேர் கம்பஹா மாவட்டத்திலும் அதிகூடியளவில் பதிவாகியுள்ளனர். அதிலும் இம்மாதத்தின் முதல் ஏழு நாட்களுக்குள் 794 பேர் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவை இவ்வாறிருக்க, இற்றைவரையும் இந்நாட்டில் டெங்கு நோய்க்கு உள்ளாகியுள்ளவர்களை எடுத்து நோக்கினால், அவர்களில் 42.3 சதவீதத்தினர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக விளங்குகின்றனர். இரண்டாவது அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவான மாகாணமாக வடமாகணம் திகழுகிறது.

டெங்கு தொடர்பான இந்த நிலைமை ஆரோக்கியமானதல்ல. ஏனெனில் டெங்கு உயிராபத்து அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய நோயாக இருந்தாலும் அதனை முழுமையாகத் தவிர்த்தும் கொள்ளவும் முடியும் அல்லது முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். அதற்காக இந்நோய்க்கான பிரதான அறிகுறியாக விளங்கும் காய்ச்சல் குறித்து ஆரம்ப கட்டத்திலேயே அதிக அக்கறை எடுத்தபடி மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகும்.

இருந்தும் கூட இந்நோய் குறித்து மக்கள் மத்தியில் காணப்படும் கவனயீனமும் அசிரத்தையுமே டெங்கு உயிராபத்து அச்சுறுத்தல் மிக்கதாகத் திகழக் காரணமாக அமைகின்றது. மருத்துவர்களின் கருத்ததும் அதுதான்.

டெங்கு வைரஸானது வெற்றுக் கண்களுக்குப் புலப்படாத நுண்ணங்கிகளில் ஒன்றாகும். அத்தோடு இவ்வைரஸ் தனக்கென சில தனித்துவ பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

குறிப்பாக இவ்வைரஸ் சுயமாகப் பரவக் கூடிய ஒன்றல்ல. அதன் பரவுதலுக்கு காவியொன்று இன்றியமையாததாகும். காவியின்றி பரவாத வைரஸ் தான் டெங்கு. அதேநரம் இவ்வைரஸ் எந்தவொரு உயிரினத்தையும் பொருளையும் காவியாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதுமல்ல. மாறாக அதன் பரவுதலுக்கான காவியாக நுளம்பையே இவ்வைரஸ் பயன்படுத்திக் கொள்கிறது.

நுளம்பில் பல இனங்கள் உள்ளன. அந்த எல்லா இன நுளம்புகளையும் இவ்வைரஸ் தனது காவியாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை. மாறாக நுளம்பு இனங்களில் காணப்படும் அனோபிளஸ் எஜிப்டைய் என்கிற இன நுளம்புகளையே டெங்கு வைரஸ் தனக்கான காவியாகப் பாவிக்கின்றது.

இதன்படி இந்த இன நுளம்புகள் இல்லாவிட்டால் டெங்கு ஒரு அச்சுறுத்தாலாகவே இருக்காது.

இருந்த போதிலும் மழை பெய்யும் காலநிலையுடன் சேர்த்து இந்த இன நுளம்புகள் பெருக்கமடைவது வழமையாகும். அதாவது தெளிந்த மழை நீர் தேங்கும் இடங்களில் முட்டையிட்டு பல்கிப் பெருகும் பண்பை இவ்வின நுளம்புகள் கொண்டிருக்கின்றன. அதன் விளைவாகவே மழைக் கால நிலையுடன் சேர்த்து இவ்வின நுளம்புகள் பெருக்கம் அடைகின்றன. அதனால் இவ்வின நுளம்புகள் பெருக முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக் கொள்ள வேண்டும். அதன் ஊடாக டெங்கு அச்சுறுத்தலைக் கட்டுத்திக் கொள்ளலாம்.

அதனால் தெளிந்த மழைநீர் தேங்க முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்திருப்பதில் ஒவ்வொரு குடிமகனும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இது பொதுமக்களுடன் சம்பந்தப்பட்டதொரு பிரச்சினையாகும். குறிப்பாக சுற்றாடலில் காணப்படும் கைவிடப்பட்ட டயர்கள், சிரட்டைகள், உடைந்த மட்பாண்டங்கள், பொலித்தீன் உறைகள், செவ்விளநீர் குரும்பைகள் போன்றவாறான திண்மக் கழிவுப் பொருட்களை தெளிந்த நீர் சேர முடியாதபடி அப்புறப்படுத்துவதில் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். அத்தோடு வீடுகளின் கூரைப் பீலிகளையும் மலர்ச்சாடிகளையும் தெளிந்த நீர் சேர முடியாதபடி பராமரிப்பதிலும் அக்கறை எடுத்துக் கொள்ளவும் தவறக்கூடாது.

இவற்றின் ஊடாக டெங்கு வைரஸைக் காவிப் பரப்பக்கூடிய நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். அப்போது டெங்கு வைரஸ் மக்களுக்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக அமையாது.

editor.tkn@lakehouse.lk




# பவளவிழா காணும் இலங்கை இராணுவம்

காலனித்துவ ஆட்சியின் நிறைவுக்குப் பின்னர் இலங்கை இராணுவமானது 'சிலோன் இராணுவம்' என்ற பெயரில் 1949 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. 75 வருட பெருமைமிக்க வரலாற்றை கடந்து செல்லும் இலங்கை இராணுவம், தனது புகழ்பெற்ற வரலாற்றில் தேசத்தின் பாதுகாவலராக நாட்டின் தேசிய நலன்களுக்காக பெரும் சேவையை ஆற்றி வருகின்றது. போர்களின் போது தனது மனிதாபிமானத்தையும், தனது தொழில்வாண்மையினையும் வெளிப்படுத்தி 3 தசாப்தங்களாக நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை மனிதாபிமான நடவடிக்கைகளின் ஊடாக தோற்கடித்ததன் மூலம் உலகின் மிகவும் ஒழுக்கமான இராணுவம் என்ற புகழுடன் இலங்கை இராணுவம் உச்சம் தொட்டுள்ளது.

இராணுவமானது தனது முதன்மை கடமைகளையும் தேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்புக்கான பொறுப்புக்களையும் நிறைவேற்றும் பொருட்டு நிரந்தர மற்றும் தொண்டர் படையணியாக 25 படையணிகளைக் கொண்டுள்ளது.

இதுவரை இலங்கை இராணுவத்திற்கு கட்டளையிட்ட 23 தளபதிகளின் சேவைகள் அளப்பரியன. தற்போது 24 ஆவது தளபதியாக லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகே இலங்கை இராணுவத்திற்கு கட்டளையிடுகின்றார்.

யுத்தம் நிறைவுற்றதையடுத்து இலங்கை இராணுவம் தனது முதன்மை கடமைக்கு அப்பால் பல்வேறு பொறுப்புக்களை நிறைவேற்ற முன்னிற்கின்றது. மீள்குடியேற்ற செயற்பாடுகளுக்காக கண்ணிவெடிகளை அகற்றல், அரசினால் முன்னெடுக்கப்பட்ட வடக்கு கிழக்கு வசந்தம் எனும் திட்டத்திற்கு தொழிநுட்ப மற்றும் சிரம ஒத்துழைப்பை வழங்கியமை, உட்கட்மைப்பு வசதிகளை அபிவுத்தி செய்தல், வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுத்தல் என்பவற்றில் முன்னின்று செயற்பட்டது.

இனங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் வடக்கு கிழக்கு பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தமக்கு எதிராக போரிட்ட முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினர்களுக்கு உதவுகின்றமை, அவர்களுக்கான நல நோன்பு திட்டங்களை முன்னெடுக்கின்றமை குறிப்பாக வீடு அமைத்துக் கொடுக்கின்றமை வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுக்கின்றமை என்பன வாகும். மேலும் மக்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்கள், வீடமைப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (குறிப்பாக வடக்கு, கிழக்கில் மட்டும் 1000 இற்கும் மேற்பட்ட வீடுகளை இலங்கை இராணுவம் அமைத்துள்ளது).

சிமிக் பார்க் எனும் திட்டத்தின் ஊடாக கல்வி, பொழுது போக்கு, விளையாட்டு என்பவற்றுக்கான வாய்புகளை உருவாக்கியுள்ளமை, தமிழ் மாணவர்களுக்கு சிங்களமும் சிங்கள மாணவர்களுக்கு தமிழ்மொழியையும் கற்பிக்கின்றமை, பாதைகள், செப்பனிடல், பொதுக்கட்டடங்களை நிர்மாணித்தல் போன்ற அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்கின்றது. விவசாயிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டு மக்கள் மத்தியில் தனக்கென ஒரு நன்மதிப்பை உருவாக்கியுள்ளது.

போதை என்பது இன்று இளையோர் மத்தியில் பெரும் சவாலான விடயமாக காணப்படுகின்றது. அதில் இருந்து இளைய சமூ கத்தை மீட்கும் பொருட்டு இலங்கை இராணுவம் இலங்கை பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்கின்றது. அத்தோடு அவர்களை அவ்வாறான தீய பழக்கங்களில் ஈடுபடுவதை தடுக்கும் பொருட்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், கழக நடவடிக்கைகள் ஊக்குவித்தல், உதவி ஒத்தாசைகளை வழங்கல் என்பவற்றை முன்னெடுக்கின்றது.

பொதுவாக இலங்கை வைத்தியசாலைகள் எதிர்நோக்கும் மிக பெரிய சவால் இரத்தப் பற்றாக்குறை. இதனை நிவர்த்திக்கும் வகையில் குருதி நன்கொடையினை இலங்கை இராணுவம் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது. இன்றளவில் சுமார் 6000 க்கும் அதிகமான பைந்த் இரத்தம் இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை இராணுவமானது பிரத்தியோகமான ஒரு விளையாட்டு கிராமத்தை உருவாக்கி தொழில்முறை விளையாட்டு வீரர்களை உருவாக்குவதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்களை தேசத்திற்கு வழங்கியுள்ளது. இதன் ஊடு உருவாக்கப்பட்ட பலர் சர்வதேச மட்டத்தில் பல பதக்கங்களை பெற்றுள்ளனர்.



மண்சரிவு, வெள்ளப் பெருக்கு, சுழல் காற்று போன்ற இயற்கை அனர்தங்களின் போதும் தீ பரவல்,கொவிட் எனும் கொடிய நோய் பரவல் போன்ற ஏனைய அனர்த்தங்களின் போதும் என்றும் தன்னலம் இன்றி முதலில் களத்தில் மக்கள் பணி செய்த அமைப்பு இலங்கை இராணுவமே.

இன்றைக்கு நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்சினைக்கு கரம்கொடுக்கும் வகையில் நாடெங்கிலும் இராணுவத்தினால் பராமரிக்கப்படும் இராணுவ பண்ணைகளில் விவசாய உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.



இராணுவத்தினால் நிர்வகிக்கப்படும் வெள்ளங்குளம், மெனிக் பார்ம், ஆண்டியாபுளியங்குளம், நீராவி, கந்தக்காடு, கலகந்த, பலல்ல, யால, பலட்டுபான மற்றும் அரலகங்வில ஆகிய விவசாயப் பண்ணைகளின் அறுவடைகள் இராணுவத்தின் பயன்பாட்டுக்கு எடுக்கப்படுவது மட்டுமன்றி, மானிய விலையில் பொதுமக்களுக்கும் விற்பனையும் செய்யப்படுகின்றன.



இலங்கை இராணுவமானது தனது பவளவிழா கொண்டாட்டங்களை முன்னிட்டு வழமைபோல் சர்வமத அனுஷ்டானங்களை நடத்தியது. 2024.09.27 ஆம் திகதி தொடக்கம் 2024.10.06 வரை முறையே அநுராதபுரம் ஜய ஸ்ரீ மஹா போதி, ஸ்ரீதலதா மாளிகை, கதிர்காமம் என்பவற்றில் பௌத்த மத அனுஷ்டானங்களையும், கொழும்பு_ 6 மயூரபதி ஸ்ரீ பத்ர காளியம்மன் ஆலயத்தில் இந்து சிறப்பு ஆசிர்வாத பூஜையினையும், கொள்ளுப்பிட்டி ஜும்மா மஜித் பள்ளிவாசலில் சிறப்பு பிரார்த்தனையையும், பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் சிறப்பு ஆராதனையையும் நடத்தியது.

இராணுவ தலைமையகத்தில் அனைத்து படையினருக்கும் ஆசி வேண்டி இரவு முழுவதும் பிரித் பாராயணம் மற்றும் பிக்குகளுக்கான தானம் வழங்கலையும் நடத்தியது. மேலும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த படையினருக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு 2024.10.07 இல் நடைபெற்றது. இராணுவ தினமான ஒக்டோபர் 10 (இன்று) இராணுவ தளபதிக்கான அணிவகுப்பு மரியாதை வழங்கப்படுகிறது.

75 வருட பெருமைமிகு வரலாற்றைக் கொண்ட இலங்கை இராணுவம் நவீன தொழில் நுட்பத்திற்கு ஏற்றால்போல் அறிவு மற்றும் பயிற்சியுடனான ஆயுதம் ஏந்திய தொழில்முறை இராணுவமாக தாய்நாட்டிற்காக தனது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதில் தொடர்ந்து அர்பணிப்புடன் செயற்படுவதற்கு திடசங்கற்பம் கொண்டுள்ளது.

## இராணுவத் தளபதிக்கான அணிவகுப்பு மரியாதை நிகழ்வு இன்று

**மேஜர் வா. சுதர்ஸ்சன்**
இராணுவ ஊடக மற்றும்
உளவியல் செயற்பாட்டு பணிப்பகம்
இராணுவத் தலைமையகம்
ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு

# தமிழரசுக் கட்சிதான் தமிழரின் தாய்க்கட்சி!

'இலங்கை தமிழரசுக் கட்சி தமிழர்களின் தாய்க்கட்சி ஆகும். எனவே 'சங்கு' தேவையாக இருந்தால் நீங்கள் வாருங்கள்,எங்களால் வர முடியாது' என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச குழுவின் உபதலைவரும், காரைதீவு பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளருமான கணபதிப்பிள்ளை தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரை (காரைதீவு) தெரிவு செய்வதற்கான காரைதீவு கிளைக் கூட்டம் கடந்த திங்களன்று மாலை முன்னாள் தவிசாளர் இல்லத்தில் நடைபெற்றது.

**சங்கு தேவையாக இருப்பின் நீங்கள் வாருங்கள்; எங்களால் வர முடியாது! தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரமுகர் தட்சணாமூர்த்தி கண்டிப்பான அறிவிப்பு!**

அச்சமயம் தலைமை வகித்து உரையாற்றிய பொழுது தட்சணாமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார் .

"ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்றமை இலங்கை தமிழரசுக் கட்சியின் சாணக்கியத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். சஜித்துக்கு வாக்களிக்க நாங்கள் ஆதரவளிப்பதாக கூறியதும் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் அதற்கு எதிராக வாக்களித்தார்கள். சஜித் பிரேமதாசவுக்கான வாக்குகள் அநுரகுமாரவுக்குச் சென்றன. ஆகவே இது எமக்கு கிடைத்த வெற்றியாகும்.



தற்போது எமது கட்சி கடலில் தத்தளிக்கும் படகு போன்று எங்கு போய்ச் சேருமோ என்று தெரியாமல் மிதந்து கொண்டிருக்கிறது. வடக்கு, கிழக்கில் வரலாற்றில் மிகக் கூடுதலான சுயேச்சைக் குழுக்கள் இம்முறை போட்டியிடுகின்றன. ஒன்றுசேர அழைக்கிறார்கள். நாங்கள் தாய்க்கட்சி, எங்களால் வர முடியாது. நீங்கள் வாருங்கள்.

தமிழரசுக் கட்சி அனைவரது மனதிலும் ஊறிப்போன ஒன்று. அதை மாற்ற முடியாது. எனவே வேண்டுமானால் நீங்கள் வாருங்கள், எங்களால் வர முடியாது" என்று தட்சணாமூர்த்தி அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் கிளைச் செயலாளர் க.செல்வபிரகாஷ், உறுப்பினர் எல்.ஏ. ரமேஷ்குமார், த.சிவகுமார், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்களான க.பாஸ்கரன், த.மோகன், எஸ். சசிக்குமார் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இறுதியில் காரைதீவு பிரதேசத்திலிருந்து பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளராக காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஏகமனதாக தெரிவு செய்யப்படுவதாக அங்கு தீர்மானிக்கப்பட்டது.

அவரை அனைவரும் ஆரத்தழுவி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

**(காரைதீவு குறூப் நிருபர்)**

# கிழக்கின் குரல்



## சுற்றுலாத் தலங்களை பயணிகள் அடையாளம் காண பெயர்ப்பலகை

### கல்லடியில் திறந்துவைப்பு

**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்**



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்களை சுற்றுலா பயணிகள் இலகுவில் அடையாளம் காணும் வகையில் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில், கல்லடி பிரதேசத்தில் புதிய பெயர்ப்பலகை இடப்பட்டுள்ளது.

இப்பெயர் பலகையை திரைநீக்கம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றதுடன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இலங்கை இராணுவத்தினரின் 75ஆவது வருட பூர்த்தி மற்றும் சர்வதேச சுற்றுலா தினத்தையொட்டி அம்கோர் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் 243ஆவது படைப்பிரிவின் பங்களிப்புடன் இந்த உதவி செய்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகை தரும் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் நன்மை கருதியே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் 243ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதி பிரிகேடியர் சந்திம குமாரசிங்க, அம்கோர் நிறுவன பணிப்பாளர் ப.முரளிதரன், மட்டக்களப்பு மாவட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஏ.விவேகானந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தி மட்டக்களப்பு நகரை அழகுபடுத்தும் பாரிய சேவையை இலங்கை இராணுவத்தினரின் 243ஆவது படைப்பிரிவினர் செய்து வருகின்றனர்.

## தம்பலகாமத்தில் புதிய நெசவு உற்பத்தி நிலையம்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



தம்பலகாமத்தின் மீராநகர் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட தாயிப்நகரில் நெசவு உற்பத்தி நிலையம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நெசவு உற்பத்தித்துறைசார் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஒரு திட்டமாக நெசவு தொழில் காணப்படுகிறது. இந்நிலையில் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட இந்த திட்டத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், கிராம அலுவலர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முஸ்லிம் எய்ட் நிறுவன உத்தியோகத்தர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளாகிய பலரும் கலந்து கொண்டனர்.

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பாக வேட்புமனு தாக்கல்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பாக முன்னாள் எம்.பி. கோவிந்தன் கருணாகரம் தலைமையில் நேற்று புதன்கிழமை வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட அரசாங்க அதிபருமான ஜஸ்டினா முரளிதரன் முன்னிலையில் இவ்வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னாள் எம்.பி. கோவிந்தன் கருணாகரம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இராசையா துரைரத்தினம், முன்னாள் அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார், நாகலிங்கம் சங்கரப்பிள்ளை தம்பிப்போடி, வசந்தராசா செல்வரத்தினம், மனோராதா வீரசிங்கம் விநாயகமூர்த்தி ஆகியோரின் பெயர்கள் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### அம்பாறையில் போட்டியிடும்

## தேசிய மக்கள் சக்தி சார்பான வேட்பாளர் விபரம் வெளியீடு



**ஒலுவில் விசேட நிருபர்**

பாராளுமன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் கல்முனைத்தொகுதி அமைப்பாளர் ஏ.ஆதம்பாவா (ஆசிரியர் சாய்ந்தமருது), றிஷாட் எம்.புஹாரி (சட்டத்தரணி சம்மாந்துறை), றமீஸ் முஹைதீன் (வர்த்தகர் – அக்கரைப்பற்று), முகம்மது சுல்தான் அப்துல் சத்தார் (ஆசிரியர் ஒலுவில்) வசந்த பியதிஸ்ஸ (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), மஞ்சுள ரத்நாயக்க (ஆசிரியர்), பியந்த (சட்டத்தரணி), கித்சிறி (புத்திஜீவிகள் மன்ற அம்பாறை மாவட்ட தலைவர்), திருமதி ரத்வத்த, அன்டன் ஆகியோர் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் இம்முறை தேசிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் இளம் வேட்பாளர்கள் போட்டியிடுவதை மக்கள் வரவேற்றுள்ளனர்.

## இந்து கலாசார திணைக்கள ஏற்பாட்டில் நவராத்திரி விழா

**காரைதீவு குறூப் நிருபர்**



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றம், சுவாமி விபுலாநந்தர் கற்கைகள் நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டிலான நவராத்திரி விழா காரைதீவு சுவாமி விபுலாநந்தர் மணி மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஆறாம் நாள் நவராத்திரி விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பணிமன்ற உறுப்பினர் த.நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பூஜையை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நடத்தியதுடன், கொலு பூஜையை அறநெறி ஆசிரியைகள் நடத்தினர்.

பாண்டிருப்பு நாவலர் மற்றும் அட்டப்பள்ளம் சித்தி விநாயகர் அறநெறி பாடசாலை மாணவர்களின் பஜனை, கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்ற ஆலோசகரும் ஓய்வுநிலை உதவி கல்விப் பணிப்பாளருமான வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா இதன்போது சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

கலை நிகழ்ச்சியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## தென்கிழக்கு பல்கலையின் பதில் உபவேந்தர் கௌரவிப்பு

**கல்முனை குறூப் நிருபர்**



ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு பதில் உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள அப்பல்கலைக்கழக தொழில்நுட்பப்பீட பீடாதிபதி கலாநிதி உதுமாலெப்பை அப்துல் மஜீத்தை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

அவருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் இந்த நியமனம் அண்மையில் வழங்கப்பட்டது.

ஒலுவில் வாழ் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் 'ஒலுவில் மண்ணின் மகிமை' எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வின் போது பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி பதில் உபவேந்தர் உதுமாலெப்பை அப்துல் மஜீத் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் ஒலுவில் வாழ் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள், நலன்புரி அமைப்பின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## சிரேஷ்ட பிரஜைகளுக்கு சுயதொழில் உதவி வழங்கல்

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு சுயதொழில் முயற்சிக்கான உதவிகள் அப்பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது ஆடுகள், வியாபார பொருட்கள், ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான காசோலையை சிரேஷ்ட பிரஜைகளுக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான் வழங்கி வைத்தார். சமூக சேவை அமைச்சின் கீழுள்ள சிரேஷ்ட பிரஜைகளுக்கான தேசிய செயலகத்தினூடாக இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.

இந்த உதவி வழங்கும் நடவடிக்கையில் சமூக சேவை மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.கைஸ், சமூக சேவைப்பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் கே.எம்.அன்ஸார், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட பிரஜைகள் ஆகியோர் பங்கேற்றனர்.

## தொழில் நிலையங்களை பார்வையிட்ட மாணவர்கள்



**கந்தளாய் தினகரன் நிருபர்**

க.பொ.த. உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்கள் 75 பேர் தெரிவு செய்யப்பட்டு அம்மாணவர்கள் மாவட்ட ரீதியாக தொழில் நிலையங்களுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அழைத்துச் செல்லப்பட்டனர்.

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன் மூதூர் பிரதேச செயலகத்தால் இந்நடவடிக்கை ஏற்பாடு செய்யப்பட்டது.

சேனையூர் மத்திய கல்லூரி, அல் ஹிதாயா மகா வித்தியாலயம், அல்மினா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து இம்மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், அவர்கள் திருகோணமலை தொழில்நுட்ப கல்லூரி, உயர் தொழில்நுட்ப கல்லூரி, கிண்ணியா தொழில் பயிற்சி நிலையம், சமுத்திர பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாகம் போன்றவற்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதில் திருகோணமலை மாவட்ட இணைப்பாளரும் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஜெசினா பஹ்மி, மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர். ஹசன், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் நாஜிர் குத்துஸ், ஆசிரியர்களாகிய பலரும் பங்கேற்றனர்.

## வண்டு வீதி வடிகானை துப்புரவாக்க வேண்டுகோள்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**



நற்பிட்டிமுனை மருதமுனையை இணைக்கும் வண்டு வீதியில் அமைந்துள்ள வடிகானில் திண்மக்கழிவுகள் ஒன்றாக சேர்ந்து அடைபட்டுள்ளதாகவும் இதனை சீர்செய்து தருமாறும் உரிய அதிகாரிகளிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மழைக்காலம் ஆரம்பித்துள்ளதாகவும் இதனால் மேலும் மழைநீருடன் வடிகானில் திண்மக்கழிவுகள் சேரும் நிலைமை ஏற்படுமெனவும் தெரிவித்த அம்மக்கள், வடிகானில் தேங்கியுள்ள திண்மக்கழிவுகளை அகற்ற தவறும் பட்சத்தில் நுளம்புகள் பெருக வாய்ப்பு உள்ளதுடன், இதனால் நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இதேவேளை வண்டு வீதி உடைந்தும் சிதைவடைந்தும் உள்ளதால் வண்டு வீதியுடனான போக்குவரத்தை பொதுமக்கள் தவிர்த்து, பிரதான வீதியூடாகவே அவர்கள் பாண்டிருப்பு, மருதமுனை, பெரியநீலாவணைத்துறை, நீலாவணை பிரதேசங்களுக்கு செல்கின்றனர்.

## சர்வதேச அஞ்சல் தினம்; இலவச மருத்துவ சேவை

**திருகோணமலை தினகரன் நிருபர்**



சர்வதேச அஞ்சல் தினமான நேற்று புதன்கிழமை திருகோணமலை பிரதான அஞ்சல் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ சேவை அதன் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், மருத்துவ ஆலோசனையும் வழங்கப்பட்டது.

திருகோணமலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர்கள், தாதியர்கள் ஆகியோர் இம்மருத்துவ சேவையை நடத்தினர். இம்மருத்துவ சேவை நடவடிக்கைக்கு முன்னர் அனைத்து அஞ்சல் அலுவலர்களும் சேவை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

## தேசிய வாசிப்பு மாத போட்டி

**இறக்காமம் தினகரன் நிருபர்**



தேசிய வாசிப்பு மாதத்தையிட்டு பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான வாசிப்பு மற்றும் கதை சொல்லும் நேரம் உள்ளிட்ட போட்டி நிகழ்ச்சிகள் அக்கரைப்பற்று மாநகர சபையினது பொது நூலகங்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

பொதுமக்கள், மாணவர்கள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் இப்போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளர் ஏ.ரி.எம். றாபியின் வழிகாட்டலிலும் ஹல்லாஜ் பொது நூலகத்தின் நூலகர் எம்.ஐ.எம். ஹனிபாவின் தலைமையிலும் இப்போட்டி நிகழ்ச்சிகள் அண்மையில் நடத்தப்பட்டன. அக்கரைப்பற்று மாநகர கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.எஸ்.ஹம்துன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஐ.கிருபாகரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல். ஹாசீம் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## தேர்தல் சட்டம்; கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

தேர்தல் தொடர்பான போலி செய்திகளை அடையாளம் காணுதல் மற்றும் தேர்தல் சட்ட அடிப்படையில் செய்திகளை அறிக்கை இடுதல் தொடர்பாக கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு ஒரு நாள் செயலமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட மட்டு. ஊடக அமையத்தின் ஏற்பாட்டிலும் ஹாஸ்டெக் தலைமுறையின் அனுசரணையிலும் கல்லடி ரிவேரா ஹோட்டலில் நடத்தப்பட்ட இச்செயலமர்வில் ஓய்வுபெற்ற உதவி தேர்தல் ஆணையாளர் எம்.எம். முகம்மட், ஹாஸ்டெக் தலைமுறையின் திட்ட முகாமையாளர் கே.ஏ.எம்.சபீர் ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

தேர்தல் சட்டம், பாராளுமன்ற தேர்தல் சட்டம், தேர்தல் தொடர்பான செய்திகளை ஊடகங்களில் கையாளும் நடைமுறை, செய்திகளை ஊடகவியலாளர்கள் எவ்வாறு வெளியிட வேண்டுமென்பது உள்ளிட்ட தேர்தல் தொடர்பான பல்வேறுபட்ட விடயங்களில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன. இச்செயலமர்வில் மட்டு. ஊடக அமைய தலைவர் வா.கிருஸ்ணகுமார், செயலாளர் செ.நிலாந்தன், பொருளாளர் ஏ.கிருஸ்டிராஜ், ஊடகவியலாளர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

# ஐவரடங்கிய குழுவின் தீர்மானத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க உத்தரவு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

புதிதாக வெளிநாட்டு கடவுச்சீட்டு கொள்வனவுக்கான கடவுச்சீட்டு கட்டணம், பாதுகாப்பு முறைமை உள்ளிட்ட விடயங்களை தீர்மானிப்பதற்காக பதில் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளரினால் நியமிக்கப்பட்டுள்ள ஐவரடங்கிய குழுவின் தீர்மானத்தை, விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்ம வர்தன நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்படி கடவுச்சீட்டு கொள்வனவு தொடர்பில் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் மூலம் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை, நேற்று நீதிமன்றத்தில் இடம் பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மொஹமட் லபார் தாஹிர் மற்றும் பி. குமாரன் ரத்னம் ஆகியோரடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில்,

மேற்படி மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

கொள்வனவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு கடவுச்சீட்டுகளில், சில பாதுகாப்பு பகுதி நீக்கப்பட்டுள்ளதாகவும் அதை மக்களுக்கு விநியோகிப்பதற்கு சில காலம் எடுக்கும் என்றும் அங்கு மனுதாரரான எபிக் லங்கா தனியார் நிறுவனம் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி பிரமோத் பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்ம ரத்ன இதன் போது கருத்து தெரிவிக்கையில், கொள்வனவு செய்யப்படவுள்ள புதிய கடவுச்சீட்டுடனான பாதுகாப்புத் தொகுதி மற்றும் கடவுச்சீட்டு கட்டணம் ஆகியவை தொடர்பில் கவனத்திற் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

மனுதாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அது தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்வதற்காக பதில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளரினால் ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தக் குழுவின் தீர்மானத்தை விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு, சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.


இந்த விடயங்களை பரிசீலித்த நீதிபதிகள் குழாம் மேற்படி மனு மீதான விசாரணையை, எதிர்வரும் நவம்பர் (06) விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிட்டுள்ளது.

அதே வேளை,ஐந்து மில்லியன் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதை தடுக்கும் வகையில் தற்போது விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவு தொடர்ந்து மேற்படி திகதி வரை அமுலில் இருக்கும் என நீதிபதிகள் குழாம் தெரிவித்துள்ளது.

# மாணவர்கள் தற்கொலை சம்பவங்கள்; ஆராய ஐவரடங்கிய குழு

## கல்வியமைச்சு நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாடசாலை மாணவிகள் தற்கொலை செய்து வரும் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக கல்வியமைச்சு ஐவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.

மேற்படி குழுவில் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் இருவர் மற்றும் பணிப்பாளர்கள் இருவரும் உள்ளடங்குவதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் கல்வியமைச்சு மேலும் தெரிவிக்கையில், சர்வதேச பாடசாலை மற்றும் தனியார் பாடசாலைகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்றும் அது கல்வியமைச்சால் கண்காணிக்கப்படுவ தில்லை என்றும் தெரிவித்துள்ளது.

அவை நிறுவன சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள காரணத்தினால் குறித்த சர்வதேச பாடசாலை மற்றும் மாணவர்களின் மரணம் தொடர்பான சம்பவங்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தமக்கு அதிகாரம் கிடையாது என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

அதே வேளை தாமரைக் கோபுரத்திலிருந்து தற்கொலை செய்து கொண்ட மாணவி தொடர்பில் அந்த கோபுரத்தின் முகாமைத்துவ நிறுவனம் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த வகையில் தாமரை கோபுரத்தை பார்வையிட வரும் அனைவரின் பாதுகாப்பு மற்றும் நலன்களை உறுதிப்படுத்தும் வகையில் பொலிசார் மற்றும் அதிகாரிகள் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

# இன்றைய பலன்கள்
## (10.10.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
சொந்த தொழில் செய்பவர்கள் தொழிலுக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழிலில் போட்டிகள் விலகி புத்துணர்ச்சி பெறுவார்கள்.

**ரிஷபம் :**
மற்றவர்கள் விஷயங்களில் ஒதுங்கி இருப்பது நல்லது. உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் கேட்டிருந்த இடமாற்றம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:**
உயர் அதிகாரிகள் உங்களிடம் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சொந்தத் தொழிலில் முன்னேற்றமான எதிர்காலத்தை சந்திப்பீர்கள்.

**கடகம்:**
தடை தாமதங்கள் விலகி முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தர்களுக்கு சக அதிகாரிகளின் ஒத்துழைப்பு இருக்கும்.

**சிம்மம்:**
உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் யோசனைப்படி புதிய பொறுப்புகளில் கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

**கன்னி:**
உத்தியோகத்தர்கள் பொறுப்புகளில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். அதிகாரிகளின் ஒத்துழைப்பு இருந்தாலும் பணிச்சுமை அதிகமாகவே இருக்கும்.

**7)துலாம்:**
உத்தியோகத்தர்கள் பதவி உயர்வு பெறுவர். சிலருக்கு சம்பள உயர்வும் கிடைக்கலாம். அலுவலகத்தில் கேட்டிருந்த சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:**
நிதி நிலையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டாலும் அதற்கேற்ற செலவுகளும் வந்து சேரும்.

**தனுசு:**
சொந்த தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சிப்பீர்கள்.

**மகரம்:**
முடியாது என கைவிட்ட வேலை ஒன்றை மீண்டும் செய்ய முற்படுவீர்கள். உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்த கோரிக்கைகள் தடையின்றி நிறைவேறும்.

**கும்பம்:**
உத்தியோகத்தர்கள் சுறுசுறுப்பாக பணியாற்றி உயர் அதிகாரிகளின் பாராட்டை பெறுபவர்.

**மீனம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் கடமைகளில் கவனமாக செயல்படுங்கள். பேச்சை குறைத்து நிதானமாக செயல்பட வேண்டிய நேரம் இது.

## வைத்தியர் அர்ச்சுனா...

வைத்தியசாலை அவர் மீது வழக்குத் தாக்கல் செய்தது.

இவ்வழக்கில், வைத்தியர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த போதும், கடந்த வழக்கு விசாரணையின்போது, பிணை நிபந்தனைகளை மீறியமை, ஆதாரங்களை சமர்ப்பிக்கத் தவறியமை உள்ளிட்ட காரணங்களால் பிணை இரத்து செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில், கடந்த வாரம் அர்ச்சுனாவின் சட்டத்தரணி நகர்த்தல் பத்திரம் மூலம் பிணை விண்ணப்பம் செய்திருந்தார். இதையடுத்து அதற்கான உத்தரவு இன்று (10) வியாழக்கிழமை வழங்கப்படுமென நீதிமன்றம் நேற்று திகதியிட்டது.

எனினும் நேற்று (09) மீண்டும் நகர்த்தல் பத்திரம் மூலம் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. இதன்போது, இனி வரும் காலங்களில் பிணை நிபந்தனைகளை மீற மாட்டேன் என, வைத்தியர் உறுதிளித்தையடுத்து இரண்டு சரீரப் பிணையில் செல்ல அனுமதியளிக்கப்பட்டது.

இதேவேளை வைத்தியருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் இன்று (10) எடுத்துக்கொள்ளப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மைத்திரிபால சிறிசேனவுக்கு...

விசாரிக்க தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் மஹிந்த அமரவீர, தேசிய அமைப்பாளர் துமிந்த திசாநாயக்க மற்றும் பொருளாளர் லசந்த அழகியவண்ண ஆகியோரினால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எஸ். துஷ்மந்த, பைசர் முஸ்தபா மற்றும் சரத் ஏக்கநாயக்க, கே.பி.குணவர்தன மற்றும் ஹெக்டர் பெட்டமகே முதலானவர்களை பிரதிவாதிகளாக உட்படுத்தி, கடந்த ஏப்ரல் மாதம் தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளை கவனத்திற் கொண்டு, இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் பிரதிவாதிகளுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை உத்தரவுகளை உறுதிப்படுத்தி இந்த இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2024 மார்ச் 30 இல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு எடுத்த தீர்மானங்களின்படி, பிரதிவாதிகளான சரத் ஏக்கநாயக்க, கே.பி.குணவர்தன மற்றும் ஹெக்டர் பெட்டமகே ஆகியோருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்ட பதவிகள் சட்டவிரோதமானது மற்றும் தன்னிச்சையானது என்று தீர்ப்பளிக்கக் கோரி இந்த மூன்று வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனுத்தார்கள் சார்பில் சட்டத்தரணிகளான பிராட்தன தயானந்த மற்றும் சச்சனா பெரேரா ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

வழக்கை தொடர்வது குறித்து பிரதிவாதிகளிடம் இருந்து அறிவுறுத்தல்கள் எதுவும் கிடைக்கவில்லை என, சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த மாவட்ட பிரதம நீதிபதி, கடந்த ஏப்ரல் மாதம் வழங்கப்பட்ட தடை உத்தரவு தொடர்பாக பிரதிவாதிகள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யத் தவறியதால், இடைக்கால உத்தரவுகளை பிறப்பித்து விசாரணைக்கான திகதியை அறிவித்தார்.

## பரிசுத்த பாப்பரசர்...(02 ஆம் பக்க தொடர்ச்சி)

இலங்கை எதிர்கொண்ட மிகவும் மோசமான அனுபவமான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்து தனது வருத்தத்தை தெரிவித்த உதைக்வே ஆண்டகை, இது தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடனும் நம்பகத்தன்மையுடனும் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முயற்சியையும் பாராட்டினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதி மற்றும் நியாயத்தை வழங்குவதற்காக, ஜனாதிபதியின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு வத்திக்கானின் முழு ஆதரவையும் வழங்குவதாக உதைக்வே ஆண்டகை உறுதியளித்தார்.

இலங்கை, வத்திக்கானுக்கிடையிலான வலுவான இராஜதந்திர உறவுகள் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை நாடு மற்றும் மக்களின் முன்னேற்றத்திற்காக இரு நாடுகளுக்குமிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதியும் வத்திக்கான் பிரதிநிதி உடன்பாடு தெரிவித்தார்.

## நுவரெலியா தபால் கட்டடம்...

இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இங்கு மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

நுவரெலியா தபால் நிலைய கட்டடத்தை பலவந்தமாக கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக் காலமாக முன்னெடுக்கப்பட்டன. நுவரெலியா நகரின் எழிலுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் அமைந்துள்ள மேற்படி தபால் நிலையத்தை, அங்கிருந்து அகற்றக் கூடாது என கோரி மக்கள் தொடர்ச்சியாக பெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

ஹோட்டல் ஒன்றை நிர்மாணிப்பதற்காக நுவரெலியா தபால் நிலைய கட்டடத்தை, தனியாரிடம் கையளிக்கும் நடவடிக்கை தொடர்பிலேயே அண்மைக்காலமாக பெரும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன.

அதனையடுத்து தற்போதைய அரசாங்கத்தில் புதிய ஜனாதிபதியின் கொள்கைகளுக்கிணங்க, அந்த கட்டடம் தொடர்பில் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அனைத்து தீர்மானங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. தபால் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்காக மாத்திரம் நுவரெலியா தபால் நிலைய கட்டிடத்தையும் அந்த காணியையும் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் நேற்று குறிப்பிட்டுள்ள அமைச்சர் விஜித ஹேரத் மேற்படி, கட்டிடம் தபால் திணைக்களத்தை தவிர வேறு எவருக்கும் கையளிக்கப்பட மாட்டாது என்றார்.

## லெபனானில் போர் பதற்றம்:...

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவிக்கின்றது.

இதன்படி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்ய வருவோர்,

செல்லுபடியாகும் விசா மற்றும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, தற்போதைய வேலை ஒப்பந்தம் அல்லது தற்போதைய பணியிடத்துடன் தொடர்புடைய வேலை வழங்குநரால் வழங்கப்பட்ட வேலை வாய்ப்புக் கடிதம் மற்றும் தற்போதைய வேலைவாய்ப்பு ஒப்பந்தம் அல்லது வேலை வாய்ப்புக் கடிதம் இல்லாதவர்கள் தூதரகத்தால் வழங்கப்பட்ட சுயஅறிக்கை படிவத்தை நிரப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பதிவுக்கு அரசாங்கக் கட்டணமாக 62 அமெரிக்க டொலர்கள் அறவிடப்படும்.

இந்தப் போர்ச் சூழ்நிலையில் வழங்கப்பட்ட விசேட நிவாரணக் காலம், வேலை பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சிறந்த சந்தர்ப்பம் எனவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தூதரகம் இதற்காக விசேடமாக 13.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை திறந்திருக்கும்.

அன்று முதல் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு வாரத்தின் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை இந்த சேவை கிடைக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையருக்கு கொரியாவில்...(02 ஆம் பக்க தொடர்ச்சி)

தென்கொரியாவும் கடந்த காலங்களில் இவ்வாறான பொருளாதார சவால்களை எதிர்கொண்டதாகவும், கொரியா பெற்ற அனுபவத்தை இலங்கையும் பயன்படுத்தி வெற்றிகொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

கொரியா எக்ஸிம் வங்கியின் முதலீட்டை அபிவிருத்தியின் முக்கிய அங்கமாகக் கருதி, இலங்கையின் கிராமப்புற வறுமையை ஒழிப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

## இழப்பீட்டு தொகையாக...

31,10,00,000 ரூபாவில் 6,23,45,502 ரூபா இதுவரை நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி சத்திரசிகிச்சைச் செலவுகள், குழந்தைகளின் கல்வி, நிரந்தர ஊனமுற்றோர் மற்றும் ஏனைய தேவைகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது. ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதற்காக இம்மாதம் 18ஆம் திகதியன்று இழப்பீடு விநியோகத்தை உயர்நீதிமன்றம் மீண்டும் மீளாய்வு செய்யும்.

இந்த வழக்கில் பிரதிவாதிகள் இழப்பீடாக வழங்கிய பெருந்தொகைநிதி,இவர்களுக்குஎங்கிருந்து கிடைத்தது என்பது குறித்து தற்போது பல கேள்விகள் எழுந்துள்ளன.

## நிலந்த ஜயவர்தனவுக்கு...

நிலந்த ஜயவர்தன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர நீதிமன்றில் இதுதொடர்பான விடங்களை முன்வைத்தார். உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய பொலிஸ் ஆணைக்குழு தமது கட்சிக்காரரிடம் புதிய விசாரணையை ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் இந்த மனுவை தொடர வேண்டிய அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய மனு தொடர்பான விடயங்களை உறுதி செய்வீர்களா? அல்லது விலக்கிக்கொள்வதா என்பது குறித்து பரிசீலனைக்காக நவம்பர் மாதம் 13ஆம் மனு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## மக்களின் எதிர்பார்ப்பை...(02 ஆம் பக்க தொடர்ச்சி)

முன்னேற்ற முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எனக்கு மனைவி, பிள்ளைகள் என்று எவரும் கிடையாது.

நான் ஒரு தனி மனிதன். இந்த நிலையில் எனது எதிர்காலத்தை இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் நாட்டு மக்களுக்காகவும் அர்ப்பணித்து செயல்படுவேன்.

என்னைப் பற்றிய எந்த உண்மையையும் மறைக்கவில்லை.

முழு உலகுக்கும் அதனை வெளிப்படுத்தியுள்ளேன். அந்த வகையில் ஐக்கிய ஜனநாயகக் குரல் இந்த நாட்டில் மக்களின் குரலாக எப்போதும் ஒலிக்கும்.

எனது வாழ்க்கையில் பெரும் சவால்களை எதிர்நோக்க நேர்ந்தது. இன்னும் பல சவால்களை எதிர்நோக்க வேண்டி யிருக்கும்.

அந்த நிலையில் என்னை பாதுகாத்துக் கொள்வதும் அவசியம். நாட்டுக்கு கறுப்பு வரலாறு உள்ளது. அதனை இல்லாதொழிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். நூற்றுக்கு நூறு வீதம் ஊழல்களை நிறுத்த முடியாது என்பது எமக்குத் தெரியும். ஆனாலும் அதற்காக முயற்சிப்போம்.

மூன்று உறுப்பினர்களுடன் நாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது.

அதே போன்று பாகிஸ்தானில் இம்ரான்கானும் 0 வில் தொடங்கி பின்னர் 230 ஆசனங்களை வெற்றி கொண்டதைக் குறிப்பிட வேண்டும்.

அதே போன்று நாமும் எமது கட்சியைக் கட்டி எழுப்ப முடியும்.

எமது கட்சிக்கு மக்களின் பேராதரவு உள்ளது. பாராளுமன்றத்திற்கு உள்ளே சிறப்புரிமையுடன் பேச வேண்டியதை வெளியில் பேசியமைக்காக நான் சிறைக்குச் செல்ல நேர்ந்தது.

## அமெரிக்க பசுபிக் கப்பற்படை...

பாதுகாப்பதற்காக அமெரிக்கா, இலங்கையிடையே காணப்படும் வலுவான பங்காண்மையை அட்மிரல் கேலர் மீள வலியுறுத்தவுள்ளார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் பாதுகாப்பு சவால்கள் குறித்தும் இதில் கலந்துரையாடப்படும்.

கடல்சார் கள விழிப்புணர்வு நடவடிக்கைகள்,பேரனர்த்தங்களிலான பதிலளிப்புக்களில் ஒத்துழைப்பை பலப்படுத்துவது

குறித்தும் இங்கு கருத்துக்கள் பரிமாறப்படவுள்ளன.

நாடுகடந்த அச்சுறுத்தல்களை முறியடிப்பதில் இலங்கைக்கு உதவி செய்வதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை மீள வலியுறுத்துவதற்காகவும், மற்றும் அமெரிக்க மற்றும் இலங்கை இராணுவங்களுக்கிடையே வளர்ந்து வரும் ஒத்துழைப்பு தொர்பாக கலந்துரையாடுவதற்காகவும் அட்மிரல் கேலர் சிரேஷ்ட இலங்கை அதிகாரிகளுடன் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தோபசிபிக் பிராந்தியத்தில் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் ஊக்குவிப்பதில் ஒரு முக்கிய பங்காளரான இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளை பலப்படுத்துவதில், அமெரிக்கா கொண்டுள்ள வலுவான உறுதிப்பாட்டை இவ்விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

அட்மிரல் ஸ்டீபன் கேலர் ஒரு கடற்படைக் குடும்பத்தில் வளர்ந்தார்.

அவர் போல்டர் நகரிலமைந்துள்ள கொலராடோ பல்கலைக் கழகத்திலிருந்து 1986 ஆம் ஆண்டில் பௌதீகவியலில் விஞ்ஞான இளமானிப் பட்டமொன்றைப் பெற்றுக்கொண்ட பட்டதாரியாவார். அங்கு அவர் Naval Reserve Officer Training Corps (NROTC)படைப்பிரிவினூடாக படைத்துறைப்பணிக்காக நியமிக்கப்பட்டார்.

1989 மார்ச் மாதத்தில் கடற்படை விமானியாக நியமிக்கப்பட்ட அவர், 600 தடைவைகள் விமானந்தாங்கிக் கப்பல்களில் விமானங்களைத் தரையிறக்கியது உட்பட 3,900 இற்கும் மேற்பட்ட மணி நேரம் F14 Tomcat மற்றும் F18 Super Hornet ஆகிய விமானங்களை ஓட்டியுள்ளார்.கடற்படைப் போர்க் கல்லூரியிலிருந்து தேசிய பாதுகாப்பு மற்றும் மூலோபாயக் கற்கைகள் தொடர்பான முதுமானிப்பட்டத்தினைப் பெற்றுள்ள அவர் Joint Staff College and the Navy Nuclear Programஇன் பட்டதாரியுமாவார்.

## ‘ஐக்கிய ஜனநாயகக் குரல்’ புதிய அரசியல் கட்சி உதயம்...

அணியின் முன்னாள் தலைவரும் பிரபல கிரிக்கெட் வீரருமான தில்ஷான், ரினாஸ் மொஹமட் ராசிக் ஆகியோர் கட்சியின் முக்கியஸ்தர்களாக தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

லைக்கா நிறுவனத்தின் அதிபர் சுபாஷ் கரனுடன் இந்த கட்சி இணைந்து செயற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டு மக்கள் மாற்றத்தை விரும்புகின்றார்கள் என்பதை அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் உணர்த்துகிறது.

இந்நிலையில் அத்தகைய மக்கள் எதிர்பார்ப்பை ஐக்கிய ஜனநாயகக் குரல் நிறைவேற்றும் என கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

ஊழல் மோசடிக்கு முற்றுப்புள்ளி, நாட்டின் பொருளாதார மேம்பாடு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுதல், புதிய வேலை வாய்ப்புகள், சிறந்த கல்வி மற்றும் சுகாதாரத் துறையைக் கட்டி யெழுப்புதல் என்ற முக்கிய நோக்கங்களை அடிப்படையாக வைத்து இந்த கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த புதிய கட்சிக்கு நாட்டு மக்களின் பேராதரவு கிட்டும் என தெரிவித்த கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க, பெருமளவு ஆசனங்களை எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி கொள்ள முடியும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

## வைரசால் உயிரிழந்த பன்றிகளின் இறைச்சிகள்...

குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த பகுதியிலுள்ள பண்ணைகளில் தினமும் சுமார் 50 பன்றிகள் உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றின் இறைச்சி குறைந்த விலைக்கு மனித நுகர்வுக்கு விற்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள பன்றிப் பண்ணைகளில் வைரஸ் தொற்று பரவி வருவதாக அரசாங்க கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் சிறுநீர், உமிழ்நீர் துளிகள் போன்றவற்றின் மூலம் பன்றிகளுக்கு பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

சுவாசிப்பதில் சிரமம், நுரையீரல் செயலிழப்பு, காய்ச்சல், பசியின்மை போன்றவை இந்த வைரஸ் தொற்றின் அறிகுறிகளென அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனால்,கருவுற்ற பன்றிகளுக்கு கருச்சிதைவு ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எஞ்சிய கழிவு உணவுகளை, தீவனமாக பன்றி பண்ணைகளுக்கு கொண்டு செல்வதால் இந்த வைரஸ் அதிகமாக பரவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இந்த வைரஸ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே நாடு எதிர்கொள்ளும் உடனடிச் சவால்!

## களனி பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சம்பத் ராஜபக்ஷவுடன் சந்திப்பு

வெளிவிவகாரக் கொள்கைகள் இலங்கையின் எதிர்காலத்தில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது பற்றிய விடயம் குறித்து பலர் ஆர்வமாகவும் விழிப்புணர்வுடனும் உள்ளனர். இலங்கையின் தற்போதைய வெளிவிவகாரக் கொள்கை குறித்து களனி பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சம்பத் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடிய போது, அவர் விரிவான தகவல்களை எமக்குத் தெரிவித்தார்.

***கேள்வி: நாங்கள் சரியான வெளியுறவுக் கொள்கையைக் கொண்டிருந்தோமா?***

பதில்: இலங்கையின் அணிசேரா வெளியுறவுக் கொள்கை பல தசாப்தங்களாக மாற்றத்திற்கு உட்பட்டது. நாம் மேற்கத்தேய நாடுகளுடனும் அண்டை நாடுகளுடனும் நல்லுறவைக் கொண்டிருந்த காலகட்டங்கள் நமது வர்த்தகத்திற்கும் பாதுகாப்பிற்கும் நன்மை தந்தன. இருப்பினும், வெளியுறவுக் கொள்கை முடிவுகள் மிகவும் பிற்போக்குத்தனமாக இருந்த சந்தர்ப்பங்களும் இருந்தன. சில பொருளாதார குழுக்களுடன் ஆழமான உறவுகளைப் பேணுவதன் மூலம் சிறந்த வர்த்தக ஒப்பந்தங்கள் அல்லது அபிவிருத்தி உதவிகளைப் பெற்றிருக்கலாம்.

***கேள்வி: ஒரு நாட்டுக்கான வெளியுறவுக் கொள்கையின் மதிப்பு அதன் அபிவிருத்தியை எவ்வாறு பாதிக்கிறது?***

பதில்: ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு வெளியுறவுக் கொள்கை அவசியம். நன்கு கட்டமைக்கப்பட்ட வெளியுறவுக் கொள்கை உலகளாவிய சந்தைகளுக்கான அணுகலை உறுதி செய்கிறது. அந்நிய நேரடி முதலீடு (FDI) ஈர்க்கப்படுகிறது. வளரும் நாடுகளுக்கு சர்வதேச உதவி முக்கியமாக பாதுகாக்கப்படுகிறது. ஒரு சமநிலையான அணுகுமுறையானது தொழில்நுட்பப் பரிமாற்றம், கல்விக்கான ஒத்துழைப்பு மற்றும் சுற்றுலா ஆகியவற்றுக்கான கதவுகளைத் திறக்கும். அவை அனைத்தும் சமூகபொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றன.

***கேள்வி: முறையான வெளியுறவுக் கொள்கையின் மூலம் வளர்ந்த நாடுகளையும், அக்கொள்கையானது அந்நாடுகளுக்கு எப்படி உதவியது என்பதையும் சுட்டிக்காட்ட முடியுமா?***

பதில்: உதாரணத்திற்கு சிங்கப்பூரை எடுத்துக் கொள்ளுங்கள். வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் வலுவான பொருளாதார உறவுகளை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தும் வெளித்தோற்ற வெளியுறவுக் கொள்கையை அது பின்பற்றியது. அமெரிக்கா, சீனா மற்றும் அண்டைய



ஆசிய நாடுகளுடன் மூலோபாய கூட்டணிகளை நிறுவுவதன் மூலம், சிங்கப்பூர் ஒரு சிறிய தீவிலிருந்து உலகின் முன்னணி நிதி மையங்களில் ஒன்றாக தன்னை மாற்றிக்கொண்டது. மற்றைய நாடு தென்கொரியா. கொரியப் போருக்குப் பிறகு தென் கொரியா ஜப்பான், சீனாவுடன் தனது தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டதோடு, ஒரு வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றியது, இது அமெரிக்கா போன்ற சக்திவாய்ந்த நாடுகளுடன் கூட்டணியை நாடியது. இந்த மூலோபாயம் தென்கொரியாவிற்கு பொருளாதார உதவி, தொழில்நுட்ப பரிமாற்றங்கள் மற்றும் அதன் ஏற்றுமதிக்கான திறந்த சந்தைகளைப் பெற உதவியது. இன்று இது உலகின் மிகவும் வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது.

ருவாண்டாவும் கூட வெளியுறவுக் கொள்கையின் மூலம் தன்னை வெற்றிகரமாக மீட்டெடுத்துள்ளது. தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் கணிசமான வளர்ச்சியை உருவாக்குவதற்கு அரசாங்கம் வணிக நட்பு சூழலை ஊக்குவித்து, உலகளாவிய நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

***கேள்வி: புதிய அரசாங்கத்தின் கீழ் இலங்கை எதிர்கொள்ளும் உடனடி வெளியுறவுக் கொள்கை சவால்கள் என்ன?***

பதில்: பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே மிக உடனடியான சவால். இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு குறைந்துள்ளது. நாடு தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களை பெரிதும் சார்ந்துள்ளது. வெளிநாட்டுக் கடன் மற்றும் முதலீட்டுக்கு சாதகமான நிலைமைகளைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சர்வதேச நற்பெயரை மீண்டும் கட்டியெழுப்ப புதிய அரசாங்கம் உழைக்க வேண்டும். முதலீட்டாளர் நம்பிக்கையை மீட்டெடுக்க அரசியல் ஸ்திரத்தன்மை, வெளிப்படையான நிர்வாகம் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளை கடைப்பிடிப்பது அவசியம். மற்றொரு சவாலானது இந்தியப் பெருங்கடலின் பிராந்திய புவிசார் அரசியலை வழிநடத்துவதாகும். இலங்கையின் மூலோபாய இருப்பிடம் எப்போதும் பிராந்திய விவகாரங்களில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. ஆனால், பிராந்திய இலட்சியங்களைக் கொண்ட இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா போன்ற பெரும் வல்லரசுகளுடன் உறவுகளை கவனமாக சமநிலைப்படுத்துவதே இதன் பொருள்.

***கேள்வி: சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான வெளிநாட்டு உறவுகளை புதிய அரசாங்கம் எவ்வாறு நிர்வகிக்க வேண்டும்?***

பதில்: இந்தியா மற்றும் சீனாவுடனான இலங்கையின் உறவுகள் உண்மையில் நுட்பமானவை. இலங்கையின் நெருங்கிய அண்டை நாடான இந்தியா, எங்களுடன் குறிப்பிடத்தக்க வரலாற்று, கலாசார, பொருளாதார உறவுகளைப் பேணி வருகிறது. அதேவேளை, இலங்கையின் அபிவிருத்தியில் சீனாவும் முக்கிய பங்காற்றியுள்ளது. அதே நேரத்தில் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கு குறித்து இந்தியா எச்சரிக்கையாக உள்ளது.

புதிய அரசாங்கம் அணிசேரா அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும், ஆனால் மூலோபாய சுயாட்சியைப் பராமரிக்க வேண்டும். இந்தியாவையோ அல்லது சீனாவையோ அந்நியப்படுத்த இலங்கை விரும்பவில்லை. நமது பொருளாதார மீட்சி மற்றும் பிராந்திய பாதுகாப்பிற்கு இரு நாடுகளும் முக்கியமானவை. தேசிய நலன்களைப் பாதுகாக்கும் அதேவேளையில் இரு குழுக்களுடனும் நல்லுறவைப் பேணுவது முக்கியமானது. வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு மூலம் இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத்துவது ஒரு நடைமுறை அணுகுமுறையாகும்.

***கேள்வி: புதிய அரசாங்கத்தின் கீழ் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை வகுப்பதில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற பலதரப்பு அமைப்புகள் என்ன பங்கை வகிக்கும் என நீங்கள் நம்புகிறீர்கள்?***

பதில்: இந்த நேரத்தில் இலங்கைக்கு பலதரப்பு அமைப்புகள் மிகவும் முக்கியமானவை. உதாரணமாக, ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு ஒரு முக்கியமான தளமாக மாறியுள்ளது. குறிப்பாக போருக்குப் பிந்திய நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் பிரச்சினைகள். சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கும், சர்வதேச தரத்தை நிலைநிறுத்துவதற்கான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதற்கும் இலங்கை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தைப் பொறுத்தவரையில் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கி வருகின்றது. IMF நிர்ணயித்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், நிதி ஒழுக்கம், நிர்வாக சீர்திருத்தங்கள், சமூக நலத்திட்டங்கள் உள்ளிட்ட உள்நாட்டு கொள்கைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

***கேள்வி: புதிய அரசாங்கம் தனது வெளியுறவுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் தவிர்க்க வேண்டிய ஆபத்துகள் எவை?***

பதில்: ஏதேனும் ஒரு நாடு அல்லது நாடுகளின் குழுவை அதிகமாக நம்புவது முக்கிய ஆபத்துகளில் ஒன்றாகும். இலங்கை கடந்த காலங்களில் சீனாவுடனும் சில சர்வதேச நடவடிக்கையாளர்களுடனும் பெரிதும் இணைந்துள்ளது. புதிய அரசாங்கம் அதன் இராஜதந்திர மற்றும் பொருளாதார கூட்டணிகளை பல்வகைப்படுத்தும் ஒரு சமநிலையான அணுகுமுறையை இலக்காகக் கொள்ள வேண்டும். மனித உரிமைகள் மற்றும் நிர்வாகத்தைப் பற்றிய சர்வதேச சமூகத்தின் கவலைகளைப் புறக்கணிப்பது மற்றொரு ஆபத்து. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறினால் பொருளாதாரத் தடைகள், வர்த்தகச் சலுகைகள் நீக்கம் போன்றவற்றை எதிர்கொள்ள நேரிடும். சர்வதேச நம்பகத்தன்மையை இழக்க நேரிடும். அது தற்போதைய பொருளாதாரத்தைப் பாதிக்கும். உள்நாட்டு அரசியல் அழுத்தங்களால் இயக்கப்படும் குறுகிய கால, எதிர்வினையான வெளியுறவுக் கொள்கை முடிவுகளை அரசாங்கம் தவிர்க்க வேண்டும்.

**ஷ்யாமா சமரசிங்க**
(தமிழில்: வீ.ஆர்.வயலட்)
புகைப்படங்கள் – நிஷங்க விஜேரத்ன

# இளைஞனின் உயிரை காப்பாற்றிய விடுதி முகாமையாளர்

## நோர்வூட்டில் சம்பவம்

*(மஸ்கெலியா தினகரன் நிருபர்)*

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காசல் ரீ நீர்த்தேக்கத்தில் மூழ்கிக் கொண்டிருந்த இளைஞனொருவனை அங்கிருந்த நபரொருவர் கண்டு காப்பாற்றியுள்ளார்.

இச்சம்பவத்தில் நீரில் மூழ்கிய இளைஞன் மயிரிழையில் உயிர் தப்பியதாகச் சொல்லப்படுகிறது. இளைஞனின் அபயக்குரல் கேட்டு, நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள சுற்றுலா விடுதியொன்றின் முகாமையாளரே ஓடிச் சென்று காப்பாற்றியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

காசல் ரீ நீர்த்தேக்கத்திலிருந்து அலறல் சத்தம் கேட்டது. நான் உடனே அங்கு சென்று பார்த்த போது நீர்த்தேக்கத்தில் இளைஞனொருவன் நீரில் மூழ்கிக் கொண்டிருப்பதை கண்டேன். உடனே இறங்கி அவரை காப்பாற்றியதாக அவர் தெரிவித்தார்.









மாத்தளை மாவட்டத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடவுள்ள எட்டு வேட்பாளர்களின் பெயர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது. கமகெதர திஸாநாயக்க, தினேஷ் ஹேமந்த பெரேரா, கலாநிதி ஜே. ரத்நாயக்க, அவுஃப் ஹாஜியார் (ஷாஷி விஜேந்திரா), பி.எஸ்.ஜே. பியான்வில, தீப்தி வாசலகே, ஆறுமுகம் கிறிஸ்டி கல்யாண குமார், வசந்த ராஜமந்திரி ஆகியோரே இவ்வாறு போட்டியிடவுள்ளனர்.
(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# சிறைச்சாலை அதிகாரிகள் 4 பேர் பணியிலிருந்து இடைநிறுத்தம்

*(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)*

எம்பிலிபிட்டிய அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகள் நால்வர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த அக்டோபர் மாதம் 1 ஆம் திகதி சிறைச்சாலையிலிருந்து நான்கு கைதிகள் தப்பிச் சென்றமை தொடர்பில் இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சம்பவதினம் சிறைச்சாலையின் அதிகாரிகள் இருவர் 10 கைதிகளை சிறைச்சாலையின் திறந்த வெளிப் பகுதியில் சுத்திகரிப்பு பணிகளில் ஈடுபடுத்தியுள்ளனர். இச்சந்தர்ப்பத்திலேயே கைதிகள் நால்வர் தப்பிச் சென்றுள்ளனர்.

எனினும் சிறைச்சாலை அதிகாரிகளின் அனுமதியின்றி இவ்வாறு அதிகாரிகள், கைதிகளை திறந்த வெளியில் வேலைக்கு அமர்த்தியுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கைதிகள் நால்வரும் 22 வருடங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்தவர்கள் என தெரியவருகின்றது. இதுதொடர்பான விசாரணைகளை சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதி

## ஐந்து பெண்கள் கைது

*(நானுஓயா நிருபர்)*



நுவரெலியாவில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டதுடன் அங்கிருந்த ஹோட்டல் உரிமையாளர் உட்பட ஐந்து பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நுவரெலியா சினிசிட்டா மைதானத்திற்கு முன்பாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பலவருடங்களாக மசாஜ் நிலையம் என்ற போர்வையில் குறித்த விபசார விடுதி இயங்கி வந்துள்ளது. எனினும் இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றின் அடிப்படையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது விடுதியில் பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுவதாகவும் தகவல் கிடைத்துள்ளது. அதற்கமையவே பொலிஸார் இதுதொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளனர். இச்சம்பவத்தில் நுவரெலியா பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் பிரதான சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட பெண்கள் கொலன்னாவ, ஹசலக்க, கடவத்தை, வெலிமடை, ஹோமாகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 32-47 வயதுக்குட்பட்டவர்கள் என தெரிய வந்துள்ளது.

மேலும், அவர்கள் நேற்று (09) நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகினார் ஆனந்தகுமார்; எழுத்துமூலம் அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரான சுப்பையா ஆனந்தகுமார் கட்சியில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளார். இதுதொடர்பில் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும், கட்சியின் பொதுச்செயலாளருக்கும் அவர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

'2020 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்த பின்னர் கட்சியை விட்டு பலரும் வெளியேறினர். எனினும், கட்சியின் வளர்ச்சிக்காக கஷ்டமான காலக்கட்டத்திலும் நாம் தான் களத்தில் இறங்கி செயற்பட்டிருந்தோம்.



கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் கூட, எவ்வித கொடுப்பனவும் பெறாமல் தான் பணிகளை முன்னெடுத்து வந்தோம்.

அரச வாகனங்களைக் கூட பயன்படுத்தியது கிடையாது. அரச வளங்களையும் பெற்றது கிடையாது. எனினும், கட்சியிலுள்ள ஒரு சிலரின் செயற்பாடுகள் திருப்தியளிக்கும் வகையில் இல்லை. அதுமட்டுமல்ல மக்களால் நிராகரிக்கப்பட்ட, ராஜபக்ஷக்களுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளுக்கு இரத்தினபுரி மாவட்டத்தில் இம்முறையும் இடமளிக்கப்பட்டுள்ளது. இதனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

எனவே, இனியும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் பயணத்தை தொடரப்போவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளேன். அந்தவகையில் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் பதவியை துறக்கின்றேன். கட்சியில் இருந்தும் வெளியேறுகின்றேன் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## அடகுவைத்து மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

DFCC வங்கி பி.எல்.சி.யின் சகல கிளைகளிலும் 2023 ஓகஸ்ட் 07 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 2024 செப்டெம்பர் 06 ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் பின்வருமாறு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| உத்தேச திகதியும் நேரமும் | இடம் |
|---|---|
| 2024 ஒக்டோபர் 12 மு.ப. 10.00 | **வெள்ளவத்தை கிளைக் கட்டிடம்** இல. 02, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை. **நீர்கொழும்பு கிளைக் கட்டிடம்** இல. 454, பிரதான வீதி, நீர்கொழும்பு. |

மேற்குறிப்பிட்ட இடங்களில் ஏதேனுமொன்றில் ஏல விற்பனையை நடத்தவும் ஏல விற்பனைகளை இரத்துச்செய்ய அல்லது ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

உதவி துணைத் தலைவர் - நுகர்வோர் சேவைகள்
DFCC வங்கி பி.எல்.சி.,
இல. 73/5, காலி வீதி, கொழும்பு 03.

0112 350000 www.dfcc.lk
ஃபிச் ரேட்டிங் A-(lka)
இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கி
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு


## விசேட அறிவித்தல்

18/2020 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றுநிருபம் மற்றும் 01/2023 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் இரண்டாம் மொழி தேர்ச்சியுடன் தொடர்புடைய சிங்கள மற்றும் தமிழ் மொழிக் கற்கைகளை நடத்தும் சட்டரீதியான உரிமை இருப்பது தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கும் மற்றும் அரசகரும மொழி திணைக்களத்திற்கும் மாத்திரமாகும். தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்தி வேறு வெளி நிறுவனங்கள் மற்றும் நபர்கள் மேலேகுறிப்பிட்ட கற்கைகளை நடத்துவதாக பல்வேறு பரப்புரைகளை மேற்கொள்வதால் அந்தப் போலியான பரப்புரைகளுக்கு ஏமாற வேண்டாம் என இத்தால் அறியத்தருகிறேன். மேலும் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகின்ற கற்கைகளுக்கான கட்டணங்கள் இலங்கை வங்கி, ஹோமாகமை கிளையின் 7442918 ஆம் இலக்கம் கொண்ட கணக்கிற்கு மாத்திரம் வைப்பிடும்படியும், வேறு நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட கணக்குகளுக்குப் பணத்தை வைப்பிட வேண்டாம் எனவும் அறியத்தருகிறேன். இது தொடர்பிலான விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்ள தேவை எனின் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கும்படியும் அறியத்தருகிறேன்.

**011-2086420**
**011-2172673**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**
**இலக்கம் 321/1, ஹைலெவல் வீதி**
**மாகும்புர, பன்னிபிட்டிய**


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2024.10.08
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5619 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,935,132.00
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 9 7 5 3 3 0

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 194 — ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 5 3 3 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3861 — சீட்டிழுப்பு திகதி 2024.10.08 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,504,617.20
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 41 42 52 55 — விசேட எழுத்து R — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 70419

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1967 — 2024.10.08 — 22192 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 448,829,354.00
ஆங்கில எழுத்து H — சுப்பர் இலக்கம் 15 — வெற்றி இலக்கங்கள் 10 54 66 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் 445
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 2 3 0 8 7 7
L7 எழுத்து A — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 20,877,302.96

ராசி சுப பலன் — திகதி 2024.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் 928 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,525,160.80
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 02 11 19 27 — தனயோக இலக்கம் 53484 — நாளுக்கான விதி எண் 26

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1649 — 2024.10.08 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,862,436.48
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 06 39 40 69 — விசேட எழுத்து X — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 75047

# நகர்வலம்



சட்டவிரோதமாக நாட்டில் தங்கி இருந்து

# இணைய வழிமூலம் நிதி மோசடியில் ஈடுபட்ட 20 சீன பிரஜைகள் கைது!

## பாணந்துறை வடக்கு கொரக்கான பகுதியில் சம்பவம்

**களுத்துறை சுழற்சி நிருபர்**

சட்டவிரோதமாக நாட்டில் தங்கி இருந்து இணையவழி மூலம் நிதி மோடியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் 20 சீன பிரஜைகளை பாணந்துறை வடக்கு பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நேற்று (9) கைது செய்துள்ளனர்.





பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலைய பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவ லக்மால் தலைமையில் பாணந்துறை வலய குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாருடன் இணைந்து பாணந்துறை வடக்கு, கொரக்கான, தம்மானந்த வீதியில் இலக்கம் 54 இல் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த 20 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது இவர்களுடன் ஹோட்டலில் தங்கி இருந்த மேலும் 18 பேர் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது

இச்சுற்றிவளைப்பில் 436 மடிக் கணினிகள், 133 சாஜர்கள், 01 மேசை கணினி, 13 ரவுட்டர்கள், யூ.எஸ்.பீ. கேபிள்கள், 21 கையடக்க தொலைபேசிகள், 3 பிரிண்டர்ஸ் உட்பட மேலும் பல பொருட்களை பொலிஸார் கைப்பற்றி உள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 24 - 46 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் தெரியவருகின்றது.

மேற்படி ஹோட்டல் ஒரு வருட காலத்துக்கு மாதாந்தம் 20 இலட்சம் ரூபாய் குத்தகை அடிப்படையில் நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை மீள் புதுப்பிக்கப்படும் என்ற அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருந்ததாகவும் தெரிய வருகின்றது.

மேற்படி சீன பிரஜைகள் இதற்கு முன்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தங்கி இருந்து சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வெளிநாட்டு பிரஜைகளுடன் எவரும் இணைந்து இணையவழி நிதி மோசடிகளில் ஈடுபட்டுள்ளனரா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர் செய்வதற்கும் பாணந்துறை வடக்கு பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மேல் மாகாண ஆளுநருடன் சந்திப்பு



மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுஃப் அவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (08) மேமன் சங்கத்தின் ஏற்பாட்டில் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள மேமன் சங்க தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது புரவலர் ஹாஷிம் உமர் மேல் மாகாண ஆளுநரை பாராட்டி கௌரவித்தார்.

## நீரோடைக்குள் விழுந்து 4 வயது சிறுமி உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் தங்கொட்டுவ, யோகியான வேகொட பகுதியில் பாலர் பாடசாலை மாணவியொருவர் நேற்று முன்தினம் (8) தனது வீட்டிற்கு பின்புறமாக உள்ள பாதுகாப்பற்ற நீரோடைக்குள் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அனன்யா பரமி (வயது 4) எனும் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தங்கொட்டுவ பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த சிறுமி பாலர் பாடசாலைக்கு சென்றுவிட்டு தனது பாட்டியுடன் வீட்டுக்கு திரும்பியதாகவும், வீட்டுக்கு வந்த சிறுமியை குளிப்பாட்டுவதற்காக பாட்டி சுடுநீர் தயார் செய்ய சென்றுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாட்டி அடுப்பில் சுடுநீர் வைப்பதற்காக சென்ற சமயம் குறித்த சிறுமி யோகட் சாப்பிட்டுக்கொண்டிருந்த நிலையில், வெளியே சென்று தனது வீட்டுக்கு பின்பக்கமாக உள்ள பாதுகாப்பற்ற நீரோடைக்குள் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

குறித்த சிறுமி வீட்டில் இருந்த போது, சிறுமியின் பொற்றோர்கள் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.



எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவுள்ள அஷ்ஷெய்க் முனீர் முளப்பர், வேட்பு மனுப்பத்திரத்தில் கையொப்பமிடுவதைப் படத்தில் காணலாம்.

## குடும்பத் தகராறு; இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

நொச்சியாகம பொலிஸ் பகுதிக்குட்பட்ட வல்பலகம பிரதேசத்தில் கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட குடும்ப தகராறு காரணமாக கணவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் (07) இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

நொச்சியாகம வல்பலகம பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 38 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் மதுபோதையில் தனது மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன் போது மனைவி உயிரிழந்த கணவனின் வாயை துணியால் கட்ட முற்பட்ட போது கணவன் மயக்கமடைந்துள்ளார். இதனையடுத்து மயக்கமடைந்த கணவனை வைத்தியசாலைக்கு கோண்டு சென்ற பின்னர் கணவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மனைவி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

## சதீஷ் – சீமான் சந்திப்பு



மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் கலாநிதி சதீஷ் குமார் சிவலிங்கம் நேற்று முன்தினம் (08) சென்னையில் நாம் தமிழர் கட்சியின் நிறுவனத் தலைவர் சீமானை மரியாதையின் நிமித்தமாக அவரது இல்லத்தில் சந்தித்தார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் இடம்பெற்றுள்ள சூழ்நிலையில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு காணும் முயற்சியில் இந்திய அரசாங்கத்தின் மூலமாக அழுத்தங்களை ஏற்படுத்தும் வகையில் தமிழக அரசியல் கட்சிகளின் ஒருமித்த கருத்தாக்கம் துரிதமாக்கப்படுவதற்கு நாம் தமிழர் இயக்கம் முன்வர வேண்டுமெனவும் சீமானிடம் சதீஷ் சிவலிங்கம் கேட்டுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய துணைத்தூதுவர் ஹம்பாந்தோட்டை இக்ரா பாடசாலைக்கு நேரடி விஜயம்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டையிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் துணைத்தூதுவர் ஹர்விந்தர் சிங், ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு (08) வருகை தந்தார்.

தூதுவரை பாடசாலையின் அதிபர் எம். இஸட். எம். இர்பான் தலைமையிலான ஆசிரியர்கள், மாணவர்களும் வரவேற்றனர்.

பாடசாலைக்கு வருகை தந்த தூதுவர் பாடசாலையின் சுற்றாடலை அழகுபடுத்துவதற்காக மலர்க் கன்றுகளை அன்பளிப்பு செய்ததோடு, அதிபர் மற்றும் மாணவர்களுடன் இணைந்து பாடசாலை வளாகத்தில் ஞாபகார்த்தமாக நட்டி வைத்தார். இதன்போது ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றிய தூதுவர், ஹம்பாந்தோட்டை இந்திய துணைத் தூதரகத்தினால் தென் மாகாண பாடசாலைகளில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் பாடசாலையின் அடைவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். தூதுவருடன் தூதரக அதிகாரிகள் பலரும் இவ் விஜயத்தில் கலந்துசிறப்பித்தனர்.





பொதுத்தேர்தலில் புத்தளம் மாவட்ட தேசிய மக்கள் சக்தி அபேட்சகர் பட்டியலில் போட்டியிடும் மாவட்டத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான எம்.ஜே.எம் பைசல் வேட்பு மனுவில் கையெழுத்திடுவதை படத்தில் காணலாம்.

## சிறுவர், ஆசிரியர் தின நிகழ்வுகள்





சர்வதேச மனித உரிமைகள் உலகளாவியப்பணி மற்றும் தேடல் எப்.எம். ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர் தின மற்றும் ஆசிரியர் தின நிகழ்வுகள் புத்தளம் மதவாக்குளம் முஸ்லிம் தேசியக் கல்லூரியில் அதிபர் என்.எல்.நஜீம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. 'ஆஷ் பௌண்டேஷன்' அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கையின் இளம் ஊக்குவிப்பு பேச்சாளரான சைபுல்லாஹ் பஸ்ரின் அதிதியாக கலந்து சிறப்பித்ததோடு பல்வேறு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளும் இதன்போது நடைபெற்றன.

## ஐ.ம.கூ. சார்பில் இம்முறை என்.டி.எம். தாஹிர் போட்டி

**புத்தளம் தினகரன் நிருபர்**



ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பாக (தொலைபேசி சின்னத்தில்) கற்பிட்டியின் முன்னாள் பிரதேச சபை தவிசாளரும், வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான என்.டி.எம். தாஹிர் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடுகிறார்.

## தாருல் உலூம் மத்ரஸாவில் குர்ஆனிய கற்கைகள் ஆரம்பம்

### முக்கிய பிரமுகர்களும் பங்கேற்பு

**கொழும்பு தினகரன் நிருபர்**



தெஹிவளை பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் பள்ளிவாசலில் இயங்கும் தாருல் உலூம் மத்ரஸாவினால் முற்றிலும் இலவசமாக இஜாஸா எனும் குர்ஆனிய கற்கையை நேற்று (06) உத்தியோகபூர்வமாக பள்ளிவாசலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பள்ளிவாசலின் தலைவர் இஸ்மாயில் ஹாஜியார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், ஏனைய பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிநிதிகள் , மஸ்ஜிதுகளின் சம்மேளன உறுப்பினர்கள், உலமாக்கள் ,நலன் விரும்பிகள் ,ஜமாஅத்தினர்கள் , தாருல் உலூம் மத்ரஸா மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்

## அல் குர்ஆன் மனனம்; மாகாண மட்டப் போட்டிகள் 26ஆம் திகதி வெலிகமவில்

**வெலிகம தினகரன் நிருபர்**

அகில இலங்கை ஜம்இய்யதுல் குர்ராவின் ஏற்பாட்டில் தேசிய ரீதியிலான அல் குர்ஆன் மனனப் போட்டிகளின் முதல்கட்ட மாகாண மட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இத் தொடரின் தென் மாகாண மட்டப் போட்டிகள் எதிர்வரும் 26ம் திகதி வெலிகம மத்ரஸதுல் பாரி அறபுக் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

போட்டியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள ஆண்கள், மத்ரஸாக்களின் போட்டியாளர்கள் எதிர்வரும் 21ம் திகதிக்கு முன்னர் Google Form ஊடாக பதிவு செய்யுமாறு வேண்டப்படுகின்றனர். இதில் களுத்துறை மாவட்டம் முதல் தென் மாகாணம் முடியும் வரையுள்ள மத்ரஸாக்களின் மாணவர்கள் கலந்து கொள்ள முடியும். இப் போட்டிகள் மூன்று கட்டமாக இடம் பெறவுள்ளன.

12வயதுக்கு கீழ் 5 ஜுஸ்களும் 16 வயதுக் குட்பட்டோர்களுக்கு 15 ஜுஸ்களும், 16 - 23 வயதுக்கு உட்பட்டோர்களுக்கு 30ஜுஸ்களுமாக இப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

## கொழும்பு ஹமீட் அல் ஹுசைனியில் 140ஆவது வருட நடைபவனி





**ருஸைக் பாரூக்**

கொழும்பு ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி செயற்குழு மற்றும் Light for Life அமைப்பு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த 140 வருட நடைபவனி சின்னம் அங்குரார்ப்பண நிகழ்வு கல்லூரி வளாகத்தில் செவ்வாய்க் கிழமை (01) காலை கல்லூரி அதிபர் எம். ஆர்.எம். ரிஸ்கி தலைமையில் இடம்பெற்றது.

வைபவத்தில் கல்லூரி அதிபர் எம்.ஆர். எம். ரிஸ்கி மற்றும் பழைய மாணவர் சங்க செயலாளர் இம்தியாஸ் இல்யாஸ் ஆகியோர் கல்லூரி கொடி மற்றும் தேசியக் கொடியை ஏற்றிவைத்தனர். மேலும் அதிபர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து நடைப்பயண சின்னத்தை வெளியிட்டு வைத்தனர். அத்தோடு இந்த நடைபயணம் இந்த ஆண்டு நவம்பர் இறுதியில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பிரதி அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் சப்ராஸ் பைசல், பழைய மாணவர் சங்க பொருளாளர் அஸீன் சாஹிர் , பழைய மாணவர் சங்க மற்றும் கல்லூரி அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# வடக்கின் உதயம்

# வடக்கு காணிப் பிணக்குகளை தீர்க்க விசேட ஆணைக்குழு

## ஆளுநர் வேதநாயகன் நடவடிக்கை

யாழ். விசேட நிருபர்



வடக்கில் காணி தொடர்பான பிணக்குகளை தீர்ப்பதற்கு விசேட ஆணைக்குழுவொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண காணிப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில், ஆளுநரின் செயலகத்தில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்றபோதே அவர் இதனை தெரிவித்தார்.

கலந்துரையாடலில் ஆளுநர் கருத்து தெரிவிக்கையில்,

ஏழை மக்களுக்கான உரிய காணிகள் அவர்களுக்கு கிடைக்க வேண்டும். காணி வழங்குவதில் இடம்பெறும் முறைகேடுகள், அநீதிகள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

சில மாவட்டங்களில் மட்டுமே காணி அலுவலர்கள் சிறந்த முறையில் பணியாற்றுகின்றனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் காணி தொடர்பான பிரச்சினைகள் அதிகமாகவுள்ளமையினால் அங்கு விசேட கவனம் எடுக்கவேண்டும்.

அத்துடன், காணி தொடர்பான பிணக்குகளை தீர்ப்பதற்கு விசேட ஆணைக்குழு உருவாக்கவேண்டும்.

பொதுமக்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் அரச உத்தியோகத்தர்கள் சேவையாற்றவேண்டும். மிக விரைவாகவும் அன்பானதாகவும் தரமானதாகவும் சேவைகளை வழங்க வேண்டும்,

சில அலுவலர்கள் நடைமுறைப்படுத்தக் கூடிய விடயங்களை செய்யாமலும் நடைமுறைப்படுத்தக் கூடாத விடயங்களை செய்கின்றனர். அவ்வாறானவர்கள் தொடர்பான முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறுகின்றன. அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை பொதுமக்கள் சிறுசிறு பிரச்சினைகளுக்காக வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு வருகை தருகின்றனர். அவ்வாறான பிரச்சினைகளை தமது பிரதேசத்திலுள்ள உரிய அலுவலகங்களுக்கு சென்று சேவைகளை பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மரத்தை வெட்டுவதற்கு பெற்றோர் கடும் எதிர்ப்பு



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்து கல்லூரியின் வளாகத்திலுள்ள மலைவேம்பு மரத்தை வெட்டுவதற்கு மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த மரத்தின் கொப்புக்களால் ஆபத்து என தெரிவித்து, கொப்புகளை வெட்டுவதற்கு மரக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தது.

எனினும், கொப்புகளோடு, மரத்தையும் அடியோடு வெட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு பெற்றோர்களும் பொதுமக்களும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து பெற்றோர் கருத்து தெரிவிக்கையில், இந்த மரம் பல்லாண்டு காலமாக பாடசாலை வளாகத்தில் அமைந்திருக்கின்றது. மரத்தின் கொப்புகள் ஆபத்து என்றால் கொப்புகளை வெட்டலாம், ஆனால் எதற்காக மரத்தினை வெட்டுகிறார்கள் என கேள்வியெழுப்பினர். இது தொடர்பாக, கிராம சேவகர், வலிகாமம் மேற்கு பிரதேச செயலர், மரக் கூட்டுத்தாபனம் ஆகியன அதிக கவனம் செலுத்தி, இம் மரத்தினை வெட்டும் பணியை நிறுத்தவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசிய அரசியலை காப்பாற்ற எவருமே இல்லை

## தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கம்

மன்னார் குறூப் நிருபர்



'தமிழ்த் தேசிய அரசியலை காப்பாற்றக் கூடிய தலைவர்கள் எவரும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தென்படவில்லை என்பதே உண்மை என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தலைமையற்ற வெறுமைக்குள் சிக்கித் தவிக்கிறது தமிழினம். உதட்டளவில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஐக்கியப்பட்டு குறைந்தபட்சம் தேர்தல் கூட்டாவது அமைத்திருக்கலாம்.

பதவி ஆசையினாலும், செருக்காலும், ஆளுக்குஆள் தனிவழி சென்று தமிழ்த்தேசியத்தை கூறுபோட கங்கணம் கட்டி நிற்கிறார்கள்.

இனத்தின் விடுதலைக்கான அரசியலை முன்னெடுப்பதில் அக்கறையின்றி சுயநலமாக சிந்திக்கிறார்கள். தமிழ்க் கட்சிகள் தமக்குள் ஆளைஆள் அகற்ற முனைகின்றன.

இவர்கள் தனித்தனியாக தேர்தலை சந்திப்பது என்பது முடிவில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். தமிழ்த் தேசிய அரசியலை இனி எவராலும் காப்பாற்ற முடியாது. அதற்கான தலைவர்கள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் எவரும் தென்படவில்லை என தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணி

# தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு ஆகியவற்றை முன்னிறுத்தியே தேர்தலில் போட்டியிடும்

## சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ். விசேட நிருபர்

தன்னாட்சி தற்சார்பு தன்னிறைவு ஆகிய மூன்று அடிப்படை விடயங்களை முன்வைத்தே தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் இல்லத்தில் நேற்று (09) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இதனை தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் கூட்டணி, இளைஞர்களையும், அனுபவமுள்ளவர்களையும் வேட்பாளராக நியமித்துள்ளோம். நான் முன்பே கூறியதைபோன்று தேர்தல் அரசியலிலிருந்து விலகியுள்ளேன்.



எமது வேட்பாளர்களின் சராசரி வயது 42 ஆகும். இளம் வேட்பாளர்கள் என இவர்களை சொல்லலாமா என சிலர் கேட்கின்றார்கள். அரச அலுவலர்கள் 60 வயது வரை வேலை செய்கிறனர். எனவே 60 வயதுக்கு உட்பட்டவர்களும் இளையோர் தான்.

2018ஆம் ஆண்டு தொடங்கிய எமது கட்சியில், யாப்பில் தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு ஆகிய மூன்று அடிப்படை காரணங்களை முன்வைத்துள்ளோம். அதனடிப்படையிலேயே எமது கட்சி தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இம்முறை தேர்தலிலும் அதனை முன்னிறுத்தியே போட்டியிடுவோம்.

எங்களின் கொள்கைகளை நாங்கள் எமது கட்சியின் யாப்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளோம். அதன் அடிப்படையில் செயற்படுகிறோம்.

புதிய அரசாங்கம், புதிய அரசியல் யாப்பை உருவாக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தமிழ் மக்கள் 300 வருடங்களுக்கு மேலாக வசித்து வருவதனால் எங்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கிறது. எமது சுயநிர்ணய உரிமைகளை புதிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், அவர்களுடன் இணைந்து செயற்பட நாம் தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுஜன பெரமுனவில் யாழில் களமிறங்கும் ஜி.காசிலிங்கம்



பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜி. காசிலிங்கம் போட்டியிடவுள்ளார்.

அதற்கான வேட்புமனுவில், பொதுஜனபெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் ஜி. காசிலிங்கம் நேற்று புதன்கிழமை (09) கையொப்பமிட்டார்.

# வேட்புமனுவை தாக்கல் செய்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி




யாழ். விசேட நிருபர்

பாராளுமன்ற தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, அதன் வேட்புமனுவை சமர்ப்பித்துள்ளது.

அதன்படி, யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று (09) ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினர் தமது வேட்புமனுவை கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில், த. சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், குருசாமி சுரேந்திரன், எம்.கே சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், சி. சிவகுமார், சசிகலா ரவிராஜ், சிவநாதன் நவீந்திரா, ஜெ.ஜெனார்த்தனன் ஆகியோர் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனநாயக இடதுசாரி முன்னணி வன்னியில் வேட்புமனுத்தாக்கல்

வவுனியா விசேட நிருபர்



வன்னி மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுவினை, ஜனநாயக இடதுசாரி முன்னணி நேற்று (09) தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் வன்னித்தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய இருகட்சிகளும் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில், வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் ஜனநாயக இடதுசாரி முன்னணி நேற்று தமது வேட்புமனுவினை தாக்கல் செய்திருந்தது.

இதன்போது வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி

# வேட்புமனுவை தாக்கல் செய்த தமிழ் மக்கள் கூட்டணி தரப்பு



பாராளுமன்ற தேர்தலில் மான் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணி, நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியதுடன், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் தமது வேட்புமனுவை தாக்கல் செய்தது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (09) புதன்கிழமை தமிழ் மக்கள் கூட்டணியினர் வேட்புமனுவை கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் தமிழரசுக்கட்சி வேட்பாளர் தெரிவில் இழுபறி

மன்னார் குறூப் நிருபர்





பாராளுமன்ற தேர்தல் வேட்பாளர் பட்டியலிலிருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வெளியேறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில், வன்னி மாவட்ட களத்தில், மன்னார் தொகுதியில் வேட்பாளராக சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் மட்டுமே உறுதி செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இரு வேட்பாளர்களை தெரிவு செய்வதில் தொடர்ந்து இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னாள் எம்.பி சாள்ஸ் நிர்மலநாதன், ஆரம்பத்தில் தேர்தல் களத்திலிருந்து ஒதுங்குவதாக அறிவித்து, பின்னர் ஆதரவாளர்களின் வற்புறுத்தல்களினால், பாராளுமன்ற தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுவதாக அறிவித்தார்.

எனினும், நேற்று முன்தினம் 8ஆம் திகதி, இந்த தேர்தல் களத்திலிருந்து தான் வெளியேறுவதாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில், மன்னாரில் இருந்து மேலும் இரு வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக, மன்னார் தமிழரசுக்கட்சி கிளை தொடர்ந்து பல்வேறு முயற்சிகளிலும் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வாசிப்பு மாத சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு



கரவெட்டி தினகரன் நிருபர்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடத்திய வாசிப்பு மாதத்துக்கான சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வு நேற்று முன்தினம் (09) காலை ஆங்கில நெறி ஆசிரிய மாணவி டேவிட் லிஜானி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் அதிதி பேச்சாளராக கலந்துகொண்டார்

விசேட கல்வி நெறி ஆசிரிய மாணவி ஷாஜகான் பாத்திமா நுஸ்லா மாணவர் உரையை நிகழ்த்தினார்.

பேராசிரியர் மா. நடராஜ சுந்தரத்துக்கான அறிமுக உரையை விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமார் ஆற்றினார். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்.

பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் தான் வெளியிட்ட தனது ஒன்பதாவது புத்தகமாக அமைந்த அறிவு சார்ந்த உலகில் கல்வி என்ற நூலின் உள்ளடக்கம் பற்றி பேசினார்.

அதிதி பேச்சாளர் கலாசாலையின் முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். ஹாட்லி கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவராகிய பேராசிரியர் மா.நடராஜ சுந்தரம் தற்போது 79 ஆவது வயதை நிறைவு செய்துள்ளார்.

1964 ஆம் ஆண்டு இலங்கை பாடசாலைகளிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஒன்பது போட்டிகளில் கலந்து கொண்டு 1018 ஓட்டங்களை குவித்தவர் மட்டுமல்லாது 60 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவர் விளையாடிய காலத்தில் துடுப்பாட்ட வீரருக்கு பாதுகாப்பு கவசங்களோ தலைக்கவசமோ இருக்கவில்லை. வன்பந்தை துணிந்து எதிர் கொண்டு விளையாட வேண்டும் அந்த அனுபவங்களையும் தனது பேச்சின் இடையே இவர் பகிர்ந்து கொண்டார்.

# கிளிநொச்சியிலிருந்து யாழுக்கு கடத்திச்செல்லப்பட்ட மாடுகள்

## 20 மாடுகளுடன் இருவர் கைது

சாவகச்சேரி விசேட நிருபர்



கிளிநொச்சியிலிருந்து, யாழ்ப்பாணத்துக்கு சட்டவிரோதமாக கடத்திச்செல்லப்பட்ட 20 மாடுகளை மீட்டுள்ள சாவகச்சேரிப் பொலிஸார் இருவரை கைதுசெய்துள்ளனர். இந்த மாடுகள் லொறியொன்றின்மூலம் கடத்திச்செல்லப்பட்ட நிலையில், கடந்த 7 ஆம் திகதி மீசாலைப் பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது, ஒரு மாடு உயிரிழந்த நிலையிலும் 19 மாடுகள் உயிருடனும் மீட்கப்பட்டுள்ளதுடன் வாகனச் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேற்படி, மாடுகள் உரிய அனுமதிப் பத்திரம் இன்றி கடத்திவரப்பட்டதாகவும் மீட்கப்பட்ட மாடுகள் பொலிஸாரால் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ் மக்கள் கூட்டணியின்

# யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியல் நேற்று அறிவிப்பு

பருத்தித்துறை விசேட, யாழ். விசேட, யாழ்.குறூப் நிருபர்கள்




யாழ்.மாவட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விபரம் இறுதியாகியுள்ளது.

சி.வி. விக்கினேஸ்வரன் தலைமையிலான கூட்டணிக்குள் அண்மையில் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. வி.மணிவண்ணனுக்கு முன்னுரிமையளிப்பதாகத் தெரிவித்து, அக்கட்சியின் மூத்தவர்கள் பலர் அதிருப்தியடைந்து கட்சி செயற்பாட்டிலிருந்து ஒதுங்கிச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து வி.மணிவண்ணன் தரப்பே வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளது.

கட்சியின் வேட்பாளர் பட்டியலில் வி. மணிவண்ணன், வ.பார்த்தீபன், செல்டன் (யாழ் மத்திய கல்லூரி கிரிக்கெட் பயிற்சியாளர்), சிற்பரன், ஜெனிட்டன் (கோப்பாய் விளையாட்டு உத்தியோகத்தர்), உமாகரன் இராசையா, மிதிலைச்செல்வி (முன்னாள் தமிழரசுக் கட்சி மகளிர் அணி உறுப்பினர்), கோகிலவாணி (கிளிநொச்சி), சாவகச்சேரியைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றின் பிராந்திய முகாமையாளர் ஆகியோரின் பட்டியல் இறுதியாகியுள்ளது.

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

### கேள்வி அறிவித்தல்

**2024/2026ஆம் வருடங்களுக்கான பாதுகாப்புச் சேவைகளுக்கான பெறுகை**

**SMIB/TD/2024/09/001**

தலைமை அலுவலகம் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள கிளைகளின் பாதுகாப்புச் சேவைக்கான பெறுகைக்காக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் (SMIB) பெறுகைக் குழுத் தலைவர் கேள்விகளைப் பெற்றுக்கொள்வார். இந்தக் கேள்விகள் 2024 ஒக்டோபர் 30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்.

மீளளிக்கப்படாத 10,000.00 இல. ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் கொழும்பு-03, அரச ஈட்டு மற்றும் வங்கியின் நிர்வாகம் மற்றும் லொஜிஸ்டிக் பிரிவிலிருந்து (4ஆம் மாடி) பெற்றுக்கொள்ளப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விதாரர்கள் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் 2024-08-31ஆம் திகதியில் வங்கி / நிதியியல் துறைகளில் ஆகக் குறைந்தது 05 வருட கால அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். (தற்போதைய மனிதவலு ஸ்திரத்தன்மையுடன் சேவை வழங்கிய வாடிக்கையாளர்களின் பட்டியல் சகிதம் அனுபவம் மற்றும் பதிவு தொடர்பான ஆவணச் சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும்.)

நகல் பிரதியுடனான கேள்விப் படிவங்களை முடிவுறுத்தல் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, 269, காலி வீதி, கொழும்பு-03 எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.

கேள்விகள் 4ஆம் மாடியிலுள்ள நிர்வாகம் மற்றும் லொஜிஸ்டிக் பிரிவில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எவ்வித காரணமும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமை மற்றும் விலைமனுவின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பிரதான முகாமையாளர் (HR & L) அவர்களைத் தொடர்புகொள்ளவும். 011-7722879 / 011-7722784

**பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு 03.**

## தங்கக்கடன் அடகுச்சேவை

**தங்கநகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்**

கீழுள்ள கிளைகளில் நகைகளை அடகு வைத்து **2024.08.01** திகதியுடன் காலம் பூர்த்தியாகி மீட்கப்படாத மற்றும் புதுப்பிக்கப்படாத நகைகள் **2024.10.17** ஆம் திகதி பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தங்கக்கடன் பெறப்பட்ட கிளைகள்**

**எம்பிலிப்பிட்டி, கரந்தெனிய, குளியாப்பிட்டிய, மஹரகம, பெலவத்த, தங்கல்லை, கொஹுவலை, நீர்கொழும்பு, ரத்கம, திஸ்ஸமஹாராம, வலஸ்முல்ல**

**ஏலம் நடைபெறும் திகதி, இடம், நேரம்**

**திகதி மற்றும் நேரம் - 2024.10.17 ஆம் திகதி காலை 10.00**

**இடம் : LCB Finance PLC, மஹரகம கிளை, இல. 155, ஹைலெவல் வீதி, மஹரகம**

**T.P : 0112840244**

ஏலத்திற்காக வருகை தரும் சகலரும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டும். முன்கூட்டி அறிவிக்காமல் ஏலத்தை இரத்து செய்யவோ பிற்போடவோ நிறுவனத்துக்கு உரிமை உண்டு.

**LCB Finance PLC**

இல. 76, எஸ்.டி.எஸ். ஜயசிங்க மாவத்தை, கொஹுவல, தொலைபேசி - 0112825404

For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342

+94 112429343

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

## பெறுகை அறிவித்தல்

**பொல்பித்திகம பிரதேச சபை**

**பொல்பித்திகம பிரதேச சபையினால் கீழ்க்காணும் வேலை விடயங்களை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன**

| தொடர் இல. | வேலை விடயம் | குறித்த மதிப்பீட்டு வேலை பெறுமதி (ரூ.மி) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரு) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைமுறி (ரு) | ஒப்பந்த பதிவுப் பெறுமதி | ஒப்பந்தக் காலம் மாதங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | பொல்பித்திகம மஹயாய நீர் வழங்கல் திட்டம் நிர்மாணம் கட்டம் - 2 | 13.50 (வெட் இன்றி) | 5000.00 | 135,000.00 | C6 அல்லது அதற்கு மேல் | 02 |

01. 2024.10.10 முதல் 2024.10.30 வரை வாரத்தின் வேலை நாட்களின் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை மேற்கண்டவாறு கட்டணங்களை செலுத்தி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. சகல கேள்விதாரர்களும் இவ் வேலைக்காக மேற்படி பிணைமுறிப் பெறுமதியுடன் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட வங்கிப் பிணைமுறி ஒன்றை 2024.10.10 முதல் 2024.12.26 வரை செல்லுபடியாகுமாறு "செயலாளர், பிரதேச சபை, பொல்பித்திகம", சலுகை பெறுபவராக குறிப்பிட்டு பெற்றுக்கொண்ட கேள்விப் பிணைமுறியொன்றின் மூலம் அல்லது குறித்த வேலையின் பெயரில் கேள்விப் பிணை தொகையாக பொல்பித்திகம பிரதேச சபையில் குறித்த தொகையை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை பொல்பித்திகம பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது தொ. பே. இல.: 037-2273082 மூலம் அலுவலக நேரங்களில் விசாரித்தறியலாம். தேவைப்படுபவருக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.11.01 மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்பு பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். மேலும் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நகல்பிரதியை வேறு உறையில் இட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.
05. 2024.11.01 மு.ப. 10.00 இற்கு பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
06. கேள்விப் பத்திரங்களை ஏற்றல் அல்லது நிராகரிக்கப்படும் உரிமை பொல்பித்திகம பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.
07. சகல கேள்விப் பத்திரங்களையும் 2024.11.01ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**ஐ.எம். உதேனிக்கா மொஹொட்டி**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பொல்பித்திகம,**
**037-2273082**

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

## விலைகோரலுக்கான அழைப்பு

**கட்டுநாயக்க – பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படுதல்/ போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் மதுசாரமற்ற பானங்கள் மற்றும் சிற்றுண்டிக்கான விற்பனை இயந்திரத்தை நிறுவுதல் மற்றும் நடாத்திச் செல்வதற்காக செயற்பாட்டாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்**

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE SELECTION OF AN OPERATOR FOR THE INSTALLATION AND OPERATION OF VENDING MACHINES FOR NON-ALCOHOLIC BEVERAGES & SNACKS IN THE DEPARTURE/TRANSIT AND PIER AREAS AT BIA, KATUNAYAKE)**

**(விலைக்கோரல் இலக்கம். 102/T/2024)**

மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் மதுசாரமற்ற பானங்கள் மற்றும் சிற்றுண்டிக்கான விற்பனை இயந்திரத்தை நிறுவுதல் மற்றும் நடாத்திச் செல்வதற்காக செயற்பாட்டாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாட்டிற்காக ஐந்து (05) இடங்கள் உள்ளன. கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தற்போது புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேச பகுதியில் கடை / கியோக் ஒன்றை நடாத்தி வரும் எந்தவொரு நடத்துனரிடமிருந்தும் எந்தவொரு விலைமனுக்களையும் பெற்றுக்கொள்ள நிறுவனம் கவனத்திற் கொள்ளாது.

இதற்கான விதிமுறைகளும் வரையறைகளும் மற்றும் குறித்த ஏனைய தகவல்கள் விலைக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். அக்குறித்த விலைக்கோரல் ஆவணங்களை 2024 ஒக்டோபர் 10ஆம் திகதி முதல் 2024 நவம்பர் 04ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் 5,000/= ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் மாடி, வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யலாம். விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் www.airport.lk என்ற இணையதளத்திலிருந்தும் மீளளிக்கப்படாத 5,000/= ரூபா கட்டணத்தை நிகழ்நிலை (online) மூலமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், விமான நிலையம், விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

நிறுவனத்தினால் வழங்கப்படும் விலைக்கோரல் மாதிரிப்படிவங்களில் மாத்திரம் விலைக்கோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், 318,000.00 ரூபா பெறுமதிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 150 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் உரிமம் பெற்ற விஷேட வங்கியொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவாக அல்லது வங்கி உத்தரவாதமாக அல்லது பணமாக முன்வைக்கலாம்.

விலைக்கோரல்களை முன்வைப்பது தொடர்பான முன்னோடிக் கூட்டத்தைத் தொடர்ந்து அமைவிடத்தைப் பார்வையிடுவதற்கான விஜயம் 2024 ஒக்டோபர் 22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெறும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் முறையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு 2, (DPC No. 2), வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், கட்டுநாயக்க என முகவரியிட்டு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள 02ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம். விலைமனுக்கள் 2024 நவம்பர் 05ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் முறையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், 2ஆம் மாடியின் பயணிகள் முனையக் கட்டிடம், அறை இல. 37, வர்த்தகம் மற்றும் ஆதனப் பிரிவு அலுவலகத்திலிருந்து அல்லது 011-2264002, 011-2264000 எனும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது head.cp@airport.lk எனும் மின்னஞ்சலினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க.**

## உதிரிப்பாகங்களுக்கான கூறுவிலைக்கான அழைப்பு

**வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனி**

**வாழைச்சேனை கடதாசி ஆலை**

கடதாசிகளின் உற்பத்திக்கு பயன்படுத்தும் போர்ட் இயந்திரங்களுக்காக பின்வரும் உதிரிப்பாகங்களுக்கு வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனி வாழைச்சேனை கடதாசி ஆலையினால் கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| விபரம் | உருப்படி | அளவு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| VFD Panel with Motors<br>· A | Individual Group Panel - A/C Motor - A/C Motor - A/C Motor | 55KW<br>15KW<br>22KW | 01<br>07<br>02 |
| Felts<br>· A<br>· B<br>· C | 1st Press Top Felt<br>1st Press Bottom Felt Transfer<br>Net Felt | 14.5Mtrx2.7Mtr, 1100gsm 19 Mtrx2.7Mtr, 1100gsm 12 Mtrx2.7Mtr, 1100gsm | 01<br>01<br>01 |
| Dryer Felts<br>· A<br>· B<br>· C<br>· D<br>· E<br>· F<br>· G<br>· H | 1st Top Dryer Felt<br>2nd Top Dryer Felt<br>3rd Top Dryer Felt<br>4th Top Dryer Felt<br>1st Bottom Dryer Felt 2nd Bottom Dryer Felt 3rd Bottom Dryer Felt 4th Bottom Dryer Felt | 31.00m x 2.7m<br>26.70m x 2.7m<br>26.70m x 2.7m<br>26.70m x 2.7m<br>31.00m x 2.7m<br>26.70m x 2.7m<br>37.50m x 2.7m<br>26.70m x 2.7m | 01<br>01<br>01<br>01<br>01<br>01<br>01<br>01 |
| Synthetic Wire for wire Section · A | Mesh 26 Single Layer | 23.660mtrx2.675mtr | 01 |
| H Cutter Nozzles<br>· H Cutter Nozzles | Needled Jet Nozzels Pyrex Screened | .020 | 06 |
| Soft Starters<br>· A<br>· B<br>· C<br>· D | Suction Pump Motor Pulper Motor<br>TDR Motor<br>Vahanery Pump House | 110KW Motor<br>110KW Motor<br>150KW Motor<br>110KW Motor | 01<br>01<br>01<br>01 |
| Auto System Power Factor Unit (4 Stage Unit) Capacitor Bank | Automatic Power Factor Improving Unit | Capacity-4400 μf | 01 |

கூறுவிலைகள் 2024.10.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனி**
**இல. 61, ஸ்ட்ரபேர்ட் ஒழுங்கை**
**கொழும்பு 05**
**தொ.பே. 011 2556465/ 0757487171**

* Trusted Marketplace of Classified Advertisers...

OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want

Classified

Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)

Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

WE ACCEPT

BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் – மேல் மாகாணம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**மேல் மாகாணத்திலுள்ள மருத்துவ நிறுவனங்களுக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குதல்**

1. கொழும்பு-10, மாளிகாவத்தை செயலகக் கட்டிடம், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் உபகரணங்களை வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார் என்பதுடன் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2024-11-01ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முடிவுறுத்தப்படும்.

| விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் | விலைக்கோரலின் பெயர் | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் (ரூபா) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| WP/PD/PRO/02/07/Slide strainer/2024 | Procurement of Automated Slide strainer – DGH Gampaha | 6,000.00 | 2024-10-16 (மு.ப. 10.30 – மு.ப. 11.00) |
| WP/PD/PRO/02/08/ Tissue Embedding /2024 | Procurement of Tissue Embedding System– DGH Gampaha | 3,000.00 | 2024-10-16 (மு.ப. 11.00 – மு.ப. 11.30) |
| WP/PD/PRO/02/09/ Tissue Processor /2024 | Procurement of Vacuum Tissue Processor – DGH Gampaha | 7,000.00 | 2024-10-16 (மு.ப. 11.30 – ந.ப. 12.00) |
| WP/PD/PRO/02/10/ of Microtome /2024 | Procurement of Automated Microtome – DGH Gampaha | 2,000.00 | 2024-10-16 (ந.ப. 12.00 – பி.ப. 12.30) |
| WP/PD/PRO/02/18/ US Scanner VOG /2024 | Procurement of Ultrasound Scanner VOG –BH Homagama, DGH Gampaha | 5,400.00 | 2024-10-16 (பி.ப. 12.30 – பி.ப. 1.00) |
| WP/PD/PRO/02/13/ Eye Equipment /2024 | Procurement of Eye Equipment (Argon Laser Machine & Yag Laser Machine ) – DGH Gampaha | 12,000.00 | 2024-10-16 (பி.ப. 1.00 – பி.ப. 1.30) |
| WP/PD/PRO/02/15/ Eye Equipment /2024 | Procurement of Auto ref Topographer with Refractometer – DGH Gampaha | 2,300.00 | 2024-10-16 (பி.ப. 1.30 – பி.ப. 2.00) |
| WP/PD/PRO/02/17/ OCT /2024 | Procurement of OCT Machine – DGH Gampaha | 8,600.00 | 2024-10-16 (பி.ப. 2.00 – பி.ப. 2.30) |

2. கொழும்பு-10, த.பெ. இல. 876, மாளிகாவத்தை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து 2024-10-10ஆம் திகதி முதல் 2024-10-30ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளும் படிவங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. 2024-11-01ஆம் திகதி விலைமனுக்கோரல்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் கொழும்பு-10, த.பெ. இல. 876, மாளிகாவத்தை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் (மே.மா) உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.
4. உபகரணங்களின் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் / ஏக விற்பனைப் பிரதிநிதிகளுக்கு மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் இதற்கான ஆதார ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை முடிவுறுத்தல் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு-10, த.பெ. இல. 876, மாளிகாவத்தை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (மே.மா) அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
6. விலைமனு ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை தனித்தனியாக முத்திரைக் குறியிட்டு பின் ஒரு உறையில் இடுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பீட்டிலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (மே.மா), அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும். **தொடர்பிலக்கம்: 011-2434852 / 011-2437154**

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (மே.மா),**
**மாளிகாவத்தை, கொழும்பு 10.**



## விலைக்கோரலுக்கான அழைப்பு

### வரையறுக்கப்பட்ட மண்முனை தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### கொக்கட்டிச்சோலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இன்டர்லொக் கற்களைப் பதித்தல் மற்றும் மேலடுக்கை (Canopy) நிர்மாணித்தல்

**ஒப்பந்த இலக்கம்: BT/MSW/MPCS/CON/2024**

1. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மேற்படி வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட மண்முனை தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக உள்ளூராட்சி பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதவராகவும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விசேடத்துவம் மற்றும் தரத்திற்கான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
4. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 04ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையில் (5ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை, அரசடிதீவு, மண்முனை தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0652056944) மற்றும் இதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமான 5000.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் 2024-10-10ஆம் திகதி முதல் 2024-10-29ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை, அரசடிதீவு, மண்முனை தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறையானது மண்முனை தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
7. விலைமனுக்களை 2024-10-30ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை, அரசடிதீவு, மண்முனை தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் திறக்கப்படும் இறுதி நாள் முதல் 77 நாட்களுக்கு (எழுபத்தேழு நாட்கள்) செல்லுபடியாகும்.
9. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைமனுவுடன் விலைக் கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. இந்த ஒப்பந்தத்தை வழங்குதல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
11. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன் எந்தவொரு வேளையிலும் இந்தப் பெறுகையை இரத்துச் செய்வதற்கு அல்லது மீளப்பெறுவதற்கான உரிமையை தொழில் வழங்குநர் தன்னகத்தே கொண்டுள்ளார்.


| விலைக்கோரல் இல. | வேலையின் விபரம் | கேள்வியிடக் கூடிய தொகை (ரூபா மில். வெட் இன்றி) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் அல்லது வழங்குநர் | தேவையான விலைக்கோரல் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | விலைக்கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் |
| BT/MSW/ MPCS/ CON/2024 | கொக்கட்டிச்சோலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இன்டர்லொக் கற்களைப் பதித்தல் மற்றும் மேலடுக்கை (Canopy) நிர்மாணித்தல் | 3.67 | 90 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 37,000.00 | 2025-01-25 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மண்முனை தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**மட்டக்களப்பு.**
**2024-10-10.**

புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

## மிகச் சிறந்த ஊடக கலாசாரத்திற்காக

ජනාධිපති මාධ්‍ය සම්මාන 2024
ஜனாதிபதி ஊடக விருது
PRESIDENTIAL MEDIA AWARDS
TOWARDS MEDIA EXCELLENCE



## விண்ணப்பம் கோரல்

சிறந்த ஊடக கலாசாரமொன்றை நாட்டில் நிலைநிறுத்தும் பொருட்டு ஊடகவியலாளர்களினால் ஆற்றப்படும் பணியை மற்றும் அவர்களது தரமான பங்களிப்பை பாராட்டும் வகையில் ஜனாதிபதி ஊடக விருது விழாவை இரண்டாவது முறை நடாத்துவதற்கு புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தீர்மானித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் அச்சு ஊடகத்தில், இலத்திரனியல் ஊடகத்தில் மற்றும் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்ட / ஒளி - ஒலிபரப்புச் செய்யப்பட்ட தமது ஆக்கங்கள் மற்றும் ஊடக ஆய்வுகளை சமர்ப்பிக்குமாறு அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் / ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

## விருதுகள் வழங்கப்படும் துறைகள்

### 1. பத்திரிகைப் பிரிவு

1.1 வருடத்தின் மிகச்சிறந்த செய்தி அறிக்கை
1.2 வருடத்தின் மிகச்சிறந்த புகைப்படம்
1.3 வருடத்தின் மிகச்சிறந்த பத்தி எழுத்து
1.4 வருடத்தின் மிகச்சிறந்த கேலிச் சித்திரம்
1.5 வருடத்தின் மிகச்சிறந்த பக்க வடிவமைப்பு
1.6 வருடத்தின் மிகச்சிறந்த சிறப்புக் கட்டுரை
1.7 வருடத்தின் மிகச்சிறந்த ஆய்வுச் செய்தி

### 2. வானொலிப் பிரிவு

2.1 வருடத்தின் மிகச்சிறந்த செய்தி அறிக்கை
2.2 வருடத்தின் மிகச்சிறந்த செய்தி அறிவிப்பு
2.3 வருடத்தின் மிகச்சிறந்த வானொலி நிகழ்ச்சி
2.4 வருடத்தின் மிகச்சிறந்த சிறுவர் நிகழ்ச்சி
2.5 வருடத்தின் மிகச்சிறந்த ஆய்வு நிகழ்ச்சி
2.6 வருடத்தின் மிகச்சிறந்த கல்வி நிகழ்ச்சி

### 3. தொலைக்காட்சிப் பிரிவு

3.1 வருடத்தின் மிகச்சிறந்த செய்தி அறிக்கை
3.2 வருடத்தின் மிகச்சிறந்த செய்தி அறிவிப்பு
3.3 வருடத்தின் மிகச்சிறந்த நிகழ்ச்சி முன்வைப்பு
3.4 வருடத்தின் மிகச்சிறந்த ஆய்வு நிகழ்ச்சி
3.5 வருடத்தின் மிகச்சிறந்த விவரண நிகழ்ச்சி
3.6 வருடத்தின் மிகச்சிறந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி
3.7 வருடத்தின் மிகச்சிறந்த கல்வி நிகழ்ச்சி

### 4. இணையதளப் பிரிவு

4.1 வருடத்தின் மிகச்சிறந்த செய்தி இணையதளம்
4.2 வருடத்தின் மிகச்சிறந்த இணையதள செய்தி அறிவிப்பு
4.3 வருடத்தின் மிகச்சிறந்த பல்லூடகப் பாவனை
4.4 வருடத்தின் மிகச்சிறந்த புலொக் (Blog) எழுத்தாளர்

### 5. ஊடக ஆய்வுப் பிரிவு

5.1 வருடத்தின் மிகச்சிறந்த ஊடக ஆய்வு இலக்கிய நூல்

### 6. பாடசாலை ஊடகப் பிரிவு

6.1 வருடத்தின் சிறந்த பாடசாலை ஊடக அலகு / அமைப்பு / சங்கம் / வட்டம்

**விபரப் பத்திரம் மற்றும் விண்ணப்பம்**
www.media.gov.lk இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

**ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :**
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்)
புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு,
சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
இல 163, கிருளபன மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு 05.

**ஆக்கங்களை ஏற்றுக்கொள்ளல்**
2024 ஒக்டோம்பர் 30 ஆந் திகதி பி.ப. 4.00 மணிக்கு முடிவுறும்

**செயலாளர்**
புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள்,
தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

ஆக்கங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஏற்புடைய பிரிவை மற்றும் போட்டி இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிடவும்

(மேலதிக தகவல்களுக்காக 011-2513737 / 011-2513459 ஊடாக அபிவிருத்திப் பிரிவை தொடர்புகொள்ளவும்.)




Looking for Your Life Partner..,
Gather with,
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

Pay online and save your precious time
WE ACCEPT
BANK OF CEYLON BOC Acc. No. 000000377
Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# விலைமனு கோரல்

## தள வைத்தியசாலை கந்தளாய்

கந்தளாய் தள வைத்தியசாலை பின்வரும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்களை கோருவதற்கு வைத்தியசாலையின் பெறுகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் உபகரணங்களுக்கான முழுமையான ஒப்பந்தபத்திரம் (விலைமனுக்கள்) 02 பிரதிகளுடன் ஏற்றுக்கொள்ளப்படும்

| Bid No | Title of Bid | Amount of non-Refundable fee | Value of Bid Security | Estimated value (Mn) |
|---|---|---|---|---|
| BHK/AB/04/OSMC/ET/2024 | Supply of 01 No.Opthalmic Operating Microscope | 3,000.00 | 165,000.00 | 16.5 |
| BHK/AB/04/HUSS/RU/2024 | Supply of 01 No.High End Ultra Sound Scanner (Radiology) | 3,000.00 | 200,000.00 | 20 |

1. இதற்காக காரியாலயத்தினால் வெளியிடப்பட்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விப்பத்திரம் முன் வைக்கப்படல் வேண்டும்.
2. ஒப்பந்த (விலைமனுக்கள்) பத்திரம் மீள்வழங்கப்படாத அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்தி வார நாட்களில் 2024.10.10 இல் இருந்து 2024.10.29 வரை மு.ப 9.00 இல் இருந்து பி.ப 2.00 வரை வைத்தியசாலை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
3. 2024.10.30 பி.ப 2.00 க்கு முதல் பெறும் வகையில் விலைமனுக்கள் **"தலைவர், மீள்நிர்மான பணிக்குழு, தளவைத்தியசாலை கந்தளாய்"** என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பமுடியும். இல்லையெனில் கந்தளாய் தளவைத்தியசாலையின் காரியாலயத்திற்கு கொண்டு வந்து தரமுடியும். குறித்த நேரத்திற்கு பின் கிடைக்கும் (டெண்டர்) ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்த பத்திரம் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தக்காரர் or அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகளிக்க முடியும்.
4. கேள்விமனுக்களைக் கொண்ட கடித உறையின் மேல் இடது மூலையில் விலைமனு இலக்கம் மற்றும் குறித்த பணி தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
5. கேள்வி விலைமனு 2024.10.30 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு திறக்கப்படும்.
6. ஏலத்திற்கு முந்தைய கூட்டம் 2024.10.21 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு நடைபெறும்.

**எந்தவொரு கேள்விமனுவையும் ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக்குழுவிற்கு உண்டு.**

**மேலதிக விபரம்: 026-2234945 / 076-8178300**

**தலைவர்,**
**பிரதேச பெறுகை குழு,**
**தள வைத்தியசாலை,**
**கந்தளாய்.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இல | கேள்வியின் பெயர் | விலைமனு பிணைத் தொகை (ரு) | ஆவணக் கட்டணம் (VAT அடங்கலாக) | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6616(MP) | 08 Nos. Main Trolley Wire Ropes for 65T ZPMC STS Cranes at ECT | 300,000.00 | 3,500.00 | 21/11/2024 10.00 மணி |
| CES/FP/04/PT/6621(EL) | 50 Nos. of 300W Warm White LED Flood Light Fittings | 75,000.00 | 1,000.00 | 21/11/2024 10.00 மணி |
| CES/FP/06/PT/6618(MAR) | 01 No. Lamella Clutch Complete Assembly of Port Aquamaster Unit of Tug Gotaimbara | 250,000.00 | 3,500.00 | 21/11/2024 10.00 மணி |
| CMS/LP/23/PT/11/004 | MS Plates | 78,500.00 | 1,000.00 | 25/10/2024 13.30 மணி |
| CMS/LP/24/PT/02/059 | 10 Nos. of Brake Cylinders for the Terberg Yard Tractors | 17,500.00 | 1,000.00 | 04/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/PT/08/057 | 04 Nos. 20 Ton Complete Axle (Model DLBC 45/65T/1555REV-02) | 19,500.00 | 1,000.00 | 04/11/2024 13.30 மணி |
| CMS/LP/23/PT/10/065 | Filters for Cummins Engines | 60,000.00 | 1,000.00 | 04/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/PT/11/060 | Main Hoist Wire Rope Sheaves for J-1/J-2 Mitsui STS Cranes | 35,000.00 | 1,000.00 | 05/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/PT/11/062 | 01 No. of Transmission Oil Cooler for ZF Transmission of the Launch : Pilot 14 | 25,000.00 | 1,000.00 | 05/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/PT/17/055 | Supply, Installation and Commissioning of Radar System for Pilot Station | 60,000.00 | 1,000.00 | 05/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/PT/18/056 | Reel Hose P/N-EZ54V00001F1 | 30,000.00 | 1,000.00 | 06/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/PT/18/052 | Spare Parts for Air Conditioning System for Pilot 17 | 50,000.00 | 1,000.00 | 06/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/PT/19/056 | 05 Nos. Compressor Unit | 17,500.00 | 1,000.00 | 06/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/PT/11/063 | Air Compressors for UD Nissan Prime Movers | 18,000.00 | 1,000.00 | 07/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/PT/19/011 | 15 Nos. Steel Rib Bars | 500,000.00 | 12,500.00 | 07/11/2024 13.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கலுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஒக்டோபர் 11 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### இணைப்பாக்கம் உள்ளடங்கலான அபிவிருத்தி செயற்றிட்டம்

# விலைமனுக்கோரல்

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| LK-RDA-418325-CW-RFB | வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழுள்ள புதுகுடியிருப்பு, கரைதுறைப்பற்று, மற்றும் மன்னார் மாவட்டத்தில் நானட்டன் பிரதேச செலயகத்தின் கீழுள்ள முசலி மற்றும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தின் கீழுள்ள வவுனியா, வெங்கலச்செட்டிகுளம் என்பவற்றின் 39.0 கி.மீ கிராமிய வீதிகளின் புனர்நிர்மாணம் / மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பு. |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 10 ஒக்டோபர் 2024 தொடக்கம் 11 நவம்பர் 2024 வரை www.rda.gov.lk & www.mohsl.gov.lk என்ற RDA இன் இணையதளங்களைப் பார்வையிடுவதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கெள்ளலாம்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக**
**அமைச்சக கொள்முதல் குழு**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## கொத்மலை பிரதேச சபை - பூண்டுலோயா

# 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

01. 2025ஆம் வருடத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்களிடமிருந்தும் மற்றும் நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. விண்ணப்பப் படிவங்களை 2024-12-31ஆம் திகதி அல்லது அதற்கு முன் செயலாளர், கொத்மலை பிரதேச சபை, பூண்டுலோயா எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் - 2025'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
03. வியாபாரத்தின் பதிவிற்கு இயைபான சான்றிதழ்களின் பிரதிகளை (சகல விபரங்கள் சகிதம்) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
04. பதிவுக் கட்டணத்தை ''செயலாளர், கொத்மலை பிரதேச சபை'' எனும் பெயரில் காசுக் கட்டளை மூலம் அல்லது காசோலை மூலம் அல்லது பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது **kothmaleps@gmail.com** எனும் மின்னஞ்சலுக்கு வேண்டுகோள் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வழங்கல் / சேவை | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | சகல அலுவலக உபகரணங்கள், காகிதாதிகள் மற்றும் பாவனைப் பொருட்கள் வழங்குதல் | 1500.00 |
| 02 | அலுவலக உபகரணங்கள் (மரம் / உருக்கு / பிளாஸ்டிக்) அலுமாரி, கதிரை, கெபினட் உட்பட்ட உற்பத்திகளை வழங்குதல் | 1500.00 |
| 03 | சகல விதமான அச்சுவேலைகளை மேற்கொள்ளல் | 1000.00 |
| 04 | உணவு பானங்கள் வழங்குதல் | 1000.00 |
| 05 | ஒலிபெருக்கி உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல் | 750.00 |
| 06 | கணனிகள், கணனி துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் (டோனர், CD/DVD/ரிபன் போன்றன) வழங்குதல் | 1000.00 |
| 07 | இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள் வழங்குதல் (வீதிகளை ஒளிமயமாக்குவதற்குத் தேவையான சகல உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்) | 500.00 |
| 08 | தட்டச்சு இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம் மற்றும் ரோணியோ இயந்திரங்கள் வழங்குதல் | 1000.00 |
| 09 | இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பெயர்ப் பலகைகள், அறிவித்தல் பலகைகள் மற்றும் பதாகைகள் | 1000.00 |
| 10 | துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் பண்டங்கள் (மலசலகூடம் சுத்திகரிக்கும் பொருட்கள், தும்புத்தடி, ஈர்க்கிள், தூரிகைகள், மொப், குழாய், குப்பை வண்டிகள், பிரம்புக் கூடைகள், வீல் பெரோ, மலசலகூடத் தூரிகைகள், வாளிகள், மண்வெட்டி, ரேக்கை, வீச்சுக் கத்தி, தலைக்கவசம், காலணி, கையுறைகள், பாதுகாப்பு இடுப்புப் பட்டி) | 1000.00 |
| 11 | வாகனங்களுக்கான டயர், டியூப் மற்றும் பெற்றரிகள் | 1000.00 |
| 12 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல் (டீசல் / பெட்ரல் உட்பட) | 1000.00 |
| 13 | துணிகள், சீருடைக்குத் தேவையான துணிகள், மேசை விரிப்புகள், திரைச்சீலைகள் | 500.00 |
| 14 | கொங்றீட் சார்ந்த உற்பத்திகள் வழங்குதல் (ஹியூம் குழாய்கள், மாடிப்படி கைப்பிடி, கொங்றீட் தூண்கள், சீமெந்து கல், ப.்.பலோ தாங்கி) | 750.00 |
| 15 | நிர்மாணப் பொருட்கள் வழங்குதல் (கல், மணல், சிறுகற்கள், செங்கல், தார், சட்டரிங், கம்பி பிரிமிக்ஸ் முதலியன) | 750.00 |
| 16 | கிருமிநாசினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் (இழையான் கொல்லி) | 1000.00 |
| 17 | தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்குதல் (மரம் வெட்டும் இயந்திரம், மரம் இழுக்கும் இயந்திரம், கயிறு, புல் வெட்டும் இயந்திரம், தையல் இயந்திரம், மின்னியல் உபகரணங்கள், டயர் மற்றும் டியூப் திருத்தவேலை உபகரணங்கள்) | 1000.00 |
| 18 | சமையலறை உபகரணங்கள் (பாரிய அளவிலான பிடிச்சட்டிகள், பீங்கான், கண்ணாடிக் குவளைகள், எரிவாயு அடுப்பு போன்றன) | 750.00 |
| 19 | வீச்சுக் கத்தி, அரிவாள், மண்வெட்டி, முள்ளு, ரேக்கை போன்ற உபகரணங்கள் வழங்குதல் | 750.00 |
| 20 | நீர்க்குழாய்கள் மற்றும் அதுசார்ந்த துணைப்பாகங்கள், நீர்த்தாங்கி வழங்குதல் | 750.00 |
| 21 | அரிந்த மரம் வழங்குதல் (பலகை, பராலை, ரீப்பை முதலியன) | 750.00 |
| 22 | சீருடைகளைத் தைத்தல் | 750.00 |
| 23 | சபையின் தேவையின் அடிப்படையில் இயந்திராதிகளை வழங்குதல் | 1000.00 |
| | **சேவைகள்** | |
| 24 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் | 1000.00 |
| 25 | வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளின் திருத்தவேலைகள் | 500.00 |
| 26 | அலுவலக இயந்திராதிகளின் திருத்தவேலைகள் மற்றம் சேர்விஸ்கள் (கணனி, அச்சுப் பொறிகள், டுப்ளோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம் மற்றும் தட்டச்சுப் பொறிகள்) | 500.00 |
| 27 | கணனி ஆலோசனைச் சேவைகள் | 500.00 |
| 28 | மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் | 500.00 |
| 29 | சுகாதார உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களின் திருத்தவேலைகள், உருக்கியொட்டும் வேலைகள், மதில் மற்றும் படலை மறைப்பு திருத்தவேலைகள் | 1000.00 |
| 30 | நொத்தாரிஸ் மற்றும் சட்டத்தரணி சேவைகள் | 1000.00 |
| 31 | நில அளவை சேவைகள் | 1000.00 |
| 32 | கலி வண்டி சேவைகள் | 1000.00 |
| 33 | நீர் பம்பிகளின் திருத்தவேலைகள் | 500.00 |
| 34 | அபாயகரமான மரங்களை வெட்டி வீழ்த்துதல் | 500.00 |
| 35 | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் கட்டிட திட்டப்படங்களை வரைதல் | 1000.00 |
| | **நிர்மாண ஒப்பந்தக்காரர்கள்** | |
| 36 | 50000.00 ரூபா வரை | 500.00 |
| 37 | 50001.00 ரூபா முதல் 100000.00 ரூபா வரை | 1000.00 |
| 38 | 100001.00 ரூபா முதல் 500000.00 ரூபா வரை | 1500.00 |
| 39 | 500001.00 ரூபா முதல் 1000000.00 ரூபா வரை | 2000.00 |
| 40 | 1000001.00 ரூபா முதல் 2000000.00 ரூபா வரை | 2500.00 |
| 41 | 2000000.00 ரூபாவிற்கு மேல் | 3500.00 |

**பொது நிபந்தனைகள்**

01. தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தவிர்ந்த ஏனைய வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களது சேவையைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை சபை கொண்டுள்ளது.
02. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் விலைகளை சமர்ப்பித்தல் அல்லது குறித்த நேரத்தில் கட்டளைகளை வழங்கத் தவறுதல் மற்றும் விலைக்கோரும் நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்படாத வழங்குநர்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி வழங்கல் நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்படுவர்.
03. சபைக்கு வழங்கும் சேவைக்கு முற்பணம் வழங்கப்பட மாட்டாது.
04. குறைந்த பட்சம் 60 நாட்களுக்கான கடன் வசதி வழங்கப்படல் வேண்டும்.
05. நிர்மாணம் மற்றும் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்துகொள்ளும்போது இக்டாட் நிறுவனத்தின் அல்லது மத்திய மாகாண சபையின் பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் சொத்துப் பிரகடனத்தின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். கொத்மலை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட ஒப்பந்தக்காரர்கள் நிதி மற்றும் நிர்மாண வேலை தொடர்பான அனுபவத்திற்கான சான்றிதழ்களைச் சமர்ப்பித்து பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.
06. வெட் வரி மற்றும் புரள்வு வரிக்காக பதிவு செய்திருந்தால் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. வழங்கல் நடவடிக்கைகளின் போது பிரதேச சபைச் சட்டம், நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அரசாங்கத்தினால் அவ்வப்போது விடுக்கப்படும் சுற்றுநிருப அறிவுரைகளின் பிரகாரம், பிரதேச சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

**எச்.எம்.ஜீ. அஜித் புஷ்பகுமார,**
**செயலாளர்,**
**கொத்மலை பிரதேச சபை,**
**பூண்டுலோயா.**
2024.10.07

கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

கட்டிடங்கள் திணைக்களம்

## கேள்விகளுக்கான அழைப்பு

### கொழும்பு 07, கறுவாத்தோட்ட பொலிஸ் நிலைய வளவிலுள்ள S.M. Barracks கட்டிடத்தின் மேம்படுத்தல்கள் மற்றும் திருத்தவேலைகள் - மிகுதி வேலைகள் (கட்டம் II)

**(ஒப்பந்த இலக்கம்: BD-287b-ZIM/17/CT064/24)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 44.2 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவுடையதுமான கொழும்பு 07, கறுவாத்தோட்ட பொலிஸ் நிலைய வளவிலுள்ள S.M. Barracks கட்டிடத்தின் மேம்படுத்தல்கள் மற்றும் திருத்தவேலைகள் - மிகுதி வேலைகள் (கட்டம் II) எனும் பணிக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார். நிர்மாணக் காலம் 245 நாட்கள்.
2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii) ஆம் இலக்கம் மற்றும் 03/2020ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) விசேடத்துவ நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான C5 அல்லது C4 தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
   ''பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது''
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கொழும்பு-7, டொரிங்டன் அவனியூ, இல. 213, கட்டிடங்கள் திணைக்களம் (மேற்கு வடக்கு), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 011-2582579, தொலைநகல்: 011-2588686
5. மீளளிக்கப்படாத கட்டணமாக பன்னிரெண்டாயிரம் ரூபாவை (ரூபா 12,000.00) 2024-10-10ஆம் திகதி முதல் 2024-10-29ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு-7, டொரிங்டன் அவனியூ, இல. 213, கட்டிடங்கள் திணைக்களம் (மேற்கு வடக்கு), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2024-10-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பத்தரமுல்ல, செத்சிறிபாய, 2ம் மாடி, கட்டிடங்கள் திணைக்களத்தின் ஒப்பந்தக் கிளையில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது ஏதேனும் நீடிக்கப்பட்ட காலம் முதல் 91 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும்,
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 660,000.00 ரூபா தொகைக்கு
   * 2025 பெப்ரவரி 25ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் ITB 16.2ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. (திருமதி) K.G.S. குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பெறுகை அறிவித்தல்

### பாலிந்தநுவர பிரதேச சபை

### Improvement of access facilities of Kalukandawa tourist area in Diganna

இங்கு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிர்மாணங்களுக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2024-10-24ஆம் திகதி மு.ப. 09.30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். அன்றைய தினமே (2024-10-24) மு.ப. 09.35 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

1. பின்வரும்அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் குறித்த படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகையைச் செலுத்தி 2024-10-10ஆம் திகதி முதல் 2024-10-23ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை பாலிந்தநுவர பிரதேச சபை அலுவலகத்திலிருந்து வாரத்தின் வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. விலைக்கோரல் விண்ணப்பங்கள் இரு பிரதிகளில் வழங்கப்படும் என்பதுடன் அவைகளை முறையாகப் பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளில் இட்டு ''செயலாளர் மற்றும் பாலிந்தநுவர பிரதேச சபையின் அதிகாரபூர்வ கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி, பாலிந்தநுவர பிரதேச சபை'' எனும் முகவரிக்கு 2024-10-24ஆம் திகதி மு.ப. 09.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
3. விலைமனுக்களைச் சமாப்பிக்கும்போது குறித்த விண்ணப்பதாரருக்கு வெட் வரி பதிவு இருக்குமானால் அந்த இலக்கத்தைக் குறிப்பிடுதல் கட்டாயமாகும் என்பதுடன் குறித்த சான்றிதழின் பிரதியொன்றை கேள்விப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. இந்தச் செயற்றிட்டத்தின் நிர்மாண வேலைகளை 50 நாட்களுக்குள் நிறைவு செய்து விலைப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களின் CIDA நிறுவனத்தின் C4 அல்லது C7 (பெருந்தெருக்கள்) பதிவு செயல்வலு நிலையில் இருத்தல் வேண்டும். குறித்த விண்ணப்பதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணத்தின் மூலம் தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும்.
7. 2024-10-24ஆம் திகதி மு.ப. 09.35 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். இந்த நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
8. மேலதிக விபரங்கள் மற்றும் பெறுகை நிபந்தனைகளை இந்த அலுவலகத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.
9. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**அட்டவணை**

| தொ. இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப்படும் விலைக் கோரல் பிணை வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Improvement of access facilities of Kalukandawa tourist area in Diganna | ரூபா 8,419,436.30 | ரூபா 3,000.00 | ரூபா 85,000.00 |

**2024-10-08ஆம் திகதி பாலிந்தநுவர பிரதேச சபை அலுவலகத்தில்.**

**பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**பாலிந்தநுவர பிரதேச சபையின் அதிகாரபூர்வ கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**தொலைபேசி இல. 0342244476**
**மின்னஞ்சல் முகவரி: palindanuwara.p.sabha@gmail.com**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**

### Komatsu PC200 Excavator இயந்திரங்களின் உதிரிப்பாகங்களை வழங்கி திருத்தவேலைகளைச் செய்தல்

1. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத் திணைக்களத்தினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் **Komatsu PC200 Excavator** இயந்திரங்களின் உதிரிப்பாகங்களை வழங்கி திருத்தவேலைகளைச் செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
   - இயந்திரம் இருக்கும் இடம்: பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மோதர - மொரட்டுவ

| ஒப்பந்த இலக்கம் | வழங்கல் விபரம் | விலைக் கோரல் பிணை முறி மற்றும் செல்லுபடிக் காலம் | விலைமனுக்கள் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| CCD/CD/ME/2021/13/VOL (II)- 1 | முழுமையான இரண்டு டிரக் (Track) வழங்குதல் | 25,000.00 2024.12.15 | 40 நாட்கள் |
| CCD/CD/ME/2021/13/VOL (II)- 2 | கெபின் திருத்தவேலை | 8,000.00 2024.12.15 | |
| CCD/CD/ME/2021/13/VOL (II)-3 | டிரக் பிரேம் (Track Frame) திருத்தவேலை | 15,000.00 2024.12.15 | |

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனு நடைமுறை மூலம் இந்த விலைக்கோரல்கள் இடம்பெறும்.
3 இதன் பொருட்டு ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் தேவையான மேலதிக தகவல்களை 011-2449756 இலக்கத்தின் ஊடாக கரையோர மூலவள முகாமை திணைக்களம், இயந்திரப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. கரையோர மூலவள முகாமை திணைக்களம், பணிப்பாளர் நாயகத்திற்கு வியாபாரப் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் 1000.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் 2024-10-10ஆம் திகதி முதல் 2024-10-25ஆம் திகதி வரை 09.00 மணித்தியாலயம் முதல் 15.00 மணித்தியாலம் வரை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-10-23ஆம் திகதி 1400 மணித்தியாலத்திற்கு முன் நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். 2024-10-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
6. குறித்த முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளில் ஒப்பந்த இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயர் / முகவரி என்பனவற்றை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்,**
**4ஆம் மாடி, புதிய பொதுச் செயலாளர் அலுவலகம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**
**தொலைபேசி: 011-2449197 / 011-2449756**
**மின்னஞ்சல் முகவரி: coastaldevelopmentcd@gmail.com**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Repeat Your Ad For Better Offers

## அக்குரெஸ்ஸ பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

அக்குரெஸ்ஸ பிரதேச சபையின், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள், வரி அறவிடும் உரிமையை 2025-01-01ஆம் திகதி முதல் 2025-12-31ஆம் திகதி வரையில் குத்தகைக்கு வழங்கும் பொருட்டு, இரு நகல்களிலான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் 2024-10-10ஆம் திகதி முதல் 2024-10-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த விடயம் தொடர்பான கேள்வி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இது தொடர்பான கேள்விப் படிவங்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இதன் பொருட்டு இந்த அலுவலகத்தில் முத்திரைக் குறி பொறித்து வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். இந்த கேள்வி விண்ணப்பங்களை அலுவலக நேரத்தினுள் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் அக்குரெஸ்ஸ பிரதேச சபை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் 2024-10-25ஆம் திகதி மு.ப. 9.00 மணி வரை மட்டுமே வழங்கப்படும். கேள்விப் படிவங்கள் 2024-10-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முன்வரும் அனைவரும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது அவ்வாறான ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு ஆளடையளத்தை உறுதிப்படுத்த முடியாதவர்களுக்கு கேள்வி விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.

நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையினுள் சமர்ப்பிக்கப்படாத கேள்விப் படிவங்களுக்கான கேள்விப் பிணை வைப்புத் தொகை மீண்டும் விடுவிக்கப்பட மாட்டாது என்பதுடன், வெற்றுக் கேள்விப் படிவத்தை 2024-10-25ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு முன் அலுவலகத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்து குறித்த கேள்விப் பிணைத் தொகையை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த கேள்வி தொடர்பான நிபந்தனைகள் மற்றும் அதற்கு இயைபான சகல தகவல்களையும் 041-2283275 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக வருமானப் பிரிவைத் தொடர்புகொண்டு அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | ஆதன விபரம் | குறைந்தபட்ச கேள்வித் தொகை (ரூபா) | கேள்விப் பிணை வைப்புத் தொகை (ரூபா) | விண்ணப்பப் படிவக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | அக்குரெஸ்ஸ பஸ் நிலையம் - பொது மலசலகூடம் | 1,400,300.00 | 10,000.00 | 1,000.00 |
| 02 | அக்குரெஸ்ஸ வெளிச் சந்தை | 1,440,000.00 | 10,000.00 | 1,000.00 |

**டபிள்யூ. ஆர். பிரபாத் நிமேஷ்,**
**செயலாளர்,**
**அக்குரெஸ்ஸ பிரதேச சபை.**

**2024-10-04**
**அக்குரெஸ்ஸ பிரதேச சபை அலுவலகத்தில்.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு**

**சுய பாதுகாப்பு உபகரணங்களின் (PPE) பெறுகை - மேலங்கி (JACKET) மற்றும் கவச முகத் தகடுகள் (VISORS)**

### தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB)

**ஒப்பந்த இல. - MUD&H/NMAC/PPEs/2024/06**

கீழ் விபரிக்கப்பட்டவாறு உருப்படிகளின் வழங்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய நிலக்கண்ணிவெடி செயற்பாட்டு நிலைய பணிப்பாளர் சார்பில் திட்ட பெறுகைக் குழு (PPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

**அட்டவணை - 01**

| இல. | பெறுகை தலைப்பு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை தொகை (ரூபா) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | விலைமனு பிணை செல்லுபடி |
|---|---|---|---|---|---|
| 1. | கண்ணிவெடி அகற்றுபவர்களுக்காக சுய பாதுகாப்பு உபகரணங்கள் - மேலங்கி (JACKET) | 3500/- | 75,000/- | ஒப்பந்தம் வழங்கும் திகதியில் இருந்து 45 நாட்கள் | 2024 டிசம்பர் 31 வரை |
| 2. | கண்ணிவெடி அகற்றுபவர்களுக்காக சுய பாதுகாப்பு உபகரணங்கள் - கவச முகத் தகடுகள் (VISORS) | | | | |

01. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
02. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
03. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 2ஆவது மாடி, நிதிக் கிளை, வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு, கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, கணக்காளர் (நிதி) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024 ஒக்டோபர் 14 ஆம் திகதி தொடக்கம் 2024 நவம்பர் 1ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
04. பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 2ஆவது மாடி, வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு, கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் நிதிப் பிரிவில் சிறாப்பருக்கு மேலுள்ள அட்டவணையில் உள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 2024 ஒக்டோபர் 10 ஆம் திகதி தொடக்கம் 2024 நவம்பர் 1ஆம் திகதி வரை பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 2ஆவது மாடி, நிதிக் கிளை, வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு, கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, கணக்காளருக்கு (நிதி) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து எந்த ஒரு எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர் அல்லது அவர்தம் அங்கீகாரம் பெற்ற முகவர்களினால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
05. விலைமனுவானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட விலைமனு ஆவணத்தில் உள்ள மாதிரியின்படி விலைமனு உத்தரவாத வடிவத்தில் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையின் பெறுமதியானது அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, செயலாளரின் பெயரில் இருத்தல் வேண்டும்.
06. விலைமனுவை 2024 நவம்பர் 1 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு செயலாளர், கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு, நிதிக் கிளை, 2ஆவது மாடி, செத்சிறிபாய, கட்டம் 1, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அசல் மற்றும் நகல் உடன் பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது கைகளில் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பி அளிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
07. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பத்தரமுல்லை, செற்றிபாய கட்டம் 1,2 ஆவது மாடி, வீடமைப்பு மற்றும் நிர்மாணப், பிரிவு, கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, கேட்போர் கூடத்தில் 2024 ஒக்டோபர் 18 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு இடம்பெறும்.
08. விலைமனுதாரர்களின் முந்தைய செயல்திறன் மற்றும் திரவ நிலை (அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள்) விலைமனுதாரர்களின் தேர்வில் கண்டிப்பாக மதிப்பிடப்படும். மோசமான செயற்றிறன் கொண்ட விலைமனுதாரர்கள் விலைமனு வழங்குவதற்காக கருத்திற் கொள்ளப்படமாட்டாது.
09. எந்த ஒரு விலைமனுதாரரின் கள சோதனையில் பங்கேற்பு அல்லது விலைமனுவை தயாரிப்பதுடன் தொடர்புபட்ட செலவு அல்லது விலைமனுவை சமர்ப்பிப்பதற்கான வேறு ஏதேனும் செலவுகள் தொடர்பில் கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, தேசிய நிலக்கண்ணிவெடி செயற்பாட்டு நிலையம் அல்லது இலங்கை அரசாங்கம் எந்தப் பொறுப்பையும் ஏற்காது. கிடைக்கப்பெற்ற விலைமனுக்களில் பொருத்தமான விலைமனுவை ஏற்பது அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமை திட்டப் பெறுகைக் குழு (PPC) வசமானது.

**தலைவர்,**
**திட்டப் பெறுகைக் குழு,**
**கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு,**
**2ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்லை**
**திகதி - 2024.10.10**

# பெறுகை அறிவித்தல்

## கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபை

### பேராதனை வார சந்தை வளாகத்திற்கு அருகில் காணப்படும் "ஹெலபொஜன்ஹல"வை குத்தகைக்கு விடல்

கங்கவட்ட கோரளை பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க்காணும் அட்டவணைக்குள் காணப்படும் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கும் கேள்விதாரர்களுக்கு மீளளிக்கப்படாத ரூ.1000.00 தொகையை அம்பிட்டிய தலைமையகத்தின் காசாளரிடம் செலுத்தி நிபந்தனையுடனான விண்ணப்பங்களை 2024.10.14 முதல் 2024.11.04 பி.ப. 3.00 வரை சபையில் வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறாக சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் வாடகைக்குப் பெறுவதற்கு குறித்த இடத்தை குறிப்பிட்டு 2024.11.08 மு.ப.10.30 இற்கு முன்பு செயலாளர், கங்கவட்ட கோரளை பிரதேச சபை, அம்பிட்டிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டியதுடன் அவ்வாறு இல்லையெனில் அக் கேள்வி ஆவணங்களை இச் சபையில் அதன் சார்பாக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மீளளிக்கப்படும் ரூ. 3,000.00 வைப்புத் தொகையை அம்பிட்டிய தலைமையகத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.

2024.11.08 மு.ப. 10.30 இற்கு பிரதேச சபை, அம்பிட்டிய தலைமையகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

| தொடர் இலக்கம் | சொத்து பற்றிய விபரம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் | மாதாந்த குறைந்தபட்ச கேள்வி வாடகை |
|---|---|---|---|---|
| 01 | பேராதனை வாரச்சந்தை அருகில் ஹெலபொஜுன்ஹல (52x24 அடிக்குள் 7 கூடங்களைக் கொண்டுள்ளது) | ரூ. 3000.00 | ரூ. 1000.00 | ரூ. 35,000.00 |

தொலைபேசி இலக்கம் - 081 - 2241222

**செயலாளர்,**
**கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை**
**பிரதேச சபை**
**அம்பிட்டிய**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
## தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

### (தேசிய போட்டி ரீதியான விலைமனு)

### பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் ரிதியகம சபாரி பூங்கா அபிவிருத்தித் திட்டங்கள்

பின்வரும் நிர்மாணப் பணிகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியான விலைமனுக் கோரலின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவர் அழைக்கிறார்.

| விடய இல. | ஒப்பந்த இல. | விபரங்கள் | ஒரு தொகுதி விலைமனு ஆவணத்திற்கான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை முறித் தொகை (ரூபா) | ஆகக் குறைந்த CIDA/ ICTAD பதிவுத் தரம் மற்றும் துறை | விலை மனுக்கள் திறக்கப் படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | DNZG/A/07/40/24 | பின்னவல யானைகள் சரணாலயத்தில் உள்ள அலுவலகக் கட்டிடத்தின் தரைத் தளப் பிரதேசத்தின் மிகுதி வேலைகள் (மதிப்பீட்டுச் செலவு வெட் மற்றும் தற்செயலான செலவுகள் இன்றி 12.13 மில்லியன் ரூபா) | 4,000.00 | 157,800.00 | C6 மற்றும் C5 கட்டிட நிர்மாண வேலைகள் | 2024-10-30 மு.ப. 10.30 மணிக்கு |
| 02 | DNZG/A/07/41/24 | சபாரி பூங்காவின் சிறிய சபாரியில் வெளிநாட்டு பறவைகள் அடைப்பின் (Exotic Bird Enclosure) மிகுதி வேலைகள் (மதிப்பீட்டுச் செலவு வெட் மற்றும் தற்செயலான செலவுகள் இன்றி 64.5 மில்லியன் ரூபா) | 15,000.00 | 840,000.00 | C4 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாண வேலைகள் | 2024-10-30 பி.ப. 2.00 மணிக்கு |

மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள வேலைகளுக்கு எதிரில் தரப்பட்டுள்ள CIDA/ICTAD தரம் மற்றும் துறைக்கான பதிவைக் கொண்டுள்ளவைகள் மட்டுமே விலைக்கோருவதற்கு தகுதியானவர்களாவர்.

ஒவ்வொரு விலைமனு ஆவணத் தொகுதிக்கும் மேலே தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்தி 2024 ஒக்டோபர் 10ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 29ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சுய விருப்பத்தின் பேரில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

இலங்கை மத்திய வங்கியின் உரிமத்தைப் பெற்றுள்ள வர்த்தக வங்கியொன்றிலிருந்து அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து வேலை கொள்வோருக்கு பெற்றுக்கொண்ட மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை ரூபாவிலான விலைமனு பிணை முறி சகல விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் பின்வருமாறு இடம்பெறும்.

| விடய இல. | ஒப்பந்த இல. | விபரங்கள் | திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | DNZG/A/07/40/24 | பின்னவல யானைகள் சரணாலயத்தில் உள்ள அலுவலகக் கட்டிடத்தின் தரைத் தளப் பிரதேசத்தின் மிகுதி வேலைகள் (மதிப்பீட்டுச் செலவு வெட் மற்றும் தற்செயலான செலவுகள் இன்றி 12.13 மில்லியன் ரூபா) | 2024-10-22 | மு.ப. 10.30 மணி | பின்னவல யானைகள் சரணாலயம் |
| 02 | DNZG/A/07/41/24 | சபாரி பூங்காவின் சிறிய சபாரியில் வெளிநாட்டு பறவைகள் அடைப்பின் (Exotic Bird Enclosure) மிகுதி வேலைகள் (மதிப்பீட்டுச் செலவு வெட் மற்றும் தற்செயலான செலவுகள் இன்றி 64.5 மில்லியன் ரூபா) | 2024-10-24 | மு.ப. 10.00 மணி | ரிதியகம சபாரி பூங்கா |

மேலதிக விபரங்களுக்கு தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை 011-2896779, 011-2712807 தொலைபேசி மற்றும்: 011-2731851 தொலைநகல் மூலம் தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
**தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம்,**
**அனகாரிக்க தர்மபால மாவத்தை,**
**தெஹிவளை.**

# பெறுகை அறிவித்தல்

## தேசிய மனநல நிறுவனம் - அங்கொடை

### கட்டிட ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2024/2025

அங்கொடை தேசிய மனநல நிறுவனத்தின் சார்பாக பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் தேசிய மனநல சுகாதார நிறுவனத்தில் 2024/2025ம் ஆண்டுகளுக்காக கட்டிட ஒப்பந்தக்காரராக பதிவு செய்வதற்காக தகைமையுள்ள நிறுவனங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு குறித்த ஆங்கில மொழியில் தாயரிக்கப்பட்ட, விண்ணப்பங்களை, வாரத்தின் வேலை நாட்களில் மாத்திரம் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை 2024.10.10 முதல் 2024.11.01 வரை வைத்தியசாலை அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவிற்கு வருகை தந்து இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

02. அதனடிப்படையில் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் 2024.10.10 முதல் 2024.11.01 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் தலைவர் பிரதேச பெறுகைக் குழு, தேசிய மனநல நிறுவனத்தின் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல வேண்டுதலுடன் இவ்வைத்தியசாலையின் காசாளர் அலுவலகத்தில் மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை அலுவலகத்திற்கு சமர்ப்பித்த பின்னர் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | உருப்படி | தொடர் இல. | தகைமை | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | 2024/2025ஆம் ஆண்டிற்காக தேசிய மனநல நிறுவனம் மற்றும் அதனோடு இணைந்த முல்லேரியாவ இடைநிலை இல்லம்/முல்லேரியாவ தாதியர் கல்லூரி ஆகிய நிறுவனங்கள் சார்பாக பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் (ரூ. 500,000.00 இற்கு மேற்படாத ஒப்பந்தங்கள்) | NIMH/ADMIN/ GG/10/24 | கட்டிடம் மற்றும் அல்லது நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக்காக C09 அல்லது அதற்கு மேல் மின் மற்றும் இயந்திர சேவைக்காக EM5 அல்லது அதற்கு மேல் | ரூ. 1000.00 |

03. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் இடப்பட்டு பொறியிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த வேலையின் பெயரைக் குறிப்பிட்டு 2024.11.01 பி.ப. 14.00 இற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடமுடியும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் அன்றே பி.ப. 14.00 இற்கு இடம்பெறுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

04. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

05. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் தொ.பே. 0112578245 (வைத்தியசாலை செயலாளர்)

**பணிப்பாளர்,**
**தேசிய மனநல நிறுவனம்,**
**முல்லேரியாவ புதிய நகரம்**

## நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

## அபிவிருத்தி லொத்தர் சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### சுப்பிரி தன சம்பத சீட்டிழுப்பு டிக்கெட்டுகளின் வடிவமைப்பு, மேம்பாடு, அச்சு மற்றும் வழங்கல்

விலைமனு இல. - **DLB/PRO/2024/29**

ஏழு (7) மாத காலத்திற்காக சுப்பிரி தன சம்பத சீட்டிழுப்பு டிக்கெட்டுகளின் வடிவமைப்பு, மேம்பாடு, அச்சு மற்றும் வழங்கலுக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய உள்ளூர் விலைமனுதாரர்களிடம் இருந்து அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவினால் (DPC) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

3. விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றை 2024.10.10 ஆம் திகதி தொடக்கம் 2024.10.30 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 இற்கு இடையே கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும். அதேபோன்று இதனை அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்தில் (www.dlb.lk) பார்க்க முடியும்.

4. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 12,500.00 ரூபாவை (வரிகளுடன்) ரொக்கப்பணத்தில் செலுத்தி 2024.10.10 ஆம் திகதி தொடக்கம் 2024.10.30 ஆம் திகதி வரை (பொது விடுமுறைகள் தவிர்த்து) திங்கள் தொடக்கம் வெள்ளி வரை மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 3.00இற்கு இடையே கொழும்பு 2, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356, அபிவிருத்தி லொத்தர் சபைக்கு வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாள் ஒன்றில் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் இருந்து விலைமனு ஆவணங்களை வாங்க முடியும்.

5. அனைத்து விலைமனுக்களும் கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356 இல் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு வங்கி உத்தரவாதம் அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து அளிக்கப்பட்ட 180 நாட்களுக்கான BDS இன் ITB 20.2 இல் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு விலைமனு பிணை தொகை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

6. அனைத்து விலைமனுதாரர்களும் குறிப்பிட்ட விலைமனுவுக்காக "1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு" அமைய ஒப்பந்த பதிவு சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356 இல் அபிவிருத்தி லொத்தர் சபையில் 2024.10.22 ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு இடம்பெறும்.

8. விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணத்தில் உள்ள தேவைகளின்படி அனைத்து விரிவான தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.

9. இரு பிரதிகளிலான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.11.01 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் "தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (DPC), அவதானத்திற்கு, அபிவிருத்தி லொத்தர் சபை, இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 2" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் இந்த நோக்கத்திற்காக பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பு பெட்டியில் இடுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுப்பிரி தன சம்பத சீட்டிழுப்பு டிக்கெட்டுகளின் வடிவமைப்பு, மேம்பாடு, அச்சு மற்றும் வழங்கலுக்கான விலைமனு" என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனு பெயர் மற்றும் விலைமனு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

10. விலைமனு 2024.11.01 ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு மூடப்படுவதோடு மேலதிக அறிவித்தல் இன்றி மேலுள்ள முகவரியில் மூடப்படும் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் முறையான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு பங்கேற்க கோரப்படுகிறது. தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது நிராகரிக்கப்படும்.

11. எந்தக் காரணமும் கூறாது எந்த ஒரு அல்லது அனைத்து கூறுவிலைகளையும் அல்லது அதன் எந்த ஒரு பகுதியையும் ஏற்பது அல்லது நிராகரிப்பது அல்லது பெறுகை வழிகாட்டலின்படி மேலதிக விபரங்களுக்காக அழைப்பு விடுக்கும் ஏக உரிமை திணைக்கள பெறுகைக் குழு (DPC) வசமானது.

12. தேவையெனில் மேலதிக விபரங்களை, கொழும்பு 02, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, இல. 356 இல் அபிவிருத்தி லொத்தர் சபையின் உதவி பொது முகாமையாளர் (பெறுகை) இடமிருந்து ITB 07 இல் குறிப்பிடப்பட்ட காலத்தில் பெற முடியும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 2.**
**தொ.: 011 4824824**
**www.dlb.lk**
**2024.10.10**

DEVELOPMENT LOTTERIES



Looking for Your Life Partner..,
Gather with,
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

Pay online and save your precious time
WE ACCEPT
BANK OF CEYLON Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

## பெறுகை அறிவித்தல்

### புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு - ஊடகத்துறை பிரிவு

### சுத்திகரிப்புச் சேவை – 2025

2025ஆம் வருடத்திற்கான சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு அழைக்கின்றது.

02. அமைச்சினால் வழங்கப்படும் ஆவணங்களில் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தத் துறையில் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவத்தைக் கொண்ட நிறுவனங்களுக்கு விலைமனுக்கள் வழங்கப்படும். பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா கட்டணத்தை அமைச்சின் காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கணக்குப் பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. 2024-11-01ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

04. முறையாகப் பூர்த்தி செய்த விலைமனுக்களை 2024-11-04ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதான கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு,**
**சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு - ஊடகத்துறை பிரிவு,**
**அசிதிசி மெதுர, இல. 163,**
**கிருலப்பனை அவன்யூ, பொல்ஹேன்கொட,**
**கொழும்பு** 05.

05. விலைக்கோரல்கள் 2024-11-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன்பின் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

06. தேவையானால், இந்த அமைச்சின் கணக்குப் பிரிவில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

07. மேலதிக தகவல்களுக்கு, தயவு செய்து 011-2513464 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பிரதம கணக்காளரைத் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு,**
**சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு - ஊடகத்துறை பிரிவு.**

The Housewives' companion
Classifieds on
Daily News

The largest
Job Market
in Sri Lanka
www.observerjobs.lk




Widest reach for your
employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information
0777270012 / 0112429314




## கல்வி அமைச்சு
## ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி

### 2025ம் ஆண்டுக்கான தனியார் பாதுகாப்பு சேவையை பெறுவதற்கான விலைமனுகோரல்

**ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2025ம் ஆண்டுக்கான தனியார் பாதுகாப்பு சேவையை பெறுவதற்கான முத்திரை குறி பொறிக்கப்பட்ட விலைமனு கோரல்.**

01. விலைமனு ஆவணம் 2000ரூபா திருப்பி செலுத்தப்படாத வைப்பை செலுத்திய பிறகு அலுவலக நேரத்தில் கல்லூரியின் பதிவாளரிடம் பெற்றுக் கொள்ளலாம். 20/11/2024 பி.ப 2.00 மணிக்குள் பெற்றுக் கொள்ளவும்.
(இப்பணம் திருப்பி பெற முடியாது என்பதை கருத்தில் கொள்ளவும்)

02. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுவை 22/11/2024 மு.ப 10.00 மணிக்கு முன் நேரடியாகவே அல்லது இத்தினத்திற்கு முன் கிடைக்க கூடிய வகையில் மேல் குறித்த கல்லூரியின் முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பவும்.

03. விலைமனுக்களின் இரண்டு பிரதிகளை ஒப்படைக்க வேண்டும். இரண்டையும் தனித்தனியே கடித உறையில் இட்டு ஒன்றின் மேல் பக்க மூலையில் **"மூலப்பிரதி"** என்றும், மற்றைய உறையில் **"பிரதி"** என்றும் குறிப்பிட்டு, இவ்விரண்டு உறைகளையும் ஒரே கடித உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் **"ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கான பாதுகாப்பு சேவை வழங்குதல் 2025"** என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

04. விலைமனுக்கள் அன்று 22/11/2024 மு.ப 10.00 மணியளவில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ளலாம். காலதாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்து திருப்பி அளிக்கப்படும்.

05. கல்லூரியின் பெறுகை குழுவின் தீர்மானமே இறுதியானது.

**அலுவலர்களின் விபரம்**

1. பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் - 01
2. உதவி பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - 04
3. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - 12
4. பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - 03

**தலைவர்,**
**பெறுகை குழு,**
**ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி,**
**பத்தனை.**

## மதுராவல பிரதேச சபை

### 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

01. 2025ஆம் வருடத்தினுள் இந்த சபைக்கு தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காகப் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் தகுதியுடைய வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இந்த விண்ணப்பங்களை 2024-10-30ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரை ''செயலாளர், மதுராவல பிரதேச சபை, அங்குருவாதொட்ட'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

03. சகல விண்ணப்பப்பத்திரங்களுடனும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பதிவுக் கட்டணத்தை காசோலை மூலமாகவானால் 'செயலாளர், மதுராவல பிரதேச சபை' என்றும் காசுக்கட்டளை மூலமானால் செலுத்தப்படும் (அஞ்சல்) அலுவலகம் **'அங்குருவாதொட்ட'** எனும் பெயரில் அனுப்புதல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

❖ வியாபாரமாக அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (வியாபாரப் பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
❖ வெட் (VAT) வரிக்காக பதிவு செய்யப்பட்டிருந்தால் வெட் சான்றிதழின் உறுதி செய்த நகல் பிரதி அண்மையில் பெற்றுக்கொண்ட வெட் வரி தீர்வுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
❖ வாகன பராமரிப்பு சேவை மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்யப்படும்போது குறித்த பொறியியல் பரிந்துரைகளின் பிரகாரம் இடம்பெறும்.
❖ பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாகவும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
❖ பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உரிய வகையில் வழங்குநர்களைத் தெரிவு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
❖ அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் உரிய வகையில் விலைமனுக்களைச் சமர்ப்பித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைகள் மற்றும் தரத்துக்கு அமைவாக பொருட்களை வழங்கத் தவறுகின்ற விண்ணப்பதாரர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.
❖ எங்களால் அறிவிக்கப்படும் இடத்திற்கு உங்களால் பொருட்கள் வழங்கப்படுதல் வேண்டும்.
❖ விண்ணப்பப் படிவங்களை எமது madurawalaps@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு வேண்டுகோள் ஒன்றைச் செய்து அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.

**வழங்கல் மற்றும் சேவை தேவைப்பாடுகள்**

01. அச்சிடப்பட்ட காகிதாதிகள், காகிதாதிகள், நூலக புத்தகங்கள்.
02. சீருடைக்குத் தேவையான துணிகள்
03. சுகாதாரத் துறைக்குத் தேவையான அனைத்து துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள்
04. கைத்தொழில் மற்றும் நிர்மாணப் பிரிவுகளுக்கு தேவையான அனைத்து வகையான நிர்மாணப் பொருட்கள், நீர்க்குழாய் உபகரணங்கள், இரும்பு, கருங்கல், சீமெந்து, மணல், கூரைத் தகடு வகைகள், கொங்கிறீட் கல் வகைகள், மரப்பலகைகள், ஜியோ டெக்ஸ்டைல், கோலாஸ் போன்றன வழங்குதல். (கருங்கல், மணல், மரப்பலகை வகைகளுக்கு அனுமதிப் பத்திரம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.)
05. வாகன டயர், டியூப், பெட்டறிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்.
06. தட்டச்சுப்பொறி, ரோணியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம், டுப்ளோ இயந்திரம், கணனிகள் ஆகியன மற்றும் அவைகளின் துணைப்பாகங்களை வழங்குதல்
07. அனைத்து வகையான பதாகைகள், பெயர் பலகைகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் தயாரித்தல்.
08. ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள், சீமெந்துக் கல் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள்
09. விளையாட்டுப் பொருட்கள், முன்பள்ளி உபகரணங்கள், சிறுவர் பூங்கா உபகரணங்கள்
10. வீதி விளக்குகளுக்குத் (LED மின்குமிழ்கள் உட்பட) தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் மின் உபகரணங்கள்
11. நிறப் பூச்சு பொருட்கள் (நிறப்பூச்சு வகை, வானிஷ், தூரிகை போன்றன)
12. தகனச்சாலைக்கான எரிவாயு
13. நெஸ்கபே மா மற்றும் 150m நெஸ்கபே கோப்பைகள்
14. அலுவலக உபகரணங்கள், மரத் தளபாடங்கள், உருக்குத் தளபாடங்கள்
15. ஒலிபெருக்கி உபகரணங்கள்
16. சுகாதார பாதுகாப்பு இரசாயன பொருட்கள் (இழையான் கொல்லி செசகோன்)

**சேவைகள்**

01. அச்சிடும் சேவைகள்
02. இயந்திராதிகள் மற்றும் உபகரண திருத்தவேலைகள்
03. புல் வெட்டும் இயந்திரம், சிறிய உபகரணங்களின் திருத்தவேலைகள்
04. வாகன திருத்தவேலைகள் செய்யும் சேவை நிலையங்கள்
05. வாகன திருத்தவேலைகள் (விசேடமாக முச்சக்கர வண்டிகள்) (அதிகாரப் பிரதேசத்தினுள் அல்லது அதற்கு அண்மையில் இருத்தல் வேண்டும்)
06. ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், டுப்ளோ இயந்திரம், கணனிகள் ஆகியவைக்கான சேவை நடவடிக்கை, திருத்தவேலைகள் மற்றும் துணைப்பாகங்கள்
07. டயர்களை மீள நிரப்புதல்
08. வளிச்சீராக்கி உபகரணங்களின் திருத்தவேலைகள்
09. விவசாயம் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்களின் திருத்தவேலைகள்
10. உற்சவங்களுக்குத் தேவையான கூடாரங்கள், ஒலிபெருக்கிச் சாதனங்கள், மின் ஒளி மற்றும் ஏனைய உற்சவப் பொருட்கள்
11. தீயணைப்பு உபகரணங்களைப் பராமரித்தல்
12. காணி அளத்தல் வேலைகள்
13. பட்டறையாளர்கள்
14. நிறப்பூச்சு பூசுபவர்கள்
15. மரம் வெட்டுபவர்கள்
16. மேசன், தச்சு, உருக்கியொட்டுபவர்கள்

**ஒப்பந்தக்காரர்கள்**

❖ நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) நிறுவனத்தில் C9 பிரிவின் கீழ் வீதி மற்றும் நிர்மாண விடயங்களுடன் தொடர்புடைய பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்பத்திரத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
❖ மேற்படி நிறுவனத்தின் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழின் பிரதி.

**பீ. அனுலா பிரசங்கிகா,**
**செயலாளர் மற்றும் அதிகாரம் வாய்ந்த வேலைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**மதுராவல பிரதேச சபை.**

### 2015 இல.05 தேசிய ஔடத ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 131ம் பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்


## இலங்கை மக்களிடம் மன்னிப்புக்கோரல்

நெதுக, தெமட்டபிட்டிய வலஸ்கலவில் வசிக்கும் ஹேவா பத்தினிகே லலித் கிரிசாந்த ஆகிய நான், பெலிஅத்த வீதி, வலஸ்கல திக்வெல்ல என்ற முகவரியில் வசிக்கும் டெசான் பார்மசி என்ற மருந்தகத்தின் உரிமையாளராவேன்.


மேற்படி மருந்தகத்தில், பதிவுசெய்த மருத்துவரின் மருத்துவ சிட்டை இன்றி மருந்துகளை சில்லறை விலையில் விற்பனை செய்த வழக்கு இல. 19548இன் கீழ் தொடரப்பட்ட வழக்கில் நான் குற்றவாளியாக்கப்பட்டேன் எனவும், மாத்தறை மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் ரூ. 50,000/= தண்டம் விதிக்கப்பட்டதாகவும் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

இக் குற்றம் என்னால் மீண்டும் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவித்து மேற்கொண்ட குற்றம் சம்பந்தமாக இலங்கை வாழ் மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன்.

### சிறு விளம்பரம்



மோட்டார் வாகனங்கள்



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

QQ-6089 BAJAJ - 2008, THREE WHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210810/ 0705999163. 068958

### பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

## தென்னை பயிர்ச்செய்கை சபை

### சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான கேள்விகோரல் – 2024/2025

**பெறுகை இல :** E/7/G/P/U/CLEANING SERVICE 2024

01. தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் தலைமையகத்தின் சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவை விடயங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரல் (NCB) இன் மூலம் மேற்கொள்ளப்படும்.

03. விண்ணப்பதாரிகளால் கீழ்க்காணும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. விண்ணப்பதாரிகளால் சமர்ப்பிக்கப்படும் வருடாந்த கேள்விப் பெறுமதியொன்று இரு மடங்குகளாக வருடாந்த வருமானத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரிகள் சுத்திகரிப்புத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட 05 வருட சேவை அனுபவத்துடன் இருப்பதுடன், கிட்டிய 05 வருடத்தில் அனுபவ ஆவணங்கள் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

III. சேவை அனுபவத்துடன் 04 ஊழியர்கள் (55 வயதிற்கு மேற்படாத செயற்பாடுள்ள மற்றும் ஆரோக்கியமான) நாளாந்த சேவையில் ஈடுபட வேண்டியதுடன் அத்தரப்பினருக்கிடையில் குறைந்தபட்ச ஒரு ஆண் ஊழியர், பெண் ஊழியர் இருத்தல் வேண்டும். சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் 04 பேரில் ஒருவர், சாதாரண கடமைகளுக்கு மேலதிகமாக வேலை பரிசீலனை (Working Supervisor) ஆகவும் கடமையாற்றல் வேண்டும்.

IV. வாரத்திற்கு ஒருமுறை வேலை மதிப்பீட்டாளர் ஒருவர் வருகை தந்து சுத்திகரிப்புச் சேவையாளர்களின் வேலைகளைப் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.

04. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடைய கேள்விதாரருக்கு தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் வழங்கல் அதிகாரி மூலம் மேலதிக தகவல்களை : 011-2193457, தொ.பே இலக்கம் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், கீழே காணப்படும் முகவரியில் 2024.10.11 முதல் 2024.10.28 வரை, வார நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை) எழுத்துமூல வேண்டுதலை மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத ரூ. 3000/= தொகையை பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, இல 9/428 இல் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைமையகத்தின் காசாளருக்கு செலுத்திய பின்னர் கேள்வி ஆவணத்தொகுதி-02 ஐ பெற்றுக்கொள்ளலாம்.

05. சகல கேள்வியுடன் கேள்வியில் வருடாந்த பெறுமதியில் 1% பெறுமதிக்கு குறையாத 90 நாள் காலத்திற்கு செல்லுபடியாகும் "பொது முகாமையாளர் தென்னைப் பயிர்ச்செய்கை சபை" பெயரில் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட எந்த வர்த்தக வங்கியிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையற்ற கேள்வி பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணத்தொகுதிகள்-02 (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு) வேறுவேறு கடித உறைகளில் இட்டு, பின்னர் இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு, அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுத்திகரிப்பு, துப்புரவேற்பாட்டு சேவை வழங்குதல் - 2024/2025 இற்கான விலைமனுக்கள்" என்று தெளிவாக குறிப்பிட்டு, பொறியிட்டு 2024.10.29 பி.ப 2.30 இற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு, பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கொண்டுவந்து இவ் அலுவலகத்தின் தரைமாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் உள்ளிடல் வேண்டும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

07. 2024.10.29 பி.ப 2.30 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தென்னைப் பயிர்ச்செய்கை சபை,**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**பத்தரமுல்ல**

**தொ.பே.இல.: 0112193457, பெக்ஸ்.: 0112884332**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### பரீட்சைகள் திணைக்களம்

### விடை புத்தகங்களை வழங்குவதற்கான பெறுகை – 2024
### Contract No.: 4/3/13/2024

01. விடை புத்தகங்களை வழங்கல் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
02. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இலங்கையில் நிகரான ஒப்படைப்புக்களை வழங்குவதில் மூன்று வருட அனுபவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.
04. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவிற்கமைவாக பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
05. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை பரீட்சைகள் திணைக்கள 3 ஆம் மாடியின் வழங்கல் பிரிவிற்கான உதவி ஆணையாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி/ தொலைநகல்: 022-2785219) 2024.10.29 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
06. ஒவ்வொரு ஆவணத்திற்கும் 13,900 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, பெலவத்த, இலங்கை பரீட்சைகள் திணைக்கள பரீட்சைகளுக்கான ஆணையாளர் நாயகத்திற்கு 2024.10.10 ஆம் திகதியிலிருந்து 2024.10.29 ஆம் திகதியன்று மு.ப.9.00 முதல் பி.ப.03.00 வரையும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்)
07. விலைமனுவானது அதனை திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு (2025.01.30) ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
08. ஐந்து இலட்சத்து தொண்ணூற்றி இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவிற்கான இலங்கை ரூபாவிலமைந்ததும் (592,500 இ.ரூபா) இலங்கையில் செயற்படும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்ட நிபந்தனையற்றதும் விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டதும் விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2025.03.02 ஆம் திகதி வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமானதொரு விலைமனுப் பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
09. விலைமனுக்கள் 2024.10.30 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்கள, 3 ஆம் மாடியின் வழங்கல் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்களை மூடிய பின்னர் மேலேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் (ஒரு தபாலுறையில் இரு பிரதிகள்) **"Supply of Answer Books – Contract No.: 4/3/13/2024"** என தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் அடையாளம் குறிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
11. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எவ்வித கடப்பாட்டையும் சுமத்தாமல் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு திணைக்கள பெறுகைக் குழுவின் செயற்பாட்டை அறிவிக்காமல் இருப்பதற்கான எவ்வித கடப்பாட்டையும் காரணத்தையும் திணைக்கள பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

**தலைவர்,**
**மேல்மட்ட பெறுகைக் குழு,**
**இலங்கை பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2024.10.10**

# மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இலங்கை டி20 குழாம் அறிவிப்பு



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடருக்கு 17 பேர் கொண்ட இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சரித் அசலங்க தலைமையிலான இலங்கைக் குழாத்தில் முன்னாள் அணித்தலைவர் தசுன் ஷானக்க நீக்கப்பட்டிருப்பதோடு பானுக்க ஒன்றரை ஆண்டுக்குப் பின்னர் அணிக்குத் திரும்பியுள்ளார். அதேபோன்று அனுபவ வீரர் குசல் ஜனித் பெரேராவும் அணியில் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் மேற்கிந்திய தீவுகள் அணி மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 மற்றும் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர்களில் ஆடவுள்ளது. இதில் இரு அணிகளுக்கும் இடையிலான டி20 தொடர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பல்லேகலவில் ஆரம்பமாகும்.

இதற்காக இலங்கை தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்ட இலங்கைக் குழாத்திற்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக இருக்கும் ஹரினி அமரசூரிய ஒப்புதல் அளித்துள்ளார்.

இலங்கை குழாம்: சரித் அசலங்க (தலைவர்), பத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், குசல் ஜனித் பெரேரா, கமிந்து மெண்டிஸ், தினேஷ் சந்திமால், அவிஷ்க பெர்னாண்டோ, பானுக்க ராஜபக்ஷ, வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன, துனித் வெள்ளாலகே, ஜப்ரி வன்டர்சே, சமிந்து விக்ரமசிங்க, நுவன் துஷார, மதீஷ பதிரண, பினுர பெர்னாண்டோ, அசித்த பெர்னாண்டோ.

# நெஸ்ட்லே நெஸ்டமோல்ட்



நெஸ்ட்லே நெஸ்டமோல்ட் அனுசரணையில் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியின் மரதன் போட்டி தம்புள்ளையில் கடந்த சனிக்கிழமை (05) வெற்றிகரமாக நிறைவடைந்தது.

இதில் ஐந்து கிலோமீற்றர் தூரம் கொண்ட பெண்களுக்கான மரதன் போட்டியில் கோட்டே, ஆனந்த ஷாஸ்த்ராலயா வித்தியாலயத்தின் தருஷி ஓதரா முதலிடத்தை வென்றதோடு, வெலிமடை, வங்கியகும்புர தேசிய பாடசாலையின் தரூஷி நவோத்யா இரண்டாவது இடத்தையும் வலகெதர மகா வித்தியாலயத்தின் யு.டி.எம். மானேல் மூன்றாம் இடத்தையும் வென்றனர்.




# இலங்கை கால்பந்து அணி மியன்மாருடன் பலப்பரீட்சை



மியன்மாருக்கு எதிராக இன்று (10) ஆரம்பமாகும் இரு நட்புறவு கால்பந்து போட்டிகளில் சுஜான் பெரேரா தலைமையிலான இலங்கை அணி களமிறங்கவுள்ளது.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பிஃபா) நட்புறவு சர்வதேச போட்டிகளின் கீழ் நடைபெறும் இந்தத் தொடர் மியன்மாரின், யங்கோனில் இடம்பெறவுள்ளது.

இதன் முதல் போட்டி இன்று (10) நடைபெறவுள்ளதோடு இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறும்.

மியன்மார் அணி பிஃபா தரவரிசையில் 167 ஆவது இடத்தில் இருப்பதோடு இலங்கை அணி 200 ஆவது இடத்தில் உள்ளது.

எனினும் இலங்கை அணி அண்மைக் காலத்தில் சர்வதேச கால்பந்து போட்டிகளில் சோபித்து வருகின்ற நிலையிலேயே மியன்மாரை எதிர்கொள்ளவுள்ளது.

# ரிட்ஸ்பரி சேர் ஜோன் டாபர்ட்: வத்தளை லைசியம் ஆதிக்கம்




92ஆவது ரிட்ஸ்பரி சேர் ஜோன் டாபர்ட் சிரேஷ்ட தடகள சம்பியன்ஷிப் போட்டியில் ஆண்கள் பிரிவில், வென்னப்புவ, சென். ஜோசப்ஸ் வாஸ் கல்லூரியும் பெண்கள் பிரிவில் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலையும் வெற்றியீட்டின.

கடந்த வாரம் நடந்த இந்தப் போட்டியில் இலங்கையின் பல்வேறு பாடசாலைகளின் 5000க்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் பங்கேற்றிருந்தனர். தனிநபர் பிரிவுகளில் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலையின் பி.ஆர்.ஏ. திலினி நெத்சலா ராஜபக்ச, ஆண்டின் சிறந்த வீராங்கனையாகவும், அதே பாடசாலையின் சந்துன் கோஷல சிறந்த வீரராகவும் தெரிவாகினர்.

# நெதன்யாகுவின் எச்சரிக்கையை அடுத்து ஹிஸ்புல்லா தாக்குதல்



இஸ்ரேல் மீது நேற்று ரொக்கெட் தாக்குதல்களை நடத்திய ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலிய துருப்புகளின் ஊடுருவலை முறியடித்ததாகவும் தெரிவித்துள்ளது. காசாவின் அழிவை லெபனானும் சந்திக்கக் கூடும் என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்த நிலையிலேயே ஹிஸ்புல்லா தாக்குதல்களை நடத்தியுள்ளது.

எல்லைப் பகுதிகளில் இஸ்ரேலின் ஊடுருவல் முயற்சிகளை ரொக்கெட் குண்டுகள் மற்றும் தரைவழி மோதல்களில் ஈடுபட்டு முறியடித்ததாக ஹிஸ்புல்லா தெரிவித்தது.

லெபனானில் இருந்து வந்த இரு ரொக்கெட்டு குண்டுகளை இடைமறித்தாக இஸ்ரேல் குறிப்பிட்டதோடு ஹைபாவின் தெற்கே செசரியா பகுதியில் சைரன் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டது.

இந்நிலையில் லெபனான் மக்களுக்கு வீடியோ மூலம் பேசிய பெஞ்சமின் நெதன்யாகு காசா போன்ற அழிவை லெபனான் சந்திக்கக் கூடும் என்றும் ஹிஸ்புல்லா அமைப்பு பல்லாண்டுகளில் இல்லாத அளவுக்கு பலவீனம் அடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

'காசாவில் நாம் பார்ப்பது போல் அழிவுக்கும் துன்பத்திற்கும் வழிவகுக்கும் ஒரு நீண்ட போரின் படுகுழியில் விழுவதற்கு முன்பு லெபனானைக் காப்பாற்ற உங்களுக்கு ஒரு வாய்ப்பு உள்ளது' என்று லெபனான் மக்களை அவர் எச்சரித்திருந்தார்.

லெபனானில் இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அங்கு கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 2,119 ஆக அதிகரித்திருப்பதோடு 10,019க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் உயிரிழப்பு 42,000ஐ தாண்டியது: வடக்கில் 5ஆவது நாளாக கடும் தாக்குதல்

வடக்கு காசாவில் இஸ்ரேல் இராணுவம் வான் மற்றும் தரைவழி தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக இடம்பெறும் இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 42,000ஐ தாண்டியுள்ளது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 45 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 130 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்மூலம் கடந்த 2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 42,010 ஆக உயர்ந்திருப்பதோடு மேலும் 97,720 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் வடக்கு காசாவை கைப்பற்றும் முயற்சியாக இஸ்ரேல் அங்கு கடும் தாக்குதல்களை நடத்துவதாக தெரிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

'திட்டமிடப்பட்டவாறு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டால், காசாவின் பெரும் பகுதியை இஸ்ரேல் இராணுவத்தால் கட்டுப்படுத்த முடியுமாக இருக்கும்' என்று இஸ்ரேலிய இராணுவத் தரப்பை மேற்கோள்காட்டி அந்த செய்தி குறிப்பிட்டுள்ளது.



குறிப்பாக வடக்கு காசாவின் ஜபலிய அகதி முகாமில் இஸ்ரேல் இராணுவம் ஐந்தாவது நாளாக நேற்று தனது படை நடவடிக்கையை முன்னெடுத்தது. அங்கிருந்து ஹமாஸ் போராளிகள் தாக்குதல் நடத்துவது மற்றும் ஒருங்கிணைவதை தடுக்கும் வகையில் இந்தப் படை நடவடிக்கை முன்னெடுக்கப்படுவாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

ஜபலியா மற்றும் அதற்கு அருகாமையில் உள்ள பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் இராணுவம் அடிக்கடி உத்தரவுகளை பிறப்பித்தபோதும், காசாவில் வெளியேறிச் செல்வதற்கு பாதுகாப்பான இடம் எதுவும் இல்லை என்று பலஸ்தீனர்கள் மற்றும் ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இந்நிலையில் ஜபலியா மற்றும் வடக்கு காசாவின் மற்ற பகுதியில் பலரும் கொல்லப்பட்டிருப்பதாக அஞ்சுவதாகவும் ஆனால் இஸ்ரேலின் குண்டு வீச்சுகளுக்கு மத்தியில் அங்கு செல்ல முடியாத நிலை இருப்பதாகவும் பலஸ்தீன சிவில் அவசர சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.


'இந்தப் பகுதியில் குறைந்தது 400,000 பேர் சிக்கியுள்ளனர்' என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசரினி, எக்ஸ் சமூகதளத்தில் நேற்று (09) பதிவிட்டுள்ளார்.

'இஸ்ரேலிய நிர்வாகத்தின் அண்மைய வெளியேற்ற உத்தரவுகளால் குறிப்பாக ஜபலியா முகாமில் இருந்து மக்கள் மீண்டும், மீண்டும் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். காசாவில் எந்த இடமும் பாதுகாப்பு இல்லை என்பது தெரிந்ததால் பலரும் வெளியேறுவதை மறுத்து வருகின்றனர்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரேலின் புதிய உக்கிர தாக்குதல்கள் காரணமாக ஐ.நாவின் சில முகாம்கள் மற்றும் சேவைகள் வலுக்கட்டாயமாக மூடப்பட்டிருப்பதாகவும் லசரினி தெரிவித்துள்ளார்.

இதேவேளை காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்பின் தூதுக் குழுவுக்கும் மேற்குக் கரையில் ஆட்சியில் உள்ள ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் பத்தா அமைப்புக்கும் இடையில் ஐக்கியத்திற்கான பேச்சுவார்த்தை ஒன்று நேற்று எகிப்து தலைநகர் கெய்ரோவில் இடம்பெற்றுள்ளது.

# சிரிய தலைநகரில் இஸ்ரேல் வான் தாக்குதல்: எழுவர் பலி



சிரிய தலைநகர் டமஸ்கஸில் இஸ்ரேல் நேற்று முன்தினம் (08) நடத்திய வான் தாக்குதலில் ஏழு சிவிலியன்கள் கொல்லப்பட்டதாக சிரிய அரசு குறிப்பிட்டுள்ளது. ஈரான் புரட்சிக் காவல் படை மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லாவினால் பயன்படுத்தப்படும் கட்டடம் ஒன்றே தாக்கப்பட்டிருப்பதாக போர் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தலைநகரின் மஸ்ஸா பகுதியில் உள்ள குடியிருப்பு மற்றும் வர்த்தகக் கட்டடம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் அடங்குவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

'இஸ்ரேல் இலக்கு வைத்த கட்டடம் மூத்த புரட்சிக் காவலர்கள் மற்றும் ஹிஸ்புல்லா செயற்பாட்டாளர்கள் அடிக்கடி பயன்படுத்துவதோடு கட்டடத்திற்கு முன்னால் கார் தரிப்பிடம் ஒன்றும் உள்ளது' என்று பிரிட்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

# தெற்கிற்கான பாதைகளை துண்டித்தது வட கொரியா



தென் கொரியாவுக்குச் செல்லும் வீதிகள் மற்றும் ரயில் பாதைகளை நிரந்தமாக மூடுவதாக வட கொரியா அறிவித்துள்ளது. இது இரு நாடுகளையும் முழுமையாக பிரிப்பதாக உள்ளது.

தெற்குடனான எல்லையை முடக்கி நிரந்தமாக மூடுவதாகவும் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதாகவும் வட கொரிய இராணுவம் நேற்று அறிவித்தது. போரைத் தடுப்பதற்கான தற்காப்பு நடவடிக்கையாக இது இருப்பதாக குறிப்பிட்டிருக்கும் வட கொரிய இராணுவம், தென் கொரியாவில் இடம்பெறும் போர் ஒத்திகைகள் மற்றும் பிராந்தியத்தில் அமெரிக்காவின் அணு சொத்துகள் நிலைநிறுத்தப்படுவதற்கு பதில் நடவடிக்கையாக இது உள்ளது என்றும் தெரிவித்தது.

இரு கொரியாக்களுக்கும் இடையிலான பதற்றம் உச்சம் பெற்றிருக்கும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'கொரிய தீபகற்பத்தில் நிலவும் கடுமையான இராணுவ சூழலுக்கு மத்தியில் மிக நம்பகமான பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புக்காக கொரிய ஜனநாயக மக்கள் குடியரசின் (வட கொரியா) இராணுவம் அதிக தீர்க்கமான மற்றும் வலுவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது' என்று வட கொரிய இராணுவம் நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் வட கொரியாவில் இருந்து தென் கொரியாவுக்கான வீதிகள் மற்றும் ரயில் பாதைகள் மிக அரிதாகவே பயன்படுத்தப்படும் நிலையில் இந்த அறிவிப்பு ஓர் அடையாளமாக மாத்திரமே பார்க்கப்படுகிறது.

# பிலிப்பைன்ஸ் விமானத்திற்கு எதிராக லேசர் தாக்குதல்



மேற்கு பிலிப்பைன்ஸ் கடற்பரப்பில் கடல்சார் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பணியகத்தின் விமானம் மீது அதிதீவிர லேசர் ஒளி பாய்ச்சப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சீனக்கடற்படையின் ஏவுகணைப் படகு குறித்த விமானத்தின் மீது மூன்று தடவைகள் இத்தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளபணியகம்,இத்தாக்குதலின் போது விமானத்தில் இருந்த பிலிப்பைன்ஸ் விமானிகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. இதன்போது ஐந்து நிமிட இடைவெளியில் மூன்று தடவைகள் அதி தீவிர லேசர் ஒளி பாய்ச்சப்பட்டுள்ளது. அதன் விளைவாக விமானிகளின் கண்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புரத ஆராய்ச்சிக்காக இரசாயனவியல் நோபல்



இரசாயனவியலுக்கான நோபல் பரிசு, அமெரிக்காவின் டேவிட் பேக்கர், இங்கிலாந்தின் டெமிஸ் ஹசாபிஸ் மற்றும் ஜோன் ஜம்பர் ஆகிய மூன்று விஞ்ஞானிகளுக்கு 'புரத ஆராய்ச்சி'க்கான பணிக்கு வழங்கப்பட்டுள்ளது.இரசாயனவியலுக்கான நோபல் பரிசு நேற்று (9) ரோயல் ஸ்வீடிஷ் அகடமி ஒப் சயன்ஸ் சார்பில் அறிவிக்கப்பட்டது. புரதம் சார்ந்த ஆராய்ச்சிக்காக இம்மூவருக்கும் விருது வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்படி 'கணக்கீட்டு புரத வடிவமைப்பிற்காக' டேவிட் பேக்கருக்கு நோபல் பரிசின் ஒரு பாதியும், 'புரத கட்டமைப்பு குறித்த கண்காணிப்பு ஆராய்ச்சிக்காக' டெமிஸ் ஹசாபிஸ், ஜோன் ஜம்பர் ஆகிய இருவருக்கும் மீதி பாதியும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 10ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.